விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 15 ஞாயிற்றுக்கிழமை (29.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 192

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# மனித உரிமை விடயங்களில் இலங்கை பின்நகர்வு



## சமந்தா பவர் குற்றச்சாட்டு

**(நியூயோர்க்) மனிதவுரிமைகள் விவகாரங்களில் இலங்கை பின்நோக்கிச் சென்றுவிட்டதாக ஐ.நாவுக்கான அமெரிக்கா வின் தூதுவர் சமந்தா பவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசாப்த காலப் போரின் கடைசி ஏழு ஆண்டுகளின் போது மேற்கொள்ளப் பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை சட்டமீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக்கு உதவுவதற்கான மூன்று நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இலங்கையில் இடம்பெற்ற போரின் போது புரியப் பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல் 23ஆம் பக்கம் பார்க்க....

## நவிபிள்ளைக்கு பிரிவுபசாரம்

(ஜெனிவா)

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு, ஐ.நா மனித உரிமைகள் பேரவை நேற்று முன்தினம் புகழாரம் சூட்டி பிரிவு பசாரம் வழங்கியது.

கடந்த ஆறு ஆண்டுகளாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளராகப் பணி 23ஆம் பக்கம் பார்க்க....


## மிதிவெடி வெடித்து பணியாளர் படுகாயம்

(முகமாலை)

முகமாலைப் பகுதியில் நேற்று சனிக்கிழமை மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் மிதி வெடி வெடித்ததில் படுகாயமடைந் தார். இச சம்பவத்தில் துணுக்காய் ஆரோக்கிய 23ஆம் பக்கம் பார்க்க....

## சிறுபான்மையின் முன்னேற்றத்தைக்கண்டு பெரும்பான்மையினருக்கு பொறுக்க முடியவில்லை

### அடித்து துரத்துகின்றனர் என்கிறார் முதலமைச்சர்



(யாழ்ப்பாணம்)

சிறுபான்மையினர் பொருளாதார ரீதியாக முன்னேறி வருவதைக் கண்டதும் பெரும்பான்மையினருக்கு அதைப் பொறுக்க முடியாமல் இருக்கின்றது.

தமிழர்கள் இலங்கையின் தெற்கிலிருந்து விரட்டப்பட்டார்கள், முஸ்லிம்கள் விரட்டப்படுகின்றார்கள். சிறுபான்மையினத்தவரால் தமக்கு அச்சுறுத்தல்கள் நிகழும் என்று பெரும்பான்மையினர் நினைத்தால் உடனே அடித்துத் துரத்துகின்றனர் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க....

## பௌத்த தீவிரவாதிகளால் இலங்கையில் வன்முறை !

### நியூயோர்க் ரைம்ஸ் செய்தி


(கொழும்பு)

இலங்கையில் பௌத்த தீவிர வாதிகள் சில ஆண்டுகளாக மேற் கொண்டு வரும் மிக மோசமான முஸ லிம் விரோத வன்முறை அலையை தடுத்து நிறுத்த வேணடும் என நியூ யோர்க் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தென்பகுதி நகரான அளுத்கமவில் ஜூன் 15 ஆம் திகதி இடம்பெற்ற இரத்தம் தோய்ந்த வன்முறைகள் காரணமாக 4 முஸ லிம்கள் கொல்லப்பட்டதுடன் 78 பேர் காயமடைந்தனர்.

அத்துடன் முஸ்லிம்களின் வீடுகள மற்றும் அவர்களின் வர்த்தக நிலையங்கள் அழிக்கப்பட்டன.

ஆளும் கட்சியான ராஜபக்ஷ குடும்பத்தினருடன் தொடர்புகளை கொண்டுள்ள பொது பல சேனா எனற புத்த சக்தி படை ஏற்பாடு செய்திருந்த முஸ்லிம் விரோத பேரணியை அடுத்தே இந்த 23ஆம் பக்கம் பார்க்க....



சீஷெல்ஸ் நாட்டிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற் கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அந் நாட்டு ஜனாதிபதி யுடன் அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

## தமிழர்களின் இன்றைய வறுமைக்கு இராணுவப் பொருளாதாரமே காரணம்

### விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்களை அதிக எண்ணிக்கையில் கொண்ட மாகாணங்களில் இரண்டாவது இடத்தில் கிழக்கு மாகாணமும் மூன்றாவது இடத்தில் வடக்கு மாகாணமும் உள்ளது.

நாம் இப்படி வறுமையில் வாட, தென் இலங்கையில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்களின் எண்ணிக்கை இப்போது வெகுவாகக் குறைவடைந்திருக்கிறது.

தென இலங்கைக்கும் - வடக்குக்கும் கிழக்குக்கும் இடையே நிலவுகின்ற பொருளாதார ரீதியான இந்த ஏற்றத்தாழ்வுக்கு இராணுவப் பொருளாதாரமே காரணம் என்று வடக்கின் விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் குற்றம் சாட்டியுள்ளார்.



கிளிநொச்சியில் வட்டக்கச்சி மாயவனூரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் சனத்தொகையில் 26.3 விழுக்காடு மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்துள்ளனர். ஆனால், இந்த எண்ணிக்கை இப்போது 8.9 விழுக்காடாகக் குறைந்து விட்டது.

இதற்கு, தென்இலங்கை யில் வேலைவாய்ப்பில்லாமல் இருந்த கிராமப்புற 23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா விசாரணைக் குழுவில்

## சாட்சியமளிப்போருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டம் பாயும்!

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைக் குழுவின் முன் சாட்சியமளிக்கும் இலங்கையர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அரச இரகசிய காப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் நடவடிககை எடுப்பது குறித்து அரசாங்கம் கூடிய கவனத்தை செலுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும் இலங்கை படையினருக்கு எதிராகவும் சாட்சியமளிக்க பல்வேறு தரப்பினர் தயாராகி வருவதாக ஏற்கெனவே தகவல்கள் வெளியாகியிருப்பதாக சிங்கள ஊடகமான திவயின பத்திரிகையில் தெரவிக்கப்பட்டுள்ளது. சாட்சியாளர்கள் விசாரணைக் 24ஆம் பக்கம் பார்க்க....

## கைக்குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வல்லிபுரம் மணல் அள்ளும் பகுதியிலிருந்து கைக்குண்டொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மீட்கப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கபெற்ற இரகசிய தகவலின அடிப்படையில் கைக்குண்டு மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். 23ஆம் பக்கம் பார்க்க....

## ஆண், பெண் சடலங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மீசாலை வடக்குப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று சனிக்கிழமை காலை மீட்கப்பட்டதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

அதேயிடத்தினைச் சேர்ந்த குணசிங்கம் குணரட்ணம் (வயது 35) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு குறித்த முன்பள்ளியின் முன்றலில் முன்பள்ளித் தலைவர் ச.க.முருகையா தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி ந.சிவசீலன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (செ-2)

++++++

(இருபாலை)

நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஸ்ரீ கணேசா முன்பள்ளி முன்றலில் மேற்படி சனசமூக முன்பள்ளித் தலைவர் க.முருகையா தலைமையில் நடைபெறவுள்ளளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி ந.சிவசீலன் (ஜே.பி) கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், நீர்வேலி றோ.க.த.பாடசாலை அதிபர் சி.தர்மரத்தினம், நீர்வேலி சி.சி.த.க பாடசாலை அதிபர் தி.ரவீந்திரநாதன் மற்றும் வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் க.துரைசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-136)

## இலவச கருத்தரங்கு

(கும்பளை)

British Councilஇனால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆங்கில ஆசிரியர்களுக்கான இலவச கருத்தரங்கு எதிர்வரும் ஜூலை மாதம் 5-ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.சுண்டுக்குளி இல.70, றக்கா வீதி எனும் முகவரியில் இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கு நேற்று சனிக்கிழமை நடைபெறவிருந்ததாகவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மாணவர்களுக்கு பரிசில் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தோழர் மு.கார்த்திகேசனின் 95 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணி தொடக்கம் 7.30 மணிவரை கொழும்பு தமிழ் சங்க மண்டபத்தில் சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவா, ஓய்வுநிலை அமைச்சுச் செயலாளர் எம்.வாமதேவன், ஓய்வுநிலை ஆசிரியர் ஜனாப் எம்.ஜீ.முஸ்தாபா ஆகியோரின் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கல்வியும் தேசிய ஒற்றுமையும் எனும் தலைப்பில் சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவாவின் உரையும், பேராசிரியர் சபா.ஜெயராசாவின் சிறப்புரையும் இடம்பெறும். (2)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலய கண்காட்சி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேற்படி வித்தியாலய அதிபர் சு.திருநாவுக்கரசு கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.வலய சித்திர பாட ஆசிரிய ஆலோசகர் து.துஷ்யந்தன், யாழ்.வலய சங்கீத ஆசிரிய ஆலோசகர் திருமதிசா.விஜயகுமார் மற்றும் பாடசாலை பிரதி அதிபர் சி.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-136)

## விசாரணைகளில் நம்பிக்கையில்லை -மு.கா-

(கொழும்பு)

அளுத்கம பேருவளை சம்பவங்கள் தொடர்பிலான பொலிஸ் விசாரணைகளில் நம்பிக்கையில்லை என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்த இருபது பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

எனினும், இந்த விசாரணைகளில் நம்பிக்கை கிடையாது என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீ லங்கா முஸ்லிம காங்கிரஸ் அறிவித்துள்ளது.

சம்பவங்கள் தொடர்பில் பக்கச் சார்பற்ற விசாரணைகளை நடத்த ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு ஒன்று நிறுவப்பட வேண்டுமென கோரியுள்ளது.(செ-11)

## கருத்துரை

(யாழ்ப்பாணம்)

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்சித் தொடரின் கருத்துரையில் ஆறாவது நிகழ்வாக பேராசிரியர் கமலா விஸ்வேஸ்வரன் மற்றும் கலாநிதி தா.சனாதனனின் உரையாடலில் கலைஞன், இனவரவியலாளன் மற்றும் பதிவு என்னும் விடயம் பற்றி மானிடவியலாளர் மற்றும் கலைஞனுக்கிடையிலான உரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வு இன்று காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகம் 199, கோவில் வீதி, நல்லூரில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு முகாமையாளர் தி.சதீஸ்குமார் கேட்டுள்ளார். (அ)


### சேவை முகவர் காணிகள், வீடு விற்பனைக்கு

மணல்தறை லேன், உரும்பிராய், பிறவுண் வீதி, நாயன்மார்க்கட்டு, நுணாவில் (21 பரப்பு தென்னத் தோட்டம்) ஆகிய இடங்களில். நல்லூர், யாழில் விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம்.

V.சுந்தரம்
0774819801
(6984)

### தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து
Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER
(c-7765)

### கருத்தரங்கு A /L - 2014 ECONOMICS

ஆசிரியர் :
வீ.பரமேஸ்வரன்
B.BA (Hons.), MA (Econ)
St.Joseph's College, Colombo - 10

இடம் : வீரசிங்கம் மண்டபம்-யாழ்ப்பாணம்
காலம் : July 6 Sunday (6/7/2014)
8.00 மணி முதல் 5.00 மணி வரை
கட்டணம் : 500 ரூபா
குறிப்பு : அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்தல் வேண்டும்

அனுமதிகளை பெற்றுக்கொள்ள

K-AIMS
147-2/2 K.K.S.Road
(Top of HSBC Bank, Jaffna)
Gana - T.P: 0772485731

V.சாயீஸ்வரன்
T.P: 0774536951
0776701601

### வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

021 321 0815
021 567 1532

### நிரந்தர வேலைவாய்ப்பு

உங்கள் எதிர்கால வாழ்விற்கு நிரந்தர வேலைவாய்ப்பு. இதோ கொழும்பை அண்மித்த நவீன தொழிற்சாலைகளான சொக்லட்/பிஸ்கட்/டொபி/பால்மா/ஜேம்/கோடியல்/கிளவுஸ்/தேயிலை போன்றவற்றுக்கு + உற்பத்தி + லேபல் + பொதியிடல் பிரிவுக்கு 18-50 வயது ஆண்-பெண் உடன் தேவை. (கல்வி/சிங்கள/அனுபவம் அவசியமில்லை) சம்பளம் 19000/- 25000/-, 35000/- (தொழில் அடிப்படையில்) உணவு + தங்குமிடம் குறைந்த விலைகளில். நண்பர்கள்/குழுக்கள்/தம்பதியர் ஒரே தொழிற்சாலைகளில். உடன் தொடர் கொள்ளுங்கள்.

தொடர்பு:-
077 111 6770
(சி-7769)

### மிக குறைந்த விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு – டுபாய் | –19000 | O/W |
| கொழும்பு – சென்னை | –21700 | RTN |
| கொழும்பு – திருச்சி | –22400 | RTN |
| கொழும்பு – டோகா | –26000 | O/W |
| கொழும்பு – மலேசியா | –30000 | RTN |
| கொழும்பு – சிங்கபூர் | –30200 | RTN |
| கொழும்பு – லண்டன் | –44800 | O/W |
| கொழும்பு – பிரான்ஸ் | –45500 | O/W |
| கொழம்பு – ஜேர்மன் | –72300 | RTN |
| கொழும்பு – சுவிஸ் | –83500 | RTN |
| கொழும்பு – கனடா | –105700 | o/w |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
Nation Popular Travels & Tours
#16,1/2,E.S.Fernando mawatta Colombo-06
16,1/2,E.S.பெனார்டோ மாவத்தை கொழும்பு -06
#128,Brown Road, Jaffna
128.பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
0114651199 . 0214 920 920


## அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை**
**வட்டாரம் :- 14**
**ஆதன இலக்கம் :- 8/7 (புதிய பதிவு)**
**சண்டிலிப்பாய் கீரிமலை வீதி**

வட்டாரம் 14 சண்டிலிப்பாய் கீரிமலை வீதி ஆதன இலக்கம் 8/7 (புதிய பதிவு) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று சண்டிலிப்பாய் இறை "கொத்தனை நெல்லித்தனையும்") என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 02 குளி 09 கொண்ட இவ்வாதனமானது சண்டிலிப்பாய் சீரணியைச் சேர்ந்த செல்வராசா செல்வக்குமார் ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திபாகர் பெண் சுகந்தினி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.பொ.சுந்தரலிங்கம் முகதாவில் நிறைவேறிய 3567 ஆம் இலக்க 2012.02.06 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "கொத்தனை நெல்லித்தனையும்" நிலப்பரப்பு 02 குளி 09 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் திபாகர் பெண் சுகந்தினி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**தவிசாளர்**
**வலிகாமம் தென் மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(6981)


### மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம்



T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்
01.07.2014 முதல் 07.07.2014 வரை 7 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்
(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
(c-7773)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநடை திணைக்களத்தில்

# ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கு போட்டி பரீட்சை

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் இலங்கை தொழில்நுட்ப சேவையின் (III)ஆம் தரத்திற்கு ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் பதவிக்கும் கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் (III) ஆம் தரத்திற்கும் திறந்த போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இப் போட்டி பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டோராக இருத்தல் வேண்டும்.

கல்வித்தகைமைகளாக க.பொ.த.உயர்தர பரீட்சையில் இரசாயனவியல் , விவசாயம் விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களுடன் விஞ்ஞானம்/கணிதபாடப்பரப்பிற்குரிய பாடங்கள் மூன்றில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் க.பொ.(சா/த) பரீட்சையில் சிங்கள /தமிழ் /ஆங்கிலம், கணிதம்,விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறுபாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருப்போர் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

அத்துடன் தொழிற்தகைமைகளும் உடற் தகைமைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன.விண்ணப்பபடிவங்களை பணியாளர் நாயகம் , கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் ,த.பெ.இலக்கம்-13 கெடம்போ ,பேராதனை என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஜுலைமாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தின் இடது பக்க மேல் மூலையில் ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எனக் குறிப்பிடுதல் வேண்டும்.இப்போட்டிப் பரீட்சை எதிர்வரும் செம்டெம்பர் மாதம்கண்டியில் நடத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு பிரசுரமாக்கப்பட்டுள்ள போட்டிப்.பரீட்சை தொடர்பான செய்திகளின் மேலதிக விபரங்களை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடலாம். (அ)

# கல்வி அமைச்சில் பதவி வெற்றிடம்

கல்வி அமைச்சின் கீழுள்ள தேசிய பாடசாலைகளுக்கான விடுதி மேற்பார்வையாளர் (ஆண்/பெண்)பதவிகளுக்கும் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் மாணவர் விடுதிப் பொறுப்பாளர் (ஆண்/பெண்) பதவிகளுக்கும் இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டி பரீட்சைக்கு 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டோர் விண்ணப்பிக்கலாம். கல்வித் தகைமைகளாக க.பொ.த.(சா/த) பரீட்சையில் சிங்கள/தமிழ்/ஆங்கிலமொழி ,கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தலுடன் க.பொ.த.(உ/த)பரீட்சையில் குறைந்தது ஒரு பாடத்திலேனும்சித்தியடைந்திருப்போர் விண்ணப்பிக்கலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து எதிர்வரும் ஜுலை மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக்கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்திரமுல்ல என்னும் முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்புதல் வேண்டும்.

வடக்கு மாகாணததில் யாழ். மத்திய கல்லூரி யாழ்.இந்துக்கல்லூரி மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி, வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் ,மானிப்பாய் இந்துக்கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றில் விடுதி மேற்பார்வையாளர் பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன.

யாழ்.தேசியக்கல்வியியற்கல்லூரி, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி என்பற்றில் விடுதிப் பொறுப்பாளர் பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன. (அ)

# கப்பற்றுறை அமைச்சில் பதவி வெற்றிடம்

துறைமுகங்கள் ,நெடுஞ்சாலைகள் ,கப்பற்றுறை அமைச்சில் நிலவும் சட்ட உத்தியோகத்தர்(நிறைவேற்று உத்தியோகத்தர் தரம்III) பதவிக்கு திறந்த போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது.இப்பதவி போட்டி பரீட்சைக்கான விண்ணப்ப தகைமைகளாக விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவு திகதியன்று 21 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் பற்றிய பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்,உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.அத்துடன் 3 வருடங்களுக்கு குறையாத தொழில் சார் அனுபவம் இருத்தல் வேண்டும்.விண்ணப்பப்படிவங்களை பதிவு தபாலில் எதிர்வரும் ஜுலை மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னதாக பணிப்பாளர் அதிபதி வணிகக் கப்பற்றுறை பணிப்பாளர்,அதிபதியின்அலுவலகம், இலக்கம் 43/89, பிறிஸ்ரல் கட்டடம் ,முதலாம் மாடி, யோர்க் வீதி, கொழும்பு-1 என்னும் முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும். (அ)


IELTS IELTS registratin Center for

BRITISH COUNCIL

நீங்கள் ஒரே தடவையில் IELTS இல் Band 7ற்கு மேல் எடுக்க இலகுவான வழி

60 Hours weekdays & Weekend Training Prrogram

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAMME WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

Course Conducted by University Lecturers who have undergone IELTS Teacher preparation Courses at the British Council



செப்டெம்பர் 06ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்.

02-07-2014 வகுப்புக்கள் ஆரம்பம்



Mon - Tues - 7.00 a.m - 8.30 a.m
Wed - Thurs 5.00 a.m - 7.30 P.m

கடந்த 28 மே 2014ல் Colombo Cinnamon Lakeside Hotel ல் நடைபெற்ற சிறந்த IELTS நிலையத்தக்கான "British Council" விருது வழங்கும் நிகழ்வில் நாட்டின் சிறந்த நிலையம் என எமது கல்லூரி தெரிவு செய்யப்பட்டு எமக்கு விருதினையும் வழங்கிக் கௌரவப்படுத்தியுள்ளனர்.




BRITISH COLLEGE OF ENGLISH

# 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்) Tel: 021 222 0384 / 0778803887


# இராசி பலன்

29-6-2014

(ஆனி 15, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு

துதியை பிற்பகல் 5.06 மணிவரை

புனர்பூசம் முற்பகல் 9.03 மணிவரை

இராகுகாலம் -4.26-5.56 மணிவரை

சுபநேரம் - 8.56-10.26 மணிவரை

வளவன்

**மேடம்:** கல்விக்காக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்,வாகன சுகமுண்டு.

**இடபம்:** உடன் பிறப்புக்களின் மூலம் உள்ளம் மகிழும் செய்தியொன்று வந்து சேரலாம், கௌரவம், அந்தஸ்து உயரும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** நிலையான வருமானத்திற்கு வழி சமைத்துக் கொள்வீர்கள், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும்,உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்:** கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை, சிந்தனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**சிம்மம்:** கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்திக் கொள்ள நேரிடலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள் , காரிய அலைச்சல்கள் உருவாகும், சுபசெலவுகள் அதிகரிக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, சகோதர வழியில் இனிய சம்பமொன்று நடைபெறும், விரதங்களில் நம்பிக்கை கூடும்.

**துலாம்:** புதிய திட்டங்கள் கைகூடும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், உங்களின் கருத்துக்களுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும், குடும்பத்தாரின் ஒத்துழைப்பால் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், [illegible]

**தனுசு:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உங்களின் செயற்பாடுகளில் பெரியவர்கள் குறைகண்டு கூறலாம், செலவுகள் அதிகமாகும், போட்டிகள் அதிகரிக்கும்.

**மகரம்:** நண்பர்களின் சந்திப்பால் நன்மையுண்டு,உடல்நலனில் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், ஆரோக்கியம் சீராகும், சுவாரஸ்மான நாள்.

**மீனம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்,தொலைபேசி செய்திகள் மகிழ்ச்சி தரும், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகர சபை பணியாளர்கள் ஆறு பேர் பணி இடை நிறுத்தம்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளரின் வாகனத்தை அனுமதி பெறாமல் சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தி அதற்குச் சேதம் விளைவித்த குற்றச் சாட்டின் பேரில் சபையின் இரண்டு சாரதிகள் உட்பட பணியாளர்கள் ஆறு பேர் பணி இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மீது விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

அண்மையில் மாநகர ஆணையாளரின் வாகனத்தை அனுமதியில்லாமல் இரண்டு சாரதிகள் மற்றும் பணியாளர்கள் நான்கு பேருமாக மொத்தம் ஆறு பேர் இணைந்து ஆணையாளரின் வாகனத்தை வெளியே எடுத்துச் சென்றுள்ளனர்.

இதன் போது அல்லைப்பிட்டி பகுதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் வாகனம் சேதமாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய யாழ்.மாநகர சபையினால் சம்பவம் தொடர்பாக ஆராயப்பட்டு சம்பவத்துடன் தொடர்புடைய குறித்த ஆறு பேரும் உடனடியாக பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகவும் அவர் தெரிவித்தார். (2-6)




# கலாசார மண்டபத்திற்கான பணிகள் மூன்று வாரங்களில் ஆரம்பிக்கப்படும்

## யாழ்.மாநகரசபை முதல்வர் தெரிவிப்பு

இந்திய அரசின் ஆயிரத்து 200 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ள கலாசார மண்டபத்திற்கான வரைபடங்கள் தெரிவு செய்யப்பட்டு தற்போது கட்டட அனுமதிக்கு விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ள யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அனுமதி கிடைத்தவுடன் மூன்று வாரங்களில் இதன் பணிகள் ஆரம்பிக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

கலாசார அமையத்திற்கு தெரிவு செய்யப்பட்ட வரைபடத்தை தெரியப்படுத்தலும் இதற்கான கட்டட அனுமதியை பெற்றுக் கொள்வதும் தொடர்பிலான விசேட கூட்டம் நேற்று முன்தினம் காலை மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தின் போது தெரிவு செய்யப்பட்ட கலாசார அமைய வரைபடம் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதுடன் இதற்கான அனுமதிகளை சட்டரீதியான முறையில் பெற்றுக் கொள்வது குறித்தும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடனும பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இச்சந்திப்புத் தொடர்பாக மாநகர முதல்வரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது முதல்வர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தலைமையிலான அரச குழுவினரின் இந்திய விஜயத்தின் போது வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் ஆராயப்பட்டதுடன் இந்திய வீட்டுத் திட்டம் தொடர்பிலும் இந்திய அரசாங்கம் வாக்குறுதி வழங்கியிருந்தது.

அதே வேளையில் தமிழ் மக்களின் கலை கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் வகையில் கலாசார அமையம் அமைப்பதன் அவசியம் குறித்தும் இதற்கு இந்திய அரசு உதவ வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய இந்திய அரசாங்கமும் உதவுவதற்கு முன்வந்திருந்தது. இதனையடுத்து யாழ்ப்பாணம் புல்லுக்குளத்திற்கு முன்பாக யாழ்.பொது நூலகத்திற்கு அருகில் முன்னர் திறந்த வெளி அரங்கிருந்த பகுதி தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் கலாசார அமையம் தொடர்பிலான வரைபடம் குறித்து போட்டி அடிப்படையில் தெரிவுகளும் நடைபெற்றன.

இதற்கு 75 இற்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்திருந்தார்கள்.

இந்த விண்ணப்பங்களினூடாக வெளிப்படுத்தப்பட்ட வரைபடங்களிலிருந்து ஒரு வரைபடம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இதற் காக நியமிக்கப்பட்ட குழுவினால் தெரிவு செய்யப்பட்ட இந்த வரை படமானது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

இந்த வரைபடத்திற்கமைய தற்போது இங்கு புதிய கலாசார அமையம் அமைக்கப்படவுளளது.

இதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நகர அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதிகள் கோரியிருக்கின்றோம்.

தமிழ் மக்களின் பாரம்பரியக் கலை கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அமையவுள்ள இக்கட்டடத்திற்கான அனுமதி கிடைத்தவுடன் கட்டடம் அமைக்கும பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# இணுவில் கந்தா போற்றி இறுவெட்டு வெளியீடு

(மானிப்பாய்)

இணுவில் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேகத்தை சிறப்பிக்கும் வகையில் இணுவில் கலைஞர்களின் உருவாக்கத்தில் சி.கௌரீஷன் தயாரிப்பில்வெளியாகவுள்ள இணுவை கந்தா போற்றி எனும் இசை இறுவெட்டு நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆலயமுன்றலில் வெளியிடப்படவுள்ளது.

பாடல்களை தினேஸ் ஏகாம்பரம், றயித், அழகேசன், பவானந்தமூர்த்தி, அமிர்தசிந்துஜன், பாலராயன், மதுசிகன் ஆகியோர் எழுதியுள்ளனர்.

இவற்றுக்கான குரல்களை சிசாந், மதுசா ஆகியோர் வழங்கியுள்ளனர். இறுவெட்டிற்கான இசையினை சுதர்சன் வழங்கியுள்ளார்.

இதில் 18 கலைஞர்கள் பங்கு பற்றி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2-23)




# மோ.சைக்கிள் விபத்து

(யாழ்ப்பாணம்)



வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் காருடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆசிரியர் ஒருவர் படுகாயங்களுடன் மயிர் இழையில் உயிர்தப்பியுள்ளார்.

இச் சம்பவம் யாழ். நாவலர் வீதி நான்கு சந்தியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த காருடன் வீதியை கடக்க முற்பட்டபோது மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் இடுப்பு என்பு முறிந்த நிலையில் படுகாயங்களுக்குட்பட்டு மயிர் இழையில் உயிர் தப்பியுள்ளார். (அ)

# மின் விளக்குகளை பொருத்துக; பொது மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

அல்வாயையும் அல்வாய் தெற்கையும் இணைக்கும் வதிரி அமெரிக்கன் தமிழ் கல வன் பாடசாலை வீதி நீண்ட காலமாக இருளில் மூழ்கியுள்ளதாக அப் பிரதேச வாசிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியில் நீண்டகாலமாக மின் விளக்குகள் பொருத்தப்படாது இருள் சூழ்ந்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இவ் வீதியால் இரவு வேளையில் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இதனை சாதகமாக பயன்படுத்தி குறித்த வீதியில் திருடர்களின் கை வரிசை அதிகரித்துள்ளது.

இதனால் அவ் வீதியால் பணிப்போர் அச்சத்துடன் தினமும் பயணித்து வருகின்றனர்.

எனவே அவ் வீதியால் பயணிப்போரின் நன்மைகருதி உரிய அதிகாரிகள் குறித்த வீதிக்கு மின் விளக்குகளை பொருத்தி தர வேண்டுமென பொது மக்கள் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (60)

# மீன்சந்தையில் முத்திரையிடப்படாத தராசு படிகள் பயன்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மீன் சந்தையில் உள்ள சில மீன் வியாபாரிகள் முத்திரை இடப்படாத தராசு மற்றும் படிகளை பயன்படுத்துவதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு முத்திரையிடப்படாத தராசு படிகளின் மூலம் பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நுகர்வோரை ஏமாற்றி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ-10)

# அபிவிருத்தி வேலைகளுக்காக உறுப்பினர் தெரிவு

(கரணவாய்)

நெல்லியடி நகர அபிவிருத்தி தொடர்பான,கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் தவிசாளர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்றது.

இதன் போது நெல்லியடி நகர அபிவிருத்தி வேலைகளுக்காக நெல்லியடி பிரதேசத்தைச் சேர்ந்த 9 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இவற்றை தலைமை தாங்கும் வகையில் போசகர்களாக மாகாண சபை உறுப்பினர்களான சுகிர்தன் மற்றும் சிவயோகம் ஆகியோருடன் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் பொ.வியாகேசு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தெரிவு செய்யப்பட்ட 9 உறுப்பினர்களது பெயர் விபரங்கள் வருமாறு:

நெல்லியடி இராஜ கிராம சங்கத் தலைவர் சி.ஜெயம், வர்த்தக சங்கத் தலைவர் என்.யோகேந்திரன் மற்றும் செயலாளர் சி.தயாபரன், முச்சக்கர வண்டி தலைவர் கி.கிருஷ்ணராசா, கரவை ஒன்றிய அமைப்பின் உறுப்பினர் செல்வரத்தினம், இராமலிங்கம், செல்வராசா,வடமராட்சி லயன்ஸ் கழக உறுப்பினர் ந.துரைராசா, க.அருளா ணந்தம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-60)

# கருத்துரையும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் "பண்டைத் தமிழரின் அயலகத் தொடர்புகள்" என்னும் தலைப்பில் கருத்துரையும் கலந்துரையாடலும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத் தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது கருத்துரையை தமிழ் நாடு, செம்மொழித் தமிழ் ஆய்வு மத்திய நிறுவனத்தின் ஆய்வாளர் முனைவர் ஜெ.அரங்கராஜ் வழங்குவார்.

தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும்.

இந் நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ)

# 20 பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சு வழங்கல்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 20 பயனாளிகளுக்கு பி.எஸ்.டி.ஜி.திட்டத்தின் கீழ் 50 வீத இலவச விலைக்கழிவுடன் கோழிக்குஞ்சுகள் நாளை திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளதாக கரணவாய் கிழக்கு நாவலர் மடம் கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

இதற்கமைய பயனாளி ஒருவருக்கு 10 கோழிக்குஞ்சுகள் வழங்கப்படவுள்ளதாகவும் அதில் 50 வீத விலைக் கழிவு உள்ளதாகவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (2-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**வகுப்பு**

யாழ் நகர்ப் பகுதிகளில் வீடுகளுக்கு சென்று ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்கள் தரம் 5 தொடக்கம் G.C.E O/L வரை கற்றுக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 077 200 8157

6963

# பாப்பாண்டவரின் இலங்கை விஜயம் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும்

பாப்பாண்டவர் முதலாம் பிரான்சிஸ் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமென நோர்வேயின் முன்னாள் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

பாப்பாண்டவர் இலங்கை விஜயத்தை இரத்து செய்ய வேணடுமென சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் கோரி வருகின்றன. எனினும், பாப் பாண்டவர் இலங்கைக்கான விஜயத்தை மேற் கொள்வதே தமிழ் மக்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் என சொல்ஹெய்ம் சுட்டிக்காட்டியுள்ளார். பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் பயன்படுத்திக் கொண்டதனைப் போன்று, பாப்பாண்டவர் இலங்கையை விஜயத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை விஜயத்தை இரத்து செய்வதன் மூலம் நன்மைகள் ஏற்படப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.(2)

## யெகோவாவின் சாட்சிகள் மாநாடு

யெகோவாவின் சாட்சிகளின் வட்டார மாநாடு **கடவுளுடைய வார்த்தை கற்பிக்கப் பிரயோசனமுளளது** என்ற இருநாள் மாநாடு இன்று ஞாயிறுக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் 9.40 இற்கு ஆரம்பமாகி 3.55 வரை நடைபெறும்.

பல பேச்சுக்கள், நடிப்புக்கள் இடம் பெறும். விசேடமாக **தேசங்களை அசையப் பண்ணுவது யார்? எப்படி?** என்ற பொதுப் பேச்சும் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

**SINGER FINANCE** இடமிருந்து மட்டுமே

பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிக்காக அதிககடன் தொகை குறைந்த வட்டி வீதத்தில்




தொடர்புகளுக்கு

| | | |
|---|---|---|
| தனு | (யாழ்ப்பாணம்) | 077 9 357 124 |
| சுஜந்தன் | (யாழ்ப்பாணம்) | 077 7 391 449 |
| தர்ஷன் | (யாழ்ப்பாணம்) | 077 7 009 666 |
| கலைதேவன் | (வவுனியா) | 0773 675 022 |
| சுதன் | (மன்னார்) | 077 3 550 018 |

(சி-7766)

இல.80,நவம்மாவத்தை,கொழும்பு 02. www.singerfinance.com

**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(C-7745)

**உடனடியான வேலைவாய்ப்பு**

இதோ அரிய சந்தர்ப்பம் 17-50 வயது இருபாலாருக்கும்
சம்பளம் 19000/- 25000/- 35000/- ( தொழில் அடிப்படையில் )
கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் ( சொக்லட் / யோகட் / ஜாம் / வாசனைத்திரவியம் / பிளாஸ்டிக் / Printing / பாஸ்மா / ஆடைத்தொழிற்சாலை / கிளவுஸ் / PVC Paper / பொலித்தீன் / டயில் / டயர் )
உற்பத்தி உதவியாளர், லேபல், பொதியிடல், தரம்பிரித்தல், களஞ்சியபிரிவுக்கு உடனடியாக ஆட்கள் தேவை. உணவு தங்குமிடம் சகாய விலைகளில்
( நண்பர்கள், குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில் )
வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்புக்கள். மேலதிக விபரங்களுக்கு.

**தொடர்பு : 077 556 1883**

C7767

**அன்பு வாசகர்களே!**



நயினை நாகபூஷணி அம்மன் பாமாலைக்கு உங்கள் ஆக்கங்களை
பிரதம ஆசிரியர்
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்



# இணுவில் கந்தசுவாமி கோவில்

உத்தமோ உத்தம (33 குண்டம்) மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

**காலம்**

(04:07:2014) வெள்ளிக்கிழமை காலை 8:40 முதல் 10.27 வரை

**எண்ணெய்க்காப்பு**

01.07.2014 செவ்வாய்க்கிழமை காலை தொடக்கம்
புதன்கிழமை மாலை 4.00 மணிவரை நடைபெறும்.

இன்று காலை 9.00 மணிக்கு புதிதாக செய்யப்பட்ட அறுபத்துமூன்று நாயன்மாருடைய திருவுருவச் சிலைகள் இணுவில் காரைக்கால் சிவன் ஆலயத்திலிருந்து விசேட மேளதாளக் கச்சேரியுடன் நடைபவனியாக எடுத்து வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

**மாலை 3 மணிக்கு மகா யாகம் ஆரம்பம்**

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

29.06.2014 சுபம் இங்ஙனம் தர்மகர்த்தா சபையினர்.

ரஞ்சன்ஸ் ஹாட்வெயர்ஸ்
யாழ்.வீதி, மருதடி
விநாயகர் கோவிலடி,
மானிப்பாய்.
T.P:- 021 225 5821

ஸ்ரீலக்சுமி தேனீரகம்
குளிர்பானம், சிற்றுண்டி
வகைகள் பெற்றிட
கே.கே.எஸ்.வீதி,
இணுவில் சந்தி.

(6970)

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா: 14
உயரம்: 6'
தகைமை/தொழில்: Dip. in Accounting / Data Entry (கனடா – PR)
தொ.இ: B/1542

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 103.5 செவ் 12 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L / எழுதுவினைஞர்
தொ.இ: B/1546

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ரேவதி 1
கி.பா: 44.5
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L / கணனி வேலை, விவசாயம்
தொ.இ: B/1548

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: சுவாதி 2
கி.பா: 35 சூரி செவ் 10 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L/கணனி வேலை
எதிர்பார்ப்பு: வெளிநாட்டு PR உள்ள பெண்
தொ.இ: B/1550

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 22.25
உயரம்: 5'
தகைமை/தொழில்: ஆசிரியர்
தொ.இ: G/2191

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 50 செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L / வரவேற்பாளர்
தொ.இ: G/2192

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: மகம் 2
கி.பா: 54.25 செவ் 2 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/2195

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 4
கி.பா: 11 செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L / கணனி வேலை (தனியார்)
தொ.இ: G/2196

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நிலைப்பாட்டை மாற்ற இலங்கை முயற்சி!

## அமெரிக்கா வரவேற்பு

இலங்கையிலுள்ள பெரும்பான்மையின மக்கள்சிறுபான்மை மக்களை கொடுமைப்படுத்துகின்றனர் என சர்வதேச சமூகத்தின் மத்தியில் ஏற்பட்டுள்ள எதிர்மறையான கருத்தை மாற்றும் முயற்சியை இலங்கை அரசியல்வாதிகள் மேற்கொள்வது வரவேற்கத்தக்கது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்சேல் ஜே.சிசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவபெரும தெரிவித்துள்ளதாவது, சிங்களவர்கள் தொடர்பில் நிலவும் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டை மாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வரும் இலங்கை அரசியல்வாதிகளின் செயற்பாட்டை அமெரிக்கா வரவேற்கின்றது. இதேவேளை, அளுத்கம மற்றும் பேருவளை சம்பவங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்கா தன்னாலான உதவிகளை வழங்கும்என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் சிசன் என்னிடம் தெரிவித்தார்.

இந்நிலையில், அளுத்கம மற்றும் பேருவளை சம்பவங்களின் போது சிங்கள வர்கள் 26 பேரின் வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் நான் அவரிடம் எடுத்துரைத்தேன். 95 வீதமான சிங்களவர்கள் தீவிரவாத செயற்படுகளை விரும்ப வில்லை. ஒருசிலர் மட்டுமே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் நான் சிசனிடம் எடுத்துரைத்தேன் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

### இணையத்தளங்கள் மூலமாக

## சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்ய முயன்ற 6 பேர் கைது

இணையத்தளங்களின் வாயிலாக சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டவர்களில் இதுவரை 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களில் அரசாங்க உத்தியோகத்தர்களும் சில நிபுணர்களும் உள்ளடங்குவதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அனோமா திஸாநாயக்க தலைமையின் கீழ் இயங்கும் மேற்படி அமைப்பின் புலனாய்வு பிரிவினரே இவ்வாறு 6 பேரை கைது செய்துள்ளனர். இது தொடர்பில் அவ்வமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது, இதுவரை 2ஆயிரம் பேர், இணையத்தளங்களின் மூலமாக சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்வதற்கு முயற்சித் துள்ளனர். இணையத்தளங்களுக்கூடாக இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங் களை தடுப்பதற்காக கடந்த ஜனவரி மாதம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் இணையத்தள புலானாய்வு பிரிவு மறுசீரமைக்கப்பட்டது.

இந்நிலையில், இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் அறியவரும்போது 24 மணி நேரமும் செயற்பாட்டில் இருக்கும் இவ்வமைப்பின் 1929 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொண்டு அறிவிக்க முடியும் என அவ்வமைப்பு தெரிவித்துள்ளது. (அ-2)

## விளையாட்டு விழா

உடுவில் இந்து இளைஞர்மன்றம் நடத்தும் உடுவில் மேற்கு பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உ/இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் மேற்படி பாலர் பாடசாலையின் மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை அதிபர் வ.நந்தீஸ்வரன், கௌரவ விருந்தினராக யா/உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய உப அதிபர் றூபிராசரட்ணம் மற்றும் பிரதம தீர்ப்பாளராக ஞா.தேவச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2)

## கும்பாபிஷேகம்

உடுப்பிட்டி இமையாணன் நாவலடி திடல் அருள்மிகு பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தின் புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதன்பிரகாரம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.

மறுநாள் திங்கட்கிழமை கும்பாபிஷேகம் இடம்பெறும். மாலை 5 மணிக்கு விசேட பூசையைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும். (2)



பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினர் ஏற்பாடு செய்த உள்ளூராட்சி வாரத்தை அடுத்து பருத்தித்துறை நீதிமன்ற வீதியை துப்புரவு செய்யும் பணியில் நகராட்சி மன்றத்தினர் ஈடுபடுவதை படத்தில் காணலாம். (படம்:- பருத்தித்துறைசெய்தியாளர்)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 90 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 400 | 450 |
| தக்காளி | 220 | 240 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 60 |
| கோவா | 140 | 140 | 150 | 140 |
| கரட் | 200 | 180 | 200 | 200 |
| பூசணி | 100 | 100 | 90 | 80 |
| புடோல் | 60 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 60-130 | 70 | 90 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 200 | 160 | 200 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 70 | 100 |
| பயற்றங்காய் | 160 | 140 | 130 | 100 |
| லீக்ஸ் | 70 | 100 | 80 | 120 |
| பீற்றூட் | 90 | 120 | 90 | 100 |
| கறிமிளகாய் | 250 | 240 | 230 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 140 | 170 | 160 |
| போஞ்சி | 200 | 180 | 190 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 100 | 70 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 70-100 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 10-40 | 30 | 35 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 110 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 59


சர்மிலா சிவராஜா

நாம் சொன்ன ஒரு பொய் உலகத்துக்கு தெரிய வரும்போது...!!!




நாம் சொன்ன அத்தனை உண்மைகளும் சந்தேகத்திற்கு இடமாகின்றன...

வினோ குமார்



அஜந் குலசிங்கம்

ஒரு பொண்ணு அடிக்கடி கண்ணாடி முன்னாடி நின்னு சிரிச்சான்னா...!



அவ லூசுன்னு அர்த்தம் இல்ல,ஏதோ ஒரு அப்பாவியை லூசாக்க போறான்னு அர்த்தம்...!

தீபன் சற்குணம்

பொண்ணும் ஃபிளைட்டும் ஒன்னுதான் போல...




காணாமப் போனா...
நாலுபேர் நாலு விதமாகத்தான் பேசுறாங்க...!!

டேவிட்

Loss Of Money **L** பணம் அதிக இழப்பிற்கு உள்ளாகும்
தேவையில்லாமல் யோசிப்பது **O** Out Of Mind
Vast of time **V** நேரம் வீணடிக்கப்படும்
வாழ்க்கை முடிவுக்கு வரும் **E** End Of Life

சபாங்கி சுபா

அம்மா : ஏன் அழுகுற
மகள் :அப்பா எனக்கு முத்தம் தரல
அம்மா : நீ நல்லா படிச்சா அப்பா உனக்கு முத்தம் தருவாரு
மகள் : அப்போ நம்ம வீட்டு வேலைக்காரி என்ன B.com ஆ... படிச்சா...?



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாசர் பதில்கள் 56



**அன்பு வாசகர்களே!**

**அரசியல், ஆன்மீகம், சினிமா, பொழுது போக்கு தொடர்பான உங்கள் கேள்விகளை**

*ஆசிரியர், வியாசர் பதில்கள்*
*இல. 3,2 ஆம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

K.வாணி, புன்னாலைக்கட்டுவன்
அன்பின் வியா அண்ணா!

**அதிகமாக அன்பு வைத்தால் அதை ஏன் காதல் என்று சொல்லி தவறாக எடைபோட்டுக் கொள்கிறார்கள்?**

அன்பு என்பது மனம் சார்ந்த விடயம். அதைச் சிலர் திரைப்படத்தில் வரும் பாத்திரங்களாக பிரதிபலிக்க முற்படுகின்றனர். இரண்டு மணித்தியாலங்கள் காட்டப்படும் திரைப்படத்தில் அதிக அன்பைக் காட்டுவதற்கு கட்டி அணைத்தல் முத்தமிடல் போகும் இடமெல்லாம் தன் துணையைக் கூட்டிச் செல்லல் என்னும் உத்திகளை கையாள்கிறார்கள். இதை நீண்டு செல்லும் வாழ்வில் செய்தால் நிலை என்ன?

அ.நளினாசினி, கோண்டாவில்
Hi! Brother

**இந்த உலகத்தை சொர்க்கமாக மாற்றவேண்டும் என்று நெடுநாள் ஆசை. என்ன செய்யலாம் இதற்கு??**

ஏன் இந்த விபரீத புத்தி. இப்படி ஆசைப் பட்டவர்கள் நிறையப்பேர் தெல்லிப்பழையில் இருக்கிறார்கள் கவனம்

லீலா சிவவடிவேல், இணுவில் மேற்கு
அன்பின் வியாசரே!

**இன, மத, மொழி பேதமற்ற, ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற சமரசமான இலங்காபுரியை நாம் இப்பிறவியில் காண்போமா?**

கொஞ்சம் பொறுமையாக இருங்கள். இப்போதுதானே குடியேற்றங்கள் தாராளமாய் நடக்கிறது. இன்னும் கொஞ்சநாளில் நாம் அனைவரும் பு... சரணம் க.... என்று சொல்லும் காலம் வரும். அப்போது ஒன்றே கு...லம் ஒருவனே தே...வன் புரிகிறதா...?

**நம் இராமாயணத்தில் போற்றப்படும் இராமன் போன்ற ஏகபத்தினி விரதன்கள் இக்காலத்தில் உண்டா?**

சு.ஜெயரூபன், பருத்தித்துறை
அன்பின் வியாசரே!

**நம் இராமாயணத்தில் போற்றப்படும் இராமன் போன்ற ஏகபத்தினி விரதன்கள் இக்காலத்தில் உண்டா?**

இப்போதெல்லாம் கதாநாயகனை நம் இளசுகளுக்கு பிடிப்பதில்லையப்பா. வில்லன்களைத்தான் ரொம்பப் பிடிக்கும். அதனால் இராவணன்கள் நிறையவே இருக்கிறார்கள்.

**இராமாயணத்தில் அன்பில் ஓங்கி நிற்பவன் இராமனா, லக்சுமணனா,**

### கொஞ்சம் சிரிங்கப்பா...



"என்னடி ஒரே ஸ்வீட்டா செய்து வைத்திருக்கிறே? ஏதாவது விசேஷமா?"

"என் மாமியாருக்கு சர்க்கரை வியாதி... அதைக் கொண்டாடத்தான்..."

கஸ்தூரியா, திருநெல்வேலி
Hi! வியா அண்ணா!

**உலகம் அழியும் அழியும் என்று சொல்லுறாங்களே. அது எப்பதான் அழியும்?**

இப்போது நடந்து கொண்டிருக்கும் அழிவை விட இனி ஒரு அழிவு வரவா போகிறது.

அ.அச்சுதன், யா.இ.க
Hi! How are you வியா Bro

**இராமாயணத்தில் அன்பில் ஓங்கி நிற்பவன் இராமனா, லக்சுமணனா,**

அண்ணனுக்காய் அத்தனை சுகங்களையும் உதறிவிட்டு வனவாசம் சென்றானே லக்சுமணன் அவனைவிட அன்பில் யாரும் மிஞ்சி நின்றுவிட முடியாது.

ரா.தமிழினி, திருநெல்வேலி
Hi! அண்ணா

**இன்றைய நவீன உலகத்தில் அதிகம் மாற்றத்திற்கு உள்ளாவது ஆண்களா? பெண்களா?,**

யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு கதை. கே.கே.எஸ்.வீதியில் ஒரு பெரியவர் வீதியைக் கடக்க முற்பட்டார். ஆனால் வாகனங்கள் அதிகமாக வர ஒருவரைப் பார்த்து தம்பி அங்கால என்னை விட்டுவிடு என்று கேட்க, ஐயா நான் தம்பி இல்லை என்றார் அந்தப் பெண். ஓ சரியா தெரியேல்ல புள்ளே என்றார் பெரியவர். அதற்கு அந்தப் பெண் கண்ணாடியை மாத்துங்கோ ஐயா என்று விடடுச்சென்றார். முதியவர் சொன்ன தெரியேல்ல எனக்கும் மற்றவர்களுக்கும் புரிந்தது. அந்தப் பெண்ணுக்குப் புரியவில்லையே.

கணபதிதாசன், கட்டைக்காடு
அன்பின் வியாசரே!

**நம்பினோர் கெடுவதில்லை என பழமொழியுண்டு. தமிழர் நிலை எப்படி?**

தமிழன் எதை நம்புறானோ அது நடப்பதேயில்லை.

அகிம்சைப்போராட்டத்தை நம்பினான் அது தோல்வியில் முடிந்தது.

ஆயுதப்போராட்டத்தை எடுத்தான் விருட்சங்கள் அழிய வித்துக்கள் மட்டும் மிஞ்சின.

ஏதோ வரும் என நம்பினான் அது வானில் பறந்து பார்த்ததுடன் முடிந்தது.

தமிழ் கூட்டமைப்பை நம்பினான். அது தீர்மானங்கள் நிறைவேற்றுவதில் காலம் கழிக்கிறது.

தன் தலைவிதி என நம்புகிறான். அது பொய்க்கவில்லையே.!






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தயாரிப்பாளர்களுடன் ஆட்டம் போட்ட அஞ்சலி



ஆந்திர திரைப்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் பிரமுகர்களுடன் நள்ளிரவு மது விருந்தில் அஞ்சலி ஆட்டம் போடும் படங்கள் வெளியாகி பரபரப்பு கிளம்பியுள்ளன. அஞ்சலியைச் சுற்றி ஓயாத சர்ச்சைகள். ஒரு பக்கம் சொந்த வாழ்க்கைப் பிரச்சினை. இன்னொரு பக்கம் திரைத் தொழிலிலும் பிரச்சினை.

தமிழில் நல்ல வேகத்தில் முன்னேறிக் கொண்டிருந்த அவரால், ஒரு கட்டத்தில் சென்னையில் வசிக்க முடியாத சூழல்.

# சிம்புவுக்காக சொந்த குரலில் நயன்

முதல் முறையாக தன் சொந்தக் குரலில் டப்பிங் பேசப் போகிறாராம் நடிகை நயன்தாரா. பத்தாண்டுகளாக சினிமாவில் இருக்கும் நயன்தாரா. இதுவரை தமிழில் சொந்தக் குரலில் டப்பிங் பேசியதே இல்லை. சிம்புவுடன் அவர் நடிக்கும் இது நம்ம ஆளு திரைப் படத்தில்தான் முதல் முறையாக சொந்தக் குரலில் பேசப் போகிறார்.




# சூறையாடல் - திரைவிமர்சனம்



சினிமாவுக்கே உரிய ஒப்பனைகள், பிரமாண்டங்கள், நாடகத்தனங்கள் ஏதுமின்றி வந்திருக்கும் படம் சூறையாடல். ஒரு கிராமத்துக்குள் நுழைந்து, அந்த வாழ்க்கையை நேரில் பார்த்த மாதிரி ஒரு உணர்வு.

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவார கிராமம். தாயைக் கொன்ற தகப்பனைப் பிரிந்து தங்கை லீமாடன் தனி வீட்டுக்குப் போய்விடுகிறார் ஸ்ரீபாலாஜி.

தனியொருவனாகவே தன் தங்கைக்கு அனைத்தையும் செய்கிறார். தங்கை வாழ்வே தன் வாழ்க்கை என வாழ்பவர். தங்கை பருவமடைந்ததும் தன் நண்பர்களைக் கூட அருகில் சேர்க்காமல் பார்த்துக் கொள்கிறார்.

வில்லன் மருது ஒரு பெண்ணை கெடுத்துக் கொல்வதை நேரில் பார்க்கும் பாலாஜி அவனை பொலிசில் சிக்க வைககிறார். சிறையிலிருந்து வந்ததும் பாலாஜியைப் பழிவாங்க தருணம் பார்க்கிறான் வில்லன்.

ஒருமுறை வில்லனிடம் சிக்கிய தங்கையை பாலாஜி காப்பாற்ற, அப்போது மயங்கி விழுகிறாள். உடனே மருத்துவமனையில் சேர்க்க, தங்கை கர்ப்பமாக இருப்பதாகச் சொல்கிறார்கள்.

அதிர்ந்து போகும் பாலாஜி, இதைப் பற்றி தங்கையுடன் பேசவும் கூசுகிறான். தங்கை மீது ஆத்திரம், யார் காரணமாக இருக்கக் கூடும் என்ற பதைப்புடன் தேடல், நண்பனாக இருக்குமோ என்ற சந்தேகம் இப்படி கொடுமையான மனநிலையுடன் நாட்களைக் கடத்தும் பாலாஜி, கடைசியில் தங்கையைக் கொன்று, தானும் சாக முடிவெடுக்கிறான்.

இந்த முடிவை அவன் செயற்படுத்தினானா என்பதுதான் மீதிக் கதை.

ஒரு கிராமத்தில் நிகழ்ந்த நிஜக் கதையை கண்முன் பார்ப்பது போல, இயல்பாக, அதே சமயம் கொஞ்சம் முரட்டுத்தனமான திரைக்கதை காட்சி அமைப்பு.

ஹீரோவாக நடித்திருக்கும் புதுமுகம் ஸ்ரீ பாலாஜிக்கு நடிப்பு நன்றாகவே வருகிறது. குறிப்பாக தங்கையின் கர்ப்பத்தை நினைந்து குமையும் காட்சிகள், அந்த இறுதிக் காட்சி.

தங்கையாக வரும் லீமா, பாலாஜியின் காதலியாக வரும் காயத்ரி இருவருமே நன்றாக நடித்திருக்கிறார்கள். குறிப்பாக லீமா, அண்ணன் எதற்கு மலைக்கு கூட்டிச் செல்கிறான் என்ற உண்மை புரியாமல், குதூகலத்துடன் அந்த சின்னப் பெண் நடந்து போகும் காட்சியில் மனம் பதைக்கிறது.

நாயகனின் நண்பர்களாக நடித்திருப்பவர்கள், தங்கைக்கு காதல் கடிதம் கொடுக்கும் அந்தப் பையன் என எல்லோருமே அந்த கிராமத்தின் மனிதர்களாகவே தெரிகிறார்கள்.


ஆத்திரம், எதையும் யோசிக்காமல் கை வைக்கும் ஹீரோவின் முன் கோபம் ஒரு சின்னப் பெண்ணின் வாழ்க்கையை எப்படி கிழித்துப் போடுகிறது என்பதை இயல்பாகக் காட்டியிருப்பது பாராட்டுக்குரியது. அடப்பாவி, குறைந்தபட்சம் வேறு மருத்துவமனையிலாவது காட்டியிருக்கலாமே என பார்வையாளர்களைக் கேட்க வைக்கிறது.

இன்னும் இப்படியெல்லாம் கிராமங்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன என்பதை உணர வைக்கின்றன பல காட்சிகள்.

அகிலேஷின் ஒளிப்பதிவில் அழகைவிட, கிராமத்தின் எளிமையும், ஏழ்மையும் மேலோங்கித் தெரிகின்றன. மிதுனேஸ்வரின் இசை உறுத்தாமல் கடந்து போகிறது.

தாமரைக் கண்ணனுக்கு இது முதல் படம். இயல்பான காட்சியமைப்பும், சினிமாத்தனமில்லாத வசனங்களும் படத்தைப் பார்க்க வைக்கின்றன.

# பாண்டிராஜ் இயக்கத்தில் சூர்யா




"கேடி பில்லா கில்லாடி ரங்கா" படத்திற்குப் பிறகு பாண்டிராஜ் இயக்கும் படம் "இது நம்ம ஆளு".

இப்படத்தின் மூலம் நீண்ட இடைவெளிக்குப் பிறகு சிம்பு, நயன்தாரா மீண்டும் இணைந்து நடிக்கின்றனர். படத்தின் இறுதிகட்ட பணிகள் நடந்து வருகின்றன. இப்படத்தை முடித்த பிறகு சிறுவர்களை மையமாக வைத்து ஒரு படத்தை இயக்கவிருக்கிறார் பாண்டிராஜ்.

மேலும் படத்தை சூர்யா தனது 2டி எண்டர்டெய்ன்மெண்ட் நிறுவனம் சார்பில் தயாரிக்கப் போகிறாராம். அதோடு படத்தின் கமர்சியலுக்காக சூர்யாவும் ஒரு முக்கிய வேடத்தில் வந்து செல்கிறாராம்.

தற்போது இப்படத்திற்கான, நடிகர், நடிகைகள் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதாக கூறப்படுகிறது. இருந்தாலும் இந்த தகவலை பாண்டிராஜோ?, சூர்யா தரப்போ இன்னும் உறுதி செய்யவில்லை.

# அந்த நாள் ஞாபகம்



கண்ணம்மாவின் அரவணைப்பில் கமல் : களத்தூர் கண்ணம்மா திரைப்படத்தில் மாஸ்டர் கமல், நடிகையர்திலகம் சாவித்திரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இருநூற்றாண்டு காணும் மெதடிஸ்த திருச்சபை (1814-2014)

1814 ஆம் ஆண்டு ஆனிமாதம் 29ஆம் திகதி முதலாவது மெதடிஸ்த மிஷனரிமார் இலங்கையில் வந்து இறங்கினர். சரித்திர முறைப்படி பார்த்தால் இலங்கையில் இந்த ஆண்டில்தான் மெதடிஸ்த சபை ஆரம்பமாகியது என்று கூற வேண்டும்.

1813ஆம் அண்டில் இலங்கைக்கு இறைவனின் சுவிசேஷத்தை கொண்டு செல்வதற்காக பிரித்தானிய மகா நாட்டிடமிருந்து பண்டிதர் கோக் அவர்கள் அனுமதி பெற்றார்.

பண்டிதர் கோக் தனது நண்பனுக்கு எழுதிய கடிதத்தில் நான் இப்போது ஐரோப்பாவில் இறந்து விட்டேன். இந்தியாவிற்கே ஜீவனோடிருக்கின்றேன். நீ இலங்கை செல் என்று இறைவனே என்னிடம் கூறியுள்ளார். இந்த விடயத்தில் எனது மூச்சில் எனக்கு எவ்வளவு நம்பிக்கையுண்டோ அவ்வளவு நம்பிக்கை இறைவனது தீர்மானத்திலும் உண்டு.

இலங்கைக்குச் செல்லாதிருப்பதிலும் பார்க்க இலங்கை மண்ணில் மிதிப்பதுதான் மேலானது என்று எனது உள்ளம் முற்றாக நம்புகிறது. எனக் குறிப்பிட்டார்.

பண்டிதர் கோக் இலங்கைக்கு புறப்பட்டபோது அவருக்கு 66 வயது. இவருடன் 6 இளம் மிஷனரிமாரும் வந்தனர். அவர்கள் வில்லியம் மார்ட்டின் ஹாபட் (இவரது மனைவியும்), ஜேம்ஸ் லிஞ்சு தோமஸ் ஸ்குலான்ஸ், வில்லியம் ஓல்ற் (இவரது மனைவியும்), பென்ஜமின் கிளப், ஜோர்ஜ் ஏல்ஸ்சின் இவர்கள் அனைவரும் டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி அவர் போடஸ்மவுத் என்னும் இடத்திலிருந்து புறப்பட்டனர்.

1814 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9ஆம் திதகி வில்லியம் ஓல்ற் அவர்களின் மனைவி கடலிலே இறந்துவிட்டார்.

4 மாத ஆபத்தான பிரயாணத்தின் பின் இவர்கள் வந்த கப்பல்கள் இந்து சமுத்திரத்தில் பிரவேசித்தது. மிஷனரிமார் தங்கள் பிரயாணத்தை முடிக்கும் தறுவாயில் மிகப்பெரிய ஆபத்தில் சிக்கினர்.

மே மாதம் 3 ஆம் திகதியில் கோக் பிரயாணஞ் செய்த காமல்லா என்ற கப்பலின் தளபதி பண்டிதர் கோக் இறந்துவிட்டார் என்பதை அறிவித்தார்.

ஆழ்ந்த சோகத்துடனும் மரியாதையுடனும் பண்டிதர் கோக்கை கடலிலே அடக்கம் செய்தனர். ஒரு திட்டமோ பணமோ இல்லாமல் தலைவரை இழந்த 6 மிஷனரிமார் இறைவனிடமே தங்களை அடைக்கலமாகக் கொடுத்துவிட்டு தொடர்ந்து பிரயாணஞ்செய்து ஜூன் மாதம் 29ஆம் திகதியில் காலியில் வந்து இறங்கினர்.

அருட்திரு லிஞ்ச், ஸ்குலான்ஸ் கிளப் ஆகியோர் கப்பலைவிட்டு இறங்கி ஒரு தோணி மூலம் துறைமுகத்தை வந்தடைந்தனர்.

இதற்கிடையில் அவர்கள் வந்த கப்பல் புயலாலும் நீர்ச்சுழியாலும் இழுத்துச் செல்லப்பட்டு நடுக் கடலில் சென்றுவிட்டது. இருண்ட இரவில் ஒரு துணைத்தோணி மூலம் துறைமுகத்தை அடைவதற்காக அருட்திரு ஓல்ற் எர்ஸ்கின் ஆகியோர் புறப்பட்டனர்.

ஆனால் பலமான காற்று அவர்களை 17 மைல் தூரத்துக்குத் தெற்குப் புறமாக வெலிகம வரையும் இழுத்துச் சென்றுவிட்டது.

படகோட்டிகள் அவர்களைக்கொன்று பொருட்களை அபகரிப்பதற்காகத்தான் இந்த விதமாகக் கொண்டு சென்றார்கள் என்ற நினைவு அவர்களைக் கடும் பயத்தில் ஆழ்த்தியது.

இந்நாட்டுப் பாஷையில் அவர்கள் பேசமுடியவில்லை. எனவே தங்களைச் சுகமாகக் கரையில் சேர்த்து விட்டால் தங்கள் கைக் கடிகாரத்தை வெகுமதியாகத் தருவதாகக் சைகையால் உணர் த்தினர். பின்பு நடுநிசியளவில் வெலி கமயில் இறங்கினர்.

திருவாளர்கள் ஓல்ற்றும் ஏல்ஸ்சினும் வெலிகமயில் நீதிபதியால் வரவேற்கப்பட்டு காலிக்கு பல்லாக்கு மூலம் அனுப்பப்பட்டார்கள்.

ஜூன் மாதம் 30 ஆம் திகதி பிற்பகலில் அவர்கள் காலியை அடைந்தார்கள். தாங்கள் மீண்டும் சந்தித்ததில் பெருங்களிப்பு அடைந்ததோடு இறைவனுக்கும் நன்றி செலுத்தினர்.

இலங்கையின் தேசாதிபதியான றொபேட் பிறவுன்றிக் காலியிலுள்ள அரச மாளிகையை மிஷனரிகளின் உபயோகத்துக்குக் கொடுத்ததோடு ஒரு வரவேற்பும் நிகழ்த்தினார்.

இவ்வாறான வரலாறுகளைக் கொண்ட மெதடிஸ்த திருச்சபை ஜூன் மாதம் 29 ஆம் திகதி 2014 இன்று இரு நூற்றாண்டுகள் காண்கின்றது.

*டினேஷ் குணரத்தினம்.*

# தொண்டு நிறுவனங்கள் அரசை கவிழ்க்க சூழ்ச்சி

## பாதுகாப்பு செயலாளர் சுட்டிக்காட்டு

தன்னார்வத்தொண்டு நிறுவனங் களின் ஊடாக அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்கா முயற்சித்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் நிதி உதவியில் இயங்கி வரும் சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் சூழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அடுத்த ஆண்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலை நடத்தக் கூடுமெனவும், தேர்தல்களை இலக்கு வைத்து சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளாரு.

சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கை மக்கள் பெரும் எண்ணிக்கையிலான தேர்தல்களில் வாக்களித்துள்ளதாகவும், தேர்தல் தொடர்பில் அமெரிக்கா இலங்கை மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த காலங்களில் பல்வேறு வெளிநாட்டு தூதரகங்களிடமிருந்து பணம் திரட்டி சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வந்ததாக அவர் தெரிவித்துள்ளார். இலங்கையின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை அமெரிக்கா கருவியாக பயன்படுத்திக்கொள்வதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

முக்கிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் பணம் தொடர்பில் உடனடி விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் கோரிக்கைவிடுத்துள்ளார். அநேகமாக வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் பாரியளவு பணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தேசிய பாதுகாப்பிற்கு குநதகம் ஏற்படும் வகையில் செயற் பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் புலிகளின் உத்தரவிற்கு அமைய மக்கள் வாக்களிப்பில் பங்கேற்காத போதிலும். 2001ஆம் ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான உறவுகள் தொடர்பில் அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகள் மக்களுக்கு தெளிவுபடுத்த முன்வராதது ஏன் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இலங்கை மட்டுமல்ல உலகின் ஏனைய நாடுகளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கான நிதி மூலங்கள் தொடர்பில் விசாரணை செய்வதாகவும் அதில் தவறில்லை எனவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார். (2)

# பயங்கரவாதத்தை உருவாக்க சர்வதேச அமைப்புக்கள் முயற்சி

## இராணுவப் பேச்சாளர்

தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டமைக்கும் அதன் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டமைக்கும் பழிவாங்கும் நோக்கத்திலேயே சர்வதேச அமைப்புகள் எமது இராணுவம் மீது குற்றம் சுமத்தியுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய தெரிவித்துள்ளார்.

அவர் வழங்கிய செவ்வியொன்றிலேயே மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், இராணுவம் மீதான யுத்த குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியாத தன் காரணத்தி னாலேயே நாட்டில் இனக் கலவரங்களை தூண்டுகின்றனர்.

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டாலும் பிரபாகரனுடன் தொடர்புடைய சர்வதேச அமைப்புகள் இன்றும் செயற்பட்டுக்கொண்டே இருக்கின்றது. இலங்கையில் .மீண்டுமொருமுறை பயங்கரவாதத்தை உருவாக்க இவ் அமைப்புகள் முயற்சித்துக்கொண்டே இருக்கின்றன.

வடக்கிலேயே இன்று அச்சுறுத்தலான சூழல் உள்ளது. சர்வதேச செயற்பாடுகளை கட்டுப்படுத்த வடக்கில் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என 'இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.. (2)

# நாட்டில் மதங்களை மதிக்கும் சமூகம் உருவாக வேண்டும்

## நாமல் எம்.பி. தெரிவிப்பு

இனங்களுக்கு இடையில் நம்பிக்கை கட்டியெழுப்பப்படவேண்டுமென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையை கட்டியெழுப்பும் கருத்தரங்கு தொடர்பில் சிங்களப் பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

அனைத்து இன மக்களும் பேதங்களை களைந்து ஒன்றாக சகோதரத்துவத்துடன் வாழக்கூடிய பின்னணி உருவாக்கப்பட வேண்டும்.

இதன் மூலம் கடின முயற்சியின் ஊடாக ஈட்டப்பட்ட சுதந்திரத்தை தக்க வைத்துக் கொள்ள முடியும்.


இனங்களுக்கு இடையில் நம்பிக்கையை கட்டியெழுப்பும் நோக்கில் நாடு முழுவதிலும் கருத் தரங்குகள் நடத்தப்பட உள்ளன.

இனங்களுக்கு இடையில் நம்பிக்கையை கட்டியெழுப்பும் கருத் தரங்குகள் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இனங்களுக்கு இடையில் முரணபாடுகள் ஏற்படுவதனை தடுக்கும பொறுப்பு இளைஞர்களிடம் வழங்க உரிய நடவடிக்கை எடுக் கப்படும்.

தங்களது மதங்களை வழிபடும் அதேவேளை, ஏனைய மதங்களையும் மதிக்கக்கூடிய சமூகமொன்றை உருவாக்க வேண்டும் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### தம்பிமுத்து பாலச்சந்திரன்

ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து பாலச்சந்திரன் கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் பூதவுடல் நாளை திங்கட்கிழமை 10 மணிவரை அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு பின்னர் 10.30 மணியளவில் உடுவில் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி செல்லையா நாகரத்தினம்



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நாகரத்தினம் கடந்த 25 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் Marden Assembly Hall, Tudor Drive, Morden, SM4 4PJ, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சரவணமுத்து கணபதிப்பிள்ளை

அராலியைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கணபதிப்பிள்ளை கடந்த 26 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கொட்டுப்பனை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### மாணிக்கராசா ஜெயராசன்




யாழ்.வல்வெட்டித் துறையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை சல்லி, கனடா, மொன்றியல் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கராசா ஜெயராசன் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று மொன்றியலில் காலமானார்.


அன்னாரின் தகனக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை 7 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துக்கம் இல்லாத தூக்கம்!



**கா**ட்டில் சில நாட்களாக ஒரு விடயம் பரபரப்பாக இருந்தது. சிங்கராஜாவுக்கு சரியாக தூக்கம் வருவதில்லை. தூக்கம் வராத சிங்கம், தன் சிடுசிடுப்பை அமைச்சர் யானையிடம் காட்டியது. யானைக்கு அது பெரிய தலைவலியாக இருந்தது.

பலமுறை யோசித்து இறுதியில் அனைத்து விலங்குகளையும் அழைத்து, "ராஜாவை உறங்கவைத்தால் பரிசு கிடைக்கும" என்றது.

"சிங்கராஜாவை நான் உறங்க வைக்கிறேன்" என்று முன்வந்தது காட்டெருமை. அதோடு, சில விலங்குகளும் சேர்ந்து, சிங்கராஜாவின் குகைக்குள் சென்றன.

"ராஜா, இந்தப் பாலைக் குடியுங்கள். தூக்கம் கண்ணைச் சுழற்றிக்கொண்டு வரும்!" என்றபடி, ஒரு குவளை நிறைய சூடான பாலைக் கொடுத்தது காட்டெருமை.

சிங்கமும் குடித்தது. எந்தப் பலனும் இல்லை. சிங்கத்துக்குக் கொஞ்சமும் தூக்கம் வரவில்லை.

அடுத்த நாள் குரங்கு, "சிங்கராஜா, இந்தத் தைலத்தை உடலில நன்றாகத் தேய்த்து, வெந்நீரில் குளியுங்கள். நன்றாகத் தூக்கம் வரும்" என்று புட்டி நிறையத் தைலத்தைக் கொடுத்தது.

அந்தத் தைலத்தை சிங்கத்தின் உடலில் நன்றாகத் தேய்த்துவிட்டது யானை. சுகமான குளியல் போட்டுவிட்டு, கட்டிலில் படுத்தது சிங்கம். உடலுக்குப் புத்துணர்ச்சி வந்ததுபோல் இருந்ததே தவிர, உறக்கம் வரவில்லை.

அடுத்த நாள், மயில் தன் தோகையால் மிருதுவான விசிறி ஒன்றைச் செய்து சிங்கத்திடம் கொடுத்து, "ராஜா, இதை விசிறிக் கொள்ளுங்கள். நன்றாகத் தூக்கம் வரும" என்றது. தோகையால் விசிறிப் பார்த்தது சிங்கம். அதுவும் பலன் அளிக்கவில்லை.

ஒவ்வொரு விலங்கும் ஒரு மருத்துவத்தைச் சொல்லிப் பார்த்தன. எதுவும் பலிக்கவில்லை. "உங்கள் ஒருவராலும் என் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. இனி, வைத்தியம் என்று என் முன்னே வந்தால், அடித்தே கொன்றுவிடுவேன்" என்று கோபத்தோடு கர்ஜித்துவிட்டுக் குகைக்குள் சென்று படுத்துவிட்டது சிங்கம்.

வெளியூர் சென்றிருந்த நரி, அன்றுதான் திரும்பியது. "நான ராஜாவின் பிரச்சினையைத் தீர்க்கிறேன்" என்றது.

நேராக சிங்கத்தின் குகைக்குச் சென்றது. "நீ எதற்காக வந்தாய்?" என்று கர்ஜித்தது சிங்கம்.

"ராஜா, தங்கள் பிரச்சினையைத் தீர்க்கவே வந்திருக்கிறேன்" என்று பணிவாகச் சொன்னது நரி.

"நீ சொல்லும் வைத்தியமும் வேலை செய்யவில்லை என்றால், என் கையால்தான் உனக்கு மரணம். நினைவில் வைத்துக்கொள்" என்றது சிங்கம்.

"ராஜா, என் தாத்தா ஒருவர், அருகில் உள்ள மலையில் வசிக்கிறார். அவர் சிறந்த மருத்துவர். எந்த நோயையும் குணமாக்குவார். அவரிடம் அழைத்துச் செல்கிறேன். ஆனால், நீங்கள் தனியாக வர வேண்டும்" என்றது நரி.

"எப்படியோ தூக்கம் வந்தால் போதும்" என்று நினைத்த சிங்கம், சம்மதித்தது.

மறுநாள் காலையில், சிங்கமும் நரியும் நடந்தே மலைமீது ஏறின. சிங்கம் மிகவும் சிரமப்பட்டது. நரியோ, ஏற்கனவே பழக்கப்பட்டதால், எளிதாக ஏறிச் சென்றது. ஒரு வழியாக இரண்டும் மலை உச்சியை அடைந்தன.

அங்கே ஒரு மரத்தடிக்குச் சென்ற நரி, திடீரென்று "ராஜா, கோபித்துக் கொள்ளாதீர்கள். இன்று என் தாத்தா அயலூருக்குச் செல்லும் நாள் என்பதை மறந்துவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும். நாம் நாளை வந்து மருந்து வாங்கலாமா?" என்றது.

சிங்கத்துக்குக் கடுமையான கோபம். நரியைத் திட்டித் தீர்த்தது. "உனக்கு நாளை இருக்கிறது விசேஷம்" என்றபடி, மலையில் இருந்து இறங்கியது சிங்கம். நரி அமைதியாகப் பின்தொடர்ந்தது.

மறுநாள் பொழுது புலர்ந்தபோது, சிங்கராஜாவைத் தேடி நரி வந்தது. அது சிங்கத்திடம், "ராஜா, இரவு தூங்கி இருப்பீர்களே" என்றது.

அதைக் கேட்ட சிங்கம், "ஆமாம்! நேற்று இரவு என்னை அறியாமலேயே நன்றாக உறங்கினேன். காலையில்தான் விழிப்பு வந்தது. அது எப்படி?" என்று கேட்டது.

"ராஜாவே, எனக்கு தாத்தா யாரும் இல்லை. நான் தங்களிடம் பொய் சொல்லித்தான் அழைத்துப்போனேன். நீங்கள் ராஜாவாக இருப்பதால், உடல் களைக்க எந்த வேலையும் செய்வது இல்லை. சாப்பிட்டுவிட்டு சும்மா உட்கார்ந்து இருந்தால், இரவில் எப்படித் தூக்கம் வரும்? பகலில் நன்றாக உழைத்தால், தானாக உறக்கம் வரும். அதுதான் நான் செய்த மருத்துவம்" என்று பணிவோடு சொன்னது நரி.

"நரியாரே, என் சோம்பலுக்கு மருத்துவம் சொன்ன உனக்கு நன்றி. இனி எல்லோரையும்போல நானும் உழைப்பேன்" என்ற சிங்கம், நரிக்குப் பரிசு கொடுத்து வாழ்த்தியது.

## 06.2014 29 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1534 - பிரின்ஸ் எட்வேர்ட் தீவு சாக் கார்ட்டியே என்ற ஐரோப்பியரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1613 - லண்டனில் உள்ள குளோப் நாடகமாளிகை தீயில் எரிந்து அழிந்தது.
- 1786 - அலெக்சாண்டர் மாக்டொனெல் மற்றும் 500 கத்தோலிக்கர்கள் ஸ்கொட்லாந்தில் இருந்து சென்று ஒண்டாரியோவின் கிளென்கரி என்ற ஊரில் குடியேறினர்.
- 1814 - மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த ஆறு மதப்பரப்புனர்கள் இலங்கையின் காலி நகரை வந்தடைந்தனர்.
- 1850 - வன்குவார் தீவில் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டது.
- 1880 - பிரான்ஸ் டெஹீட்டி தீவைக் கைப்பற்றியது.
- 1888 - ஜோர்ஜ் எடுவார்ட் கவ்ராட் என்பவர் ஆண்டெலின் எகிப்தில் இஸ்ரேல் என்ற ஆக்கத்தை கிராமபோன் உருளை ஒன்றில் பதிவு செய்தார்.
- 1895 - சாரின் ரஷ்ய அரசின் படைக்குக் கட்டாய ஆளெடுக்கும் நடவடிக்கையைக் கண்டித்து டுகோபார் தமது ஆயுதங்களை எரித்தனர்.
- 1914 - கிரிகோரி ரஸ்புட்டீன் சைபீரியா நகரில் உள்ள அவரது வீட்டில் இடம்பெற்ற கொலை முயற்சி ஒன்றில் தப்பினார்.
- 1925 - கலிபோர்னியாவில் 6.3 நிலநடுக்கம் ஏற்பட்டதில் சாண்டா பார்பரா என்ற இடம் முற்றாக அழிந்தது.
- 1976 - சீசெல்சு ஐக்கிய இராச்சியத்தில் இருந்து விடுதலை அடைந்தது.
- 1995 - அட்லாண்டிஸ் விண்ணோடம் ரஷ்யாவின் மீர் விண்வெளி நிலையத்துடன் முதற்தடவையாக இணைந்தது.
- 2007 - ஆப்பிள் நிறுவனம் தனது முதலாவது கைப்பேசி ஐ-போனை வெளியிட்டது.

### பிறப்புகள்

- 1945 - சந்திரிகா குமாரதுங்க, இலங்கையின் நான்காவது ஜனாதிபதி
- 1925 - ஜார்ஜியோ நபோலிடானோ, 11 ஆவது இத்தாலிய அரசுத்தலைவர்

### இறப்புகள்

- 2009 - வ. ஐ. சுப்பிரமணியம், மொழியியல் அறிஞர் (பி. 1926)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

**ஒன்பதில் ராகு வருகிறது! உழைப்பிற்கேற்ற பலன் கிட்டும்!**

**சிகரம் போல உயர்ந்து சிறப்பான வாழ்க்கை வாழ வேண்டுமென்று நினைக்கும் மகர இராசி நேயர்களே!**

பரந்த மனப்பான்மை கொண்டவர்கள் நீங்கள். பரோபகார குணம் உங்களுக்கு இருக்கும். எந்தக் காரியத்தை, எந்த நேரத்தில் செய்தால் எளிதில் வெற்றி கிடைக்கும் என்பதை கற்று வைத்திருப்பீர்கள். சொந்த வேலையாக இருந்தாலும், வந்த வேலையாக இருந்தாலும் அதில் ஒரு ஈடுபாடு கொண்டு பார்ப்பதால்தான் நீங்கள் மற்றவர்கள் மனதில் இடம்பிடிக்கிறீர்கள்.

எளிய வாழ்க்கை வாழ வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு இருக்கும். எதிர்காலத்தைப் பற்றிய கனவை ஏராளமாகக் காண்பீர்கள். மற்றவர்களின் சொல்லைக் கேட்டு ஒருசில காரியங்களை செய்துவிட்டு பிறகு ஏன் செய்தோம் என்று வருத்தப்படுவீர்கள்.

பொதுஜன தொடர்பு உங்களுக்கு அதிகம் இருப்பதால், ஏதேனும் ஒரு பிரச்சினை என்றால், தட்டிக் கேட்க தடையின்றி ஆட்கள் வருவார்கள். பூஜிக்கும் தெய்வத்தை புது முயற்சிகள் செய்யும் போதெல்லாம் வழிபட்ட பின்னரே செயற்படுவீர்கள்.

இப்படிப்பட்ட உங்களுக்கு இந்த ராகு-கேது பெயர்ச்சி எப்படிப்பட்ட மாற்றங்களை எல்லாம் கொடுக்கப்போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**உன்னத வாழ்விற்கு அடித்தளமிடும் ஒன்பதாமிடத்து ராகு!**

**உடன்பிறப்புகளை ஒத்துப்போக வைக்கும் மூன்றாமிடத்து கேது!**

இதுவரை துலாம் இராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், மேட இராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான்வழிப் பயணத்தில் 21.06.2014 அன்று பின்னோக்கிச் சென்று 9 ஆம் இடத்தில் ராகுவும், 3 ஆம் இடத்தில் கேதுவுமாக சஞ்சரிக்கப்போகிறார்கள். ராகு சுய பலமற்ற கிரகம் என்பதால், தேடிச் சென்ற திரவியத்தைக் கொண்டு சேர்க்கும் வாய்ப்பை உருவாக்குவார். வேலை, வீடு, வரன், புதிய பொறுப்பு, தொழிலில் முன்னேற்றம் இப்படி எதைத் தேடினாலும் அந்த முயற்சியில் 9 ஆம் இடத்து ராகு வெற்றியைக் கொடுக்கும்.

இருப்பினும் 3 ஆம் இடத்தில் அல்லவா

மூலமும், குணத்தோடு செயற்படுவதன் மூலமும், தீபத்தைப் பார்த்து தெய்வத்தை வழிபடுவதன் மூலமும்தான் தித்திக்கும் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இயலும். மூன்றாம் இடத்து கேதுவால், முன்கோபம் அதிகரித்து முன்னேற்றத்தில் முட்டுக்கட்டைகள் வந்துகொண்டே இருக்கும். எனவே, நிதானம் என்ற நான்கெழுத்தை உங்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்தால் இந்த ராகு-கேது பெயர்ச்சி மட்டுமல்ல எல்லா நாட்களும் உங்களுக்கு இனிய நாட்களாக அமையும்.

9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகு உன்னத வாழ்க்கையை உங்களுக்கு அமைத்துக்கொடுக்கவும், மூன்றாமிடத்து கேது முயற்சியில் பலனை வழங்கவும், சுய ஜாதகத்தில் ராகு கேதுக்களின் நிலை அறிந்து அதன் பாதசார பலம் அறிந்து அதற்குரிய ஸ்தலங்களுக்கு யோக பலம் பெற்ற நாளில் சென்று சர்ப்ப சாந்திகளைச் செய்தால், நிலையான சந்தோஷங்கள் மனதில் குடிகொள்ளும். ராகு- கேது உலாவரும் நட்சத்திர அடிப்படையிலும் உங்களுக்குரிய பலன்கள் வந்துசேரலாம்.

பொதுவாக 9 இல் சஞ்சரிக்கும் ராகு ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்தரவாதம் கொடுக்கும் விதத்தில் வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுக்கும். தெசாபுத்தி வலுப்பெற்றவர்கள் அந்த வாய்ப்புகளை உபயோகப்படுத்திக்கொள்ள இயலும். பங்காளிப் பகை மாறும். பல நாட்களாக விலகியிருந்த உறவினர்கள் எத்தனை இன்னல்கள் வந்தாலும் அதை இனிமையாக மாற்றியமைத்துக்கொடுக்கும். குரு பார்க்க கோடி நன்மை என்பதால், வியாழன் தோறும் தட்சிணாமூர்த்தியை வழிபட்டு, முல்லைப்பூமாலை அணிவித்தால் எல்லையில்லாத நற்பலன்கள் கிடைக்கும்.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

9 ஆம் இடத்து ராகுவால் உன்னதமான வாழ்க்கை அமையவும், 3 ஆம் இடத்து கேதுவால் உடன்பிறப்புகள் உங்களோடு இணைந்து செயற்படவும் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பாதசாரப்படி ராகு- கேது தரும் பலன்கள்!**

**ராகு, செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (21.06.2014 முதல் 24.10.2014 வரை)**

இடம், பூமி வாங்கும் எண்ணம் மேலோங்கும். இல்லத்தில் சுப காரிய பேச்சுக்கள் முடிவாகும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் மாறும். அஞ்சல் வழியில் அனுகூல தகவல் வந்துசேரும். தொழில், உத்தியோகம் சீராக இருக்கும்.

**ராகு, சந்திரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது: (25.10.2014 முதல் 01.07.2015 வரை)**

குடும்பத்தில் உள்ளவர்களின் குறைகளை யில் தளர்ச்சியே வந்துசேரும். தேக நலனுக்கென்று ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகும்.

**கேது, புதன் காலில் சஞ்சரிக்கும் பொழுது (21.06.2014 முதல் 25.02.2015 வரை)**

கடன்சுமை கூடுதலாக இருக்கும். வரவறிந்து செலவு செய்வது நல்லது. எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும். நீண்ட நாட்களுக்கு முன் தலை எடுத்த நோய்கள் இப்பொழுது மீண்டும் தலை தூக்கலாம். பெற்றோர்களும், உற்றார் உறவினர்களும் பகைமை பாராட்டுவர்.

**கேது, சனி சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (26.02.2015 முதல் 04.11.2015 வரை)**

ஓரளவு நற்பலன்களை எதிர்பார்க்கலாம். குறிப்பாக பொருளாதாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். குடும்பத்தில் சுப் காரியப் பேச்சுக்கள் நல்ல முடிபிற்கு வரும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள்.

**கேது, குரு சாரத்தில் சஞ்ச்ரிக்கும் பொழுது (05.11.2015 முதல் 07.01.2016 வரை)**

வரவும் செலவும் சமமாகவே இருக்கும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சி

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

**21.06.2014 07.01.2016**



இப்பொழுது வந்திணைவர். திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

தடையாக இருந்தவர்கள் விலகுவர். தன்னிச்சையாக செயற்படும் வாய்ப்பு வந்தாலும், யோசித்து ஏற்றுக் கொள்வதே நல்லது. ஏனென்றால், ராசிநாதன் சனியின் சஞ்சாரமும் சரியான நிலையில் இல்லை. ஆரோக்கியப் பாதிப்புகள் அடிக்கடி வந்து அலைமோதலாம். நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட தொல்லைகள் உடன்பிறப்புப் போல உங்களுடனேயே இணைந்திருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலம் கிடைக்கும். பதவி உயர்வும், இலாகா மாற்றங்களும்கூட ஒருசிலருக்கு ஏற்படலாம். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றிக்கொள்வது நல்லது. தொழிலில் ஏற்ற இறக்கம் இருந்தாலும் இலாபத்திற்கு குறைவிருக்காது.

**மூன்றாமிடத்து கேது முன்னேற்றம் தருமா?**

இதுவரை சுக ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த கேதுபகவான், இப்பொழுது மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். கொள்கைகளை தளர்த்திக்கொள்ள நேரிடும். கொடுக்கல்- வாங்கல்களில் மனக்கசப்பு உருவாகும். வந்த வழக்குகளின் எண்ணிக்கை கூடிக் கொண்டே செல்லும். பணியாளர்கள் உங்

தீர்ப்பீர்கள். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். பயணத்தால் பலனுண்டு. நூதன பொருட்சேர்க்கை அதிகரிக்கும். பெற்றோர் வழி பிரியம் கூடும். மன பயம் அகலும். வரன் தேடி களைத்தவர்களுக்கு நல்ல வரன் வந்து சேரும்.

## மகரம்



**ராகு, சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (02.07.2015 முதல் 07.01.2016 வரை)**

களில் ஒன்றிரண்டு வெற்றி பெறும். ஆரோக்கியம் சீராகும். இடம், பூமி, வாகன யோகம் உண்டு. குருவழிபாடு இக்காலத்தில் குதூகலத்தை வழங்கும்.

**சனி, குரு மாற்றங்கள் தரும் பலன்கள்!**

16.12.2014 இல் விருச்சிக இராசியில் சனி சஞ்சரிக்கப்போகிறார். அதன்பார்வை உங்கள் இராசியில் பதிவதால் உடல்நலத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்ய முன்வருவீர்கள். குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். உத்தியோக முன்னேற்றம் உருவாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். இந்த நேரத்தில் உடல்நலத்தை சீராக வைத்துக்கொண்டால் உற்சாகத்தோடு இயங்க முடியும்.

**குருப்பெயர்ச்சி!**

ராகு- கேதுப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே குரு பெயர்ச்சியாகிவிட்டது. உங்களைப் பொறுத்தவரை சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் இராசியிலேயே பதிவதால், தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். குடும்ப முன்னேற்றம் கூடும். குழந்தைகளின் முன்னேற்றமும் அதிகரிக்கும். வாரிசுகள் பெருமைப்படத்தக்க வகையில் நடந்து கொள்வர்.

05.07.2015 அன்று சிம்ம இராசியில் குரு சஞ்சரிக்கப்போகிறார். அஷ்டமத்தில் குரு அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்தில் வழிபாட்டால்தான் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ள இயலும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். வருமானப் பற்றாக்குறை அதிகரிக்கும். அருகில் இருப்பவரை அனுசரித்துக் கொள்வது நல்லது. **நாளை மீனம்.....**

**ஜோதிடக் கலைமணி**
**-சிவல்புரி சிங்காரம்-**

# ஒன்பதில் ராகு வருகிறது! உழைப்பிற்கேற்ற பலன் கிட்டும்!

கேது சஞ்சரிக்கிறார். முன்னேற்றத்தைக் கொடுக்குமிடத்தில் பின்னோக்கிச் செல்லும் கேது சஞ்சரிப்பதால், எதையும் ஒருமுறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகும். கோபத்தைக் குறைத்துக் கொள்வதன்

களைவிட்டு விலகாமல் பார்த்துக்கொள்வது நல்லது. வியாபார விரோதங்களை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் குரு, [illegible]

விரயங்கள் கூடும். இரவு பகலாக பாடுபட்டதற்கு பலன் கிடைக்குமா என்பது சந்தேகம்தான். உறவு பகையாகும். உள்ளத்தில் இனம்புரியாத கவலை மேலோங்கும். வல்லவர்களாக நீங்கள் இருந்தாலும், வளர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.





வட்டுக்கோட்டை இந்து கல்லூரியில் இரண்டு மாடிகள் கொண்ட மகிந்தோதய தொழில்நுட்ப பீடத்திற்கான கட்டட அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி அடிக்கல்லினை நாட்டி வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- என்.குமார்)



நிழல்கள்



யாழ்.மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள அலியான்ஸ் யாழ்.வலய கிளையின் வாடிக்கையாளராகிய அமரர் சகாதேவன் ரஷிக்குமார் என்பவரின் இழப்பீட்டுக் கொடுப்பனவு சிரேஷ்ட காப்புறுதி ஆலோசகர் மே.ஜெயசிந்திரவினால் வாடிக்கையாளரின் சகோதரியான சசிகலா சகாதேவனிடம் வழங்கப்பட்டது. இதன்போது யாழ்.வலய கிளை சிரேஷ்ட முகாமையாளர் மு.மகேந்திரராஜ், வணிக சந்தைப்படுத்தல் முகாமையாளர் வி.நிதர்ஷன் ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம். (படம் :- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)




British council இனால் நடாத்தப்பட்ட சர்வதேச பாடசாலை விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு Hilton ஹோட்டலில் நடைபெற்றது. இதன்போது யா/சன்மார்க்க மகா வித்தியாலத்திற்கு விருது வழங்கப்பட்டுள்ளது. இதில் Kerth Davis (Country director British Council) விருதை வித்தியாலய அதிபர் மு.முரளிதரனும் பாடசாலைக்குரிய சான்றிதழை பொறுப்பாசிரியர் திருமதி.வ.சிவபாதவிருதயரும் பொறுப்பாசிரியருக்குரிய சான்றிதழை திருமதி.ய.கஜநிதிபாலனும் பெற்றுக்கொண்டனர்.

யாழ்.உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளியின் வருடாந்த மெய்வன்மை போட்டி அண்மையில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போது....





அச்சுவேலி கலை பண்பாட்டு மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலை பண்பாட்டு விழா அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதேச பண்பாட்டு கோலங்களை ஆவணப்படுத்தும் வகையில் அமைந்த “ கீற்றின் காற்று ” எனும் இறுவெட்டு வெளியிடப்படுவதையும் நிகழ்வில் இடம்பெற்ற கலை நிகழ்வின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.
(படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



**83**

...திரைப்படப் பாடலுக்கு எத்தனையோ பேர் உடைமாற்றியிருக்கிறார்கள்.

உறுப்புகளையே மாற்றியது அவர்தான்.

இலக்கியத்தில் எளிமை; எளிமையில் இலக்கியம். இரண்டும் வசப்பட்டது அவருக்குத்தான்.

'ஆயிழை'- 'மொய்குழல்'- 'மெல்லியலாள்' போன்ற இரண்டாம் நூற்றாண்டுச் சொற்களை இருபதாம் நூற்றாண்டுப் பாடல்களில் உலவ விட்டது அவரது மொழிச் சாதனை.

"தனிமனித வாழ்வில் எங்கே ஒரு சம்பவம் நிகழ்ந்தாலும் அங்கே என் பாடல் ஒன்று ஒலிக்கும்" என்று செய்தது அவரது சமூக சாதனை.

**"சுற்றி நான்கு சுவர்களுக்குள்**
**தூக்கமின்றிக் கிடந்தோம்- சிறு**
**துன்பம் போன்ற இன்பத்திலே**
**இருவருமே நடந்தோம்"**

என்று விரசத்தை ரசமாக்கியது அவரது இலக்கிய சாதனை.


ஒவ்வொரு பல்லவியிலும் பாட்டிலும் முத்திரை பதிக்க வேண்டும் என்ற மோகம் அவருக்குள் உற்சாகத்தை ஊற வைத்துக் கொண்டேயிருந்தது.

**"ஓடம் நதியினிலே**
**ஒருத்தி மட்டும் கரையினிலே"**

என்ற பல்லவியை எழுதிவிட்டுப் போய்விட்டார்; ஒலிப்பதிவுக்குப் பிறகு பாடலைக் கேட்டிருக்கிறார்.

"அடடே! தவறு செய்துவிட்டேனே" என்று தவித்திருக்கிறார்.

"ஓடம் நதியினிலே; ஒருத்தி மட்டும் கரையினிலே" என்றால் வெறும் வாக்குமூலம்; அதில் கவிதையில்லை.




**"ஓடம் நதிவழியே**
**ஒருத்தி மட்டும் விதி வழியே"**

என்று இருந்திருந்தால் அது கவிதை; அவசரப்பட்டுவிட்டேனே என்று அங்கலாய்த்தாராம்.

முற்றுப்புள்ளிக்குப் பிறகும் கூட ஒரு பாடலைச் சிந்தித்துக் கிடந்திருக்கிறானே!

அவன் கவிஞன்.

அந்தியை அரைத்துப் பூசிக் கொண்ட அந்தத் தங்கநிறம்...

ஒரு கையால் வேட்டி நுனியைப் பிடித்துக் கொண்டே உலவித் திரியும் அந்த உயர்ந்த உருவம்-

எனது பத்தொன்பதாவது வயதில் நான் எழுதிய முதல் நூலான வைகறை மேகங்களுக்கு அவர் ஆசையாய்த் தந்த அணிந்துரை; அப்போது அவர் வரவழைத்துக் கொடுத்த அடர்த்தியான கோப்பி-

இந்த நாற்றை வாழ்த்திய அந்தக் கீற்றின் பெருந்தன்மை-

டிக் டிக் டிக் படத்திற்குப் பாட்டெழுத வந்தபோது- அந்த ஊதுவத்திய அணைச்சிடுங்கப்பா, பொம்பளையும், பூவுந் தவிர எல்லாமே அலர்ஜியாயிடுச்சு என்று அன்று அவர் அடித்த ஜோக்-

மருத்துவமனையில் அவர் உதடுகளில் ஒட்டியிருந்த அந்தக் கடைசிப் புன்னகை-

அமெரிக்காவிலிருந்து வந்த பெட்டியை உடைத்துப் பார்த்தபோது உள்ளே உறங்கிக் கொண்டிருந்த அந்தத் தங்கமுகம்-

இவையெல்லாம் ஞாபகங்கள் என்னைவிட்டு அறுந்துவிடும் வரைக்கும் என்னால் மறந்துவிட முடியாதவை.

அவர் கட்சி மாறியிருக்கலாம்; களம் மாறியிருக்கலாம்; குணம் மாறியிருக்கலாம்; கொள்கை மாறியிருக்கலாம்.

ஆனால் எந்தநிலையிலும் அவர் ஒரு கவிஞர் என்ற புள்ளியிலிருந்து அங்குலமும் மாறாமலே ஆட்சி செய்திருந்திருக்கிறார்.

(தொடரும்)

**-வைரமுத்து-**

## வாகனங்கள் விபத்துக்குள்ளாகின; ஒருவர் உயிரிழப்பு, 21 பேர் படுகாயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாழங்குடாவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 21 பேர் படுகாயமடைந்துள்ளர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு தாழங்குடாவில் உள்ள அரிசி ஆலைக்கு முன்பாக வானும் எல்வ் வாகனமும் நேருக்கு நேர் மோதியதன் காரணமாக இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

புன்னைச்சோலை ஸ்ரீபத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த சடங்கு உற்சவத்தில் கலந்து கொண்டு திரும்பியவர்களே இவ்வாறு விபத்தில் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அதில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே இதன்போது உயிரிழந்ததுள்ளார்.

மேலும் நான்கு பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் இது தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2)

## பக்கச்சார்பற்ற விசாரணை நடத்த விசாரணைக்குழு நியமிக்க வேண்டும்

### முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசத்தில் அண்மையில் இடம் பெற்ற வன்முறைக்ள் தொடர்பில் பொலிஸார் நடத்தி வரும் விசாரணைகளில் நம்பிக்கையில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்த ஜனாதிபதி விசாரணைக்குழு ஒன்று நிய்மிக்கப்பட வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் நடவடிக்கைகள் குறித்து பிரதேச மக்களுக்கும் கட்சிக்கும் நம்பிக்கைக் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சம்பவம் தொடர்பில் மெய்யான தகவல்களை விசாரணைக்குழு ஒன்றினால் மட்டுமே வெளியிட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். விசாரணைக்குழு விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க குறிப்பிட்டளவு கால எல்லையொன்று நிர்ணயிக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையின் அடிப்படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டுளளார். அளுத்கம பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இரண்டு முஸ்லிம்களின் இறப்புச் சான்றிதழ்களில், கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், விசாரணைகளில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளை சுட்டிக் காட்ட முடியும் என அவர் தெரிவித்துள்ளார். எனவே, ஜனாதிபதி விசாரணைக்குழு ஒன்றின் மூலம் மெய்யான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதே கட்சியின் நிலைப்பாடு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

## மக்களின் வாழ்க்கைச் சுமை அழுத்தங்கள் அதிகரிக்கின்றன

### சரத் பொன்சேகா சுட்டிக்காட்டு

நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்கள் சிதைந்து போயுள்ளதை 90 வீதமான மக்களின் அமைதி எடுத்துக் காட்டுவதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு பல வாக்குறுதிகளை அரசியல்வாதிகள் வழங்கினர். அவை என்றுமே நிறைவேற்றப்படவில்லை. இதனால் மக்கள் அதிருப்தியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

மக்களின் வாழ்க்கை சுமையும் அழுத்தங்களும் தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது. மக்கள் மிகவும் துன்பகரமான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

நாட்டின் ஊழல் மிகுந்த அரசியலே மக்களை இந்த இடத்தை நோக்கி தள்ளியுள்ளது. இலங்கையின் அரசியல்வாதிகள் தமது வயிற்றை நிரப்பிக்கொள்ளவே அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

வயிற்று பிழைப்பு அரசியலே நாட்டில் இருக்கின்றது எனவும் சரத் பொன்சேகா கூறியுள்ளார். (2)



யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தின் அப்தகூரபி நூல் வெளியீடு அண்மையில் கச்சேரி வீதியில் அமைந்துள்ள வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது சிறப்பு பிரதியை யாழ்.றோட்டறிக் கழக தலைவர் நீலா தர்மகுலசிங்கம் மேற்படி கழக உறுப்பினர் நிதனுக்கு வழங்குவதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் சதியா?

அளுத்கவில் தொடங்கிய முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையை வெளிநாட்டுச் சக்திகளின் சதியென்று நிரூபிப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் தீவிர கவனம் எடுத்து வருகிறது.

வன்முறைகளைத் தடுக்கத் தவறிய குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக பழியிலிருந்து விடுபடுவதற்கான இலகுவானதொரு உபாயமே இந்த வெளிநாட்டுச் சூழ்ச்சி.

அரச தரப்பிலுள்ள அமைச்சர்களும் இராணுவ அதிகாரிகளும், இது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் சதியென்ற பிரசாரத்தை தெளிவாகவே மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேரா, முஸ்லிம் பிரமுகர்கள் மத்தியில் நிகழ்த்திய உரையொன்றிலும் அமைச்சர்களான எஸ்.பி.திஸாநாயக்க, சம்பிக்க ரணவக்க போன்றவர்களும் இவ்வன்முறைகளின் பின்னால் அமெரிக்கா இருப்பதாக வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் ஏனைய அமைச்சர்களும் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரியவும் இது வெளிநாட்டுச் சதியென்று குறிப்பிட்டுள்ளனரே தவிர, அந்த வெளிநாட்டுச் சக்தி எதுவென்று சுட்டிக்காட்டவில்லை.

இலங்கையில் மத மோதல்களைத் தூண்ட வெளிநாட்டுச் சக்திகள் முனைவதாக அரசாங்கம் கூறும் குற்றச்சாட்டின் உண்மைத்தன்மை குறித்து இப்போது பலரிடமும் கேள்விகள் எழுந்திருக்கின்றன.

அண்மைக் காலமாக அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் மிகச் சிறப்பான நிலையில் இருப்பதாக கூறமுடியாது.

பாதுகாப்பு ஒத்துழைப்பு ரீதியான உறவுகளில் இது பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்காது போனாலும், வெளிவிவகார அமைச்சு மட்டத்திலான ராஜீய உறவுகளில் பெரியதொரு இடைவெளி இருந்து வருவது உண்மை.

2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான முதலாவது தீர்மானத்தை அமெரிக்கா கொண்டுவந்தது தொடக்கம் இந்த இடைவெளி அதிகரித்து வருகிறது.

இத்தகைய பின்னணியில் இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த அமெரிக்கா முனைகிறதா என்ற சந்தேகம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிறது.

கடந்த காலங்களில் உலகின் பல்வேறு நாடுகளிலும் தமக்குச் சார்பில்லாத அரசாங்கங்களை வீழ்த்துவதற்கு அமெரிக்கா பின்புலத்திலிருந்து செயற்பட்டதும் கூட, இலங்கை அரசாங்கத்துக்கு இச்சந்தேகம் வருவதற்கு முக்கியமானதொரு காரணம் எனலாம்.

போர் முடிவிற்கு வந்த பின்னர் இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகளை அமெரிக்கா பட்டியல் போடத் தொடங்கியபோது ஏற்படத் தொடங்கியது இந்த விரிசல்.

எனினும் இலங்கை அரசாங்கத்தை சர்வதேச விசாரணைக்கு இழுத்து தண்டிக்க வேண்டுமென்று அமெரிக்கா மனதார விரும்பியதில்லை.

போரின்போது இடம்பெற்றதாக கூறப்படும் மீறல்களுக்கு பொறுப்பு கூறப்பட வேண்டும். நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அதிகாரப்பகிர்வு ஒன்றின் மூலம் நிலையான அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்த வேண்டுமென்பதை அமெரிக்கா தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கிறது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் போன்றவர்களெல்லாம் சர்வதேச விசாரணைப்பொறிமுறை மூலமே பொறுப்பு கூறப்பட வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருந்த போதுகூட, கடந்த மார்ச் மாதம் வரை அமெரிக்கா ஒருபோதும் சர்வதேச விசாரணைப்பொறிமுறை குறித்து வாய் திறக்கவேயில்லை.

அதாவது, இலங்கை அரசாங்கத்துக்கு சார்பாகவே அமெரிக்காவின் முன்னைய நிலைப்பாடுகள் இருந்தன.

நம்பகமான உள்நாட்டு விசாணைப்பொறிமுறையை உருவாக்கி பொறுப்புக்கூறல் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு கண்டிருந்தால், அமெரிக்கா அடுத்த கட்டத்துக்கு கால் வைத்திருக்காது.

ஆனால், அமெரிக்காவினது கருத்துக்களையும் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலர் பான் கீ மூனுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதியையும் இலங்கை அரசாங்கம் புறக்கணித்தது.

இதனால் சட்டத்தின் ஆட்சி, மனித உரிமை மீறல்கள், மத மற்றும் ஊடக சுதந்திரம் உள்ளிட்ட விவகாரங்களில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்று வலியுறுத்த ஆரம்பித்தது அமெரிக்கா.

இவ்வாறாக அமெரிக்கா வலியுறுத்தி வந்த அனைத்து விடயங்களையும் இலங்கை அரசாங்கம் கருத்திற்கொள்ளாமல் [illegible] சீனா, ரஷ்யா, சீனாவுடன் இணைந்துகொண்டு அமெரிக்காவையும் எதிர்க்கத் தலைப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனது இரண்டாவது பதவிக்காலத்தை தொடங்கியதுமே 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம், ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதற்கான வரையறையை இல்லாமல் செய்ததும் அமெரிக்காவுக்கு பிடிக்கவில்லை.

அது, எதேச்சாதிகாரமும் குடும்ப ஆட்சியும் இலங்கையில் நிலைபெற்றுவிடுமென்று அமெரிக்கா கருதியது.

இவையெல்லாவற்றையும் அமெரிக்கா பகிரங்கமாகவோ, சூசகமாகவோ அல்லது இலங்கை அரசாங்கத்துக்கு தனிப்பட்ட ரீதியிலோ வெளிப்படுத்தி வந்துள்ளது.

இத்தகைய நிலையில், சீனாவின் தயவையும் ரஷ்யாவின் ஆதரவையும் பெற்றுள்ள தம்மை இந்தப் பதவியில் நிலையாக அமர்ந்திருக்க அமெரிக்கா அனுமதிக்காது என்ற கருத்து இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

அதாவது, இந்த ஆட்சியை அமெரிக்கா கவிழ்க்கப் போகிறதேன்ற அச்சம் அவர் களுக்கு ஏற்பட்டு பல வருடங்களாகிவிட்டன.

அதனால்தான், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை வைத்து ஆட்சியை கவிழ்க்க அமெரிக்கா முனைவதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டியிருந்தது.

இப்போது, ஐ.நா. விசாரணைகளையும் நிராகரித்து மேற்குலகுடனும் ஐ.நா.வுடனும் இன்னும் மல்லுக்கட்டத் தொடங்கியிருக்கிறது அரசாங்கம்.

ஆக, இலங்கை அரசாங்கம், மேற்குலகின் கருத்துக்களை மதிக்காமலிருப்பது, மேற்குலக நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு அணியை உருவாக்கும் கனவிலிருப்பது, மேற்குலக நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நாடுகளுடன் உறவுகளை பலப்படுத்திக்கொண்டிருப்பது, ஐ.நாவின் தீர்மானங்களை நிராகரித்து அவற்றை நடைமுறைப்படுத்த தடையாக இருப்பது என்று அடுக்கடுக்கான காரணங்களை ஆட்சிக் கவிழ்ப்புக்கு அமெரிக்கா முன்வைக்கக் கூடிய சூழல் ஒன்று உள்ளதை மறுக்க முடியாது. இதனை அரசாங்கம் தெளிவாகவே உணர்ந்து கொண்டிருக்கிறது.



அமெரிக்காவின் விருப்பத்துக்கும் அதன் நலன்களுக்கும் புறம்பாக தாம் செயற்படுவதால், தம்மை ஆட்சியில் தொடர விட்டு வைக்கப் போவதில்லையென்று அரசாங்கத்துக்கு உள்ளூர பயமிருக்கிறது....

தொடரும்

கே.சஞ்சயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நீதிமன்றங்கள் மீது நம்பிக்கை இழந்துள்ளனர்

## வடமாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கு சார்பான வகையில் வழக்குகளில் தீர்ப்புக்கள் வ்ழங்கப்படுவதனாலும் வழக்கு விசாரணைகள் தாமதப்படுவதனாலும் மக்களுக்கு நாட்டின் நீதித்துறை மீது சந்தேகம் ஏற்பட்டிருப்பதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றங்களின் ஊடாக நீதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் தமது காணிகளைத திருப்பித் தருமாறு கோரி வலிகாமம் வடக்கைச் சேர்ந்த 2 ஆயிரம் பேர் வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றார்கள். இருந்தும் அந்த வழக்கு விசாரணைகள் துரிதப்படுத்தப்படாத காரணத்தினால் அவர்கள் நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை இழந்துள்ளதாகவும் வடமாகாண முதலமைச்சர் தமிழோசையிடம் சுட்டிக்காட்டினார்.

நீதிமன்றங்களையோ நீதிபதிகளையோ விமர்சனம் செய்ய முடியாது. அவர்களைக் குறை கூறுவதும் தமது நோக்கமல்ல என தெளிவுபடுத்திய அவர், 18 ஆவது திருத்தச் சட்டம் வந்ததன் பின்னர் பல வழிகளிலும் நீதித்துறைக்குப் பங்கம் ஏற்பட்டிருக்கின்றது என தெரிவித்தார்.

இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் நீதிபதிகளை நியமனம் செய்யும் அதிகாரம் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டிருக்கின்றது.

அரசியல் காரணங்களுக்காக தனது அரசியல் செல்வாக்கை மேம்படுத்துவதற்காக அதற்கேற்ற வகையில் நீதிபதிகளை நியமிக்கும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்திரு ப்பதனால் நீதித்துறையில் பல சிக்கல்கள் ஏற் பட்டிருக்கின்றன என்றும் அவர் கூறினார். (அ)

## கலாசார மண்டபத்தில் அருங்காட்சியகம்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசினால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ள கலாசார மண்டபத்தில் அருங்காட்சியகம் ஒன்றும் அமைக்கப்படவிருப்பதாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

தமிழர்களது கலாசாரங்களை பிரதிபலிக்கும் முகமாக இந்திய அரசினால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ள மையத்தில் தமிழர்கள் வரலாறு காட்டும் அரும் பொருட்கள் மற்றும் அருகிவரும் பொருட்கள் அடுத்து வரும் எமது சந்ததியினருக்காக பாதுகாக்கப்படவுள்ளது. அதன்படி கலாசார மையத்திற்கான முதற் கட்ட அனுமதி 3 கிழமைகளில் கிடைக்கும் என்றும் மிகவிரைவில் அடிக்கல் நாட்டப்பட்டு ஒரு பகுதியில் அருங்காட்சியகம் அமைக்கப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் மாலை சீசெல்ஸ் தீவுகளுக்குப் பயணமானார். பொயின்லாரி சர்வதேச விமான நிலையத்திற்கு சீசெல்ஸ் ஜனாதிபதி ஜேம்ஸ் ஏ மிஷேல் வருகை தந்து ஜனாதிபதி தலைமையிலான குழுவினருக்கு பெரும் வரவேற்பளித்ததைப் படத்தில் காணலாம்.

## ரஷ்ய- இலங்கை உறவுகள் புதிய பரிணாமத்தை எட்டியுள்ளது

### ரஷ்ய தூதுவர் பெருமிதம்

ரஷ்யாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் புதிய பரிணாமத்தை தொட்டுள்ளதாக இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் அலெக்சாண்டர் கர்ச்சவா தெரிவித்துள்ளார்.

நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் அண்மையில் நடைபெற்ற ரஷ்ய தேசிய தின நிகழ்வுகளில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இராணுவ ஒத்துழைப்பு, விஞ்ஞான தொழில்நுட்பம் போன்ற துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து ள்ளார்.

கல்வி, சுற்றுலாத்துறை, மனிதாபிமான விவகாரம் போன்ற துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மட்டுமன்றி, பாதுகாப்பு விவகாரங்களிலும் உறவுகள் வலுப்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (2)

## மங்களவை முடியுமானால் கைது செய்து பாருங்கள்

### பெரேரா எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அரச இரகசியத்தை வெளியிட்ட தவறை செய்திருந்தால், நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவை உடனடியாக கைது செய்யுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா சவால் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

மங்கள சமரவீர தவறு செய்துள்ளார் என்று கடை கடையாகவும் இடத்திற்கு இடமும் கூறி கொண்டிருக்காது அவரை கைது செய்யுங்கள். மங்கள சமரவீர நாடாளுமன்றத்திற்கு வெளியில் வெளியிட்ட கருத்து நாடாளுமன்ற சிறப்புரிமைக்குள் உள்ளடங்காது.

அத்துடன் அவர் வெளியிட்ட தகவல் தொடர்பில் சட்ட வல்லுநர்களுடன் ஆராய்ந்து அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அஜித் பி.பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர ஊடக சந்திப்பொன்றில் புலனாய்வுப் பிரிவின் மூன்று அதிகாரிகளின் பெயர்களை வெளியிட்டமை குறித்து பொலிஸ் பேச்சாளர் தெரிவித்திருந்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனை கூறியுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இந்த கருத்தை வெளியிடுவதற்கு முன்னர் ஊடக சந்திப்பொன்றை நடத்திய இராணுவப் பேச்சாளர், மில்லேனியம் சிட்டி காட்டிக்கொடுப்பு ஈடான காட்டிக்கொடுப்பு பற்றிய தகவல் கிடைத்துள்ளதாக கூறியிருந்தார்.

நாடாளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்தி நாடாளுமன்றத்தில் இந்த காட்டிக்கொடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டிருந்தார்.

இராணுவப் பேச்சாளர் ஊடக சந்திப்பை நடத்திய அன்றைய தினம் மாலை ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்ட மங்கள சமரவீர, மூன்று அரச புலனாய்வு அதிகாரிகள் பற்றிய தகவல்களை வெளியிட்டார்.

அளுத்கம மற்றும் பேருவளை சம்பவங்களுடன் இந்த அதிகாரிகளுக்கு தொடர்புள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்த தகவலை வெளிட்டதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, நாட்டின் புலனாய்வுப் பிரிவு தொடர்பில் பாரிய குற்றத்தை இழைத்திருப்பதாக கூறி பொலிஸ் மற்றும் இராணுவப் பேச்சாளர்கள் பல்வேறு கருத்துக்களை ஊடகங்களில் வெளியிட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம் விடுத்திருந்த ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தது. (அ-2)

## வாரம் ஒரு தகவல்

### தூங்க முடியவில்லை

"டாக்டர் நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்"

"என்ன பிரச்சினை உங்களுக்கு?"

"மனுசன் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை"

"ஒரு மனிதன் தன் வாழ்நாளில் மூன்றில் ஒரு பகுதியை தூங்கியேதான் கழிக்கின்றான். தெரியும் அல்லவா?"

" அவர்கள் எல்லாம் கொடுத்து வைத்தவர்கள்"

"அது இருக்கட்டும்... ஒருவன் எப்படி தூங்குகிறான் என்பதை வைத்துக்கூட அவனுடைய மனதைப் புரிந்து கொள்ளலாம்.

"அது எப்படி?"

"ஒரு காலை நிமிர்த்தியும் இன்னொரு காலை மடக்கியும் வைத்துக் கொண்டு தூங்குபவர்கள் இரண்டு விதமான குணங்களை உடையவர்கள். இவர்கள் எல்லாம் சில நேரங்களில் தங்களைப் பலசாலிகளாக காட்டிக்கொள்வார்களாம் ஆனால் அவர்களுடைய குணம் இல்லையாம். மனதிற்குள்ளேயே பதுங்குவார்களாம்"

" அப்படியா!"

"ஆமாம்! மனதுக்குள் ஒரு தவிப்பு அல்லது பயம் உள்ளவர்கள் பந்துமாதிரி சுருண்டு படுத்துக் கொண்டு போர்வைக்குள் பதுங்கிக் கொள்வார்கள். அந்தப் பயம் போனதற்குப் பின் நன்றாக படுத்துத் தூங்குவார்களாம்"

"டாக்டர் நீங்கள் சொல்வதெல்லாம் தூங்குபவர்களைப் பற்றி என்னைப் போல் தூங்கமுடியாதவனுக்கு ஏதாவது வழியுண்டா... அதைச் சொல்லுங்கள்"

"உங்களால் ஏன் தூங்க முடியவில்லை""மனைவி தொணதொண என்று பேசிக் கொண்டிருந்தால் எப்படித் தூங்க முடியும்"

"எங்கள் வீட்டிலும் அதே பிரச்சினைதான். அதற்கு வழி இதுதான் இந்தாங்க"

"என்ன இது" "தூக்கமாத்திரை"

"ரொம்ப நன்றி டாக்டர். இதை நான் எப்படி பாவிக்க வேண்டும்"

"இது உங்களுக்கு அல்ல உங்கள் மனைவிக்கு"

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கான் முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவளிக்கும்

## ஐ.நாவிடம் இந்தியா தெரிவிப்பு

(நியூயோர்க்)

தலிபான்களை நடத்தியதைப் போல, ஆப்கான் அரசை நடத்துவதை ஏற்க இயலாது என்று ஐ.நாவிடம் இந்தியா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் நடந்த விவாதத்தின் போது, ஐ.நாவுக்கான இந்திய நிரந்தரத் தூதர் பகவந்த் சிங் பிஷ்ணோய் கூறியதாவது,

முந்தைய தலிபான்களின் ஆட்சியிடம் நாம் கொண்டிருந்த அணுகுமுறைபோல், தற்போதைய ஆப்கான் அரசை அணுகுவதை நாங்கள் ஏற்க மாட்டோம். அமைதியான, பன்முகத்தன்மை கொண்ட ஜனநாயக நாடு ஒன்றை அமைக்க ஆப்கான் அரசு மற்றும் மக்களுக்கு உதவுவதில் இந்தியா உறுதியாகவுள்ளது.

ஆப்கான் அரசுடனான உறவில் இருந்து தன்னை வெளியேற்றிக் கொள்ளும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை.

மேலும், இருதரப்பு உறவுகள் மேம்பட அந்நாட்டு அரசு மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா ஆதரவளிக்கும்.


எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி முதல் ஆப்கானிஸ்தானில் ஏற்படவிருக்கும் அரசியல் மாற்றம் அந் நாட்டின் ஒட்டுமொத்த வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாக இருக்கும். அங்கு ஏற்படும் அரசியல், சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களுக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்று பகவந்த் சிங் பிஷ்ணோய் கூறினார். (2)



அருணாச்சல பிரதேச முதல்வர் நபாம் துக்கி, பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்த போது...

# எரிவாயு குழாய் வெடித்து சிதறியதில் பயங்கர தீ விபத்து!

## 15 பேர் உடல் கருகி பலி; 50 பேர் படுகாயம்



ஆந்திர கெயில் நிறுவனத்தின் எரிவாயுக் குழாய் வெடித்துச் சிதறியதில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தில் சிக்கி 15 பேர் உயிரிழந்தனர். 50 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 27 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது

இப்பரிதாப சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம் பெற்றது. சுமார் 40 மீற்றர் உயரத்திற்கு தீ பற்றி எரிந்தது.

ஆந்திர மாநிலம், கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் மத்திய அரசுக்குச் சொந்தமான இந்திய எரிவாயு ஆணைய நிறுவனம் (கெயில்) இயங்கி வருகிறது.

இந்த எரிவாயுக் குழாயின் ஒரு பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை வாயுக் கசிவைத் தொடர்ந்து திடீரென தீப் பற்றியதில் குழாய் பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

இதனால், எரிவாயு பீறிட்டு பல அடி உயரத்துக்குத் தீ கொழுந்து விட்டு எரிந்தது. இதன் காரணமாக, அப்பகுதியில் இருந்த வீடுகள் மற்றும் தென்னை மரங்களில் தீ வேகமாகப் பரவியதால் அந்தப் பகுதியே தீப்பிழம்பாகக் காட்சியளித்தது.

தீ விபத்தில் சாம்பலான வீடுகளில் இருந்து கருகிய நிலையில் 13 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. தீக்காயமடைந்த இருவர் வைத்திய சாலையில் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் 5 பெண்கள், 3 சிறுமிகள் மற்றும் ஒரு சிறுவனும் அடங்குவர். மேலும், இந்த விபத்தில் படுகாயம் அடைந்த 50 பேர் சிகிச்சைக்காக பல்வேறு வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏறக்குறைய 15 நிமிடங்களில் அந்தப் பகுதியில் இருந்த வீடுகள், தென்னை மரங்கள், வாகனங்கள் அனைத்தும் தீக்கிரையாகின.

தீயணைப்பு வீரர்கள் 5 மணி நேரம் கடுமையாகப் போராடி தீயை அணைத்தனர்.

இதனிடையே, தீ விபத்து சம்பவத்தால் ஆத்திரமடைந்த அக் கிராம மக்கள் கெயில் நிறுவன அலுவலகம் மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர்.

**குடியரசுத் தலைவர் இரங்கல்**

குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, ஆந்திர மாநில ஆளுநர் இ.எஸ்.எல்.நரசிம்மனுக்கு அனுப்பியுள்ள செய்தியில், இந்த தீ விபத்து சம்பவம் மிகவும் அதிர்ச்சி அளிப்பதாகவுள்ளது.

இதில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

இதேபோல் இந்தத் தீவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தமிழக ஆளுநர் ரோசய்யா ஆகியோரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தங்கள் குடும்பத்தினரை இழந்து வாடும் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் பிரார்த்திக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (2)

# பாகிஸ்தானுக்கான விமான சேவைகள் நிறுத்தம்

## சர்வதேசத்தில் நெருக்கடி

(பெஷாவர்)

பாகிஸ்தானில் விமான நிலையங்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை தொடர்ந்து, பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்கள் அந்நாட்டுக்கு விமான சேவையை நிறுத்தியுள்ளன.

பாகிஸ்தானிலுள்ள கராச்சி விமான நிலையத்தில் கடந்த 8ஆம் திகதி உள்ளே புகுந்த 10 தீவிரவாதிகள் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டும், குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினர்.

கடந்த இரு தினங்களுக்கு முன்பு பெஷாவர் நகரில் தரையிறங்கிய விமானத்தின் மீது விமான நிலையத்திற்கு வெளியே இருந்து தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். இதில் பயணி ஒருவர் உயிரிழந்தார்.

இதனையடுத்து நாடு முழுவதிலுமுள்ள விமான நிலையங்களில் உச்சக்கட்ட பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

பெஷாவரில் விமான நிலையத்திற்கு வெளியே இருந்து தலிபான்கள் தாக்குதல் நடத்தியிருந்ததால், விமான நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகள் முழுவதையும் கண்காணிக்க முடியாமல் பாகிஸ்தான் பாதுகாப்பு படையினர் திணறி வருகின்றனர்.

இதனால், சர்வதேச விமான நிறுவனங்கள் பெஷாவருக்கு விமான சேவை அளிக்க தயக்கம் காட்டி வருகின்றன. இதனையடுத்து பெஷாவருக்கு இயக்கி வந்த சவுதி ஏர்லைன்ஸ் நிறுவனம் தனது விமான சேவையை நிறுத்திக் கொள்ள முடிவு செய்துள்ளது. அதேபோல் ஹொங்கொங்கின் கதே பசுபிக் நிறுவனம் பாகிஸ்தானுக்கு இயக்கப்படும் அனைத்து சேவைகளையும் நிறுத்திக் கொள்வதாக அறிவித்துள்ளது.

மேலும் எமிரேட்ஸ், எதிகாட், கட்டார் போன்ற நிறுவனங்களும் பெஷாவருக்கான தங்களது சேவையை நிறுத்திக் கொள்வதாக அறிவித்துள்ளன.

இதனால் சர்வதேச அளவில் பாகிஸ்தானுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. (2)

# ஐரோப்பிய யூனியனுடன் இணைய உக்ரைன் ஒப்பந்தத்தில் கையெழுத்து

(கீவ்)

ஐரோப்பிய யூனியனுடன உறுப்பு நாடாக இணைவதற்கான ஒப்பந்தத்தில் உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ போரோஷென்கோ கையெழுத்திட்டார்.

பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸில் ஐரோப்பிய யூனியன் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. அப்போது, ஐரோப்பிய யூனியன் ஆணையத்தின் தலைவர் ஜோஸ் மேனுவல் பரோசா, ஐரோப்பிய கவுன்சில் தலைவர் ஹெர்மன்வான் ரோம்பய் ஆகியோர் முன்னிலையில், ஐரோப்பிய யூனியனுடன் உறுப்பினராக உக்ரைன் இணைவதற்கான ஒப்பந்தத்தில் அந்நாட்டின் ஜனாதிபதி பெட்ரோ போரோஷென்கோ கையெழுத்திட்டார்.

அந்தக் கூட்டு ஒப்பந்தமானது ஆயிரத்து 200 பக்கங்கள் உடைய ஆவணமாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

இதன்மூலம், ரஷ்யாவினால் ஏற்படும் அச்சுறுத்தல்களில் இருந்து உக்ரைன் முழுமையாக விடுபடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக கருதப்படுகிறது.



**கடத்தப்பட்ட 4 பார்வையாளர்கள் விடுவிப்பு**

இதற்கிடையே, ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களால் கடந்த மே மாதம் 26 ஆம் திகதி கடத்தப்பட்ட ஐரோப்பிய யூனியன் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு அமைப்பை (ஓ.எஸ்.சி.இ) சேர்ந்த பார்வையாளர்கள் 4 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் 4 பேரும் டென்மார்க், துருக்கி, சுவிட்சர்லாந்து மற்றும் எஸ்தோனியா நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

**உக்ரைனில் போர் நிறுத்தம்**

உக்ரைனில் போர் நிறுத்தம் மேலும் 3 நாட்களுக்கு அமுலில் இருக்கும் என உக்ரைன் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

மேலும் இந்த போர் நிறுத்தம் நல்ல மாற்றத்திற்கான எதிர்பார்ப்பாக இருக்கும் எனவும் கிழக்கு நகரங்களான டொனெஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளிலுள்ள கிளர்ச்சியாளர்களின் தலைவர்கள் இந்த போர் நிறுத்தத்தை கண்காணிப்பதாக அறிவித்துள்ளனர்.

இது குறித்து தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் உக்ரைனில் அமைதியை ஏற்படுத்துவதற்காக யாருடனும் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## பெண்மையின் அழுகுரல்

அப்பான்னு நினைச்சேன்
அசிங்கமாய் தொட்டான்...!
சகோதரன்னு பழகினேன்
சங்கடப்படுத்தினான்...!
மாமான்னு பேசினேன்
மட்டமாய் நடந்தான்...!
உறவுகள் அனைத்தும்
உறவாடவே அழைக்கின்றன...!
பாதுகாப்பைத் தேடி
பள்ளிக்குச் சென்றேன்...!
ஆசிரியனும் அரவணைத்து
மறுக்காதே மதிப்பெண் குறையும் என்றான்...!
நட்புக்கரமொன்று நண்பனாய்
தலைகோதி தூங்கென்றான்...!
மரத்த மனம் மருண்டு சுருண்டு
தூங்கையில் கைபேசியில் படமெடுத்தான்
அவனும் ஆண்தானே...!
கதறி அழுது கடவுளிடம் சென்றேன்
ஆறுதலாய் தொட்டு தடவி
ஆண்டவன் துணையென்றான் பூசாரி
அலறி ஓடுகிறேன் எங்கே போவேன்?
சமத்துவம் வந்ததென சத்தமாய் கூறுகின்றனர்...!
பெண்ணை பெண்ணாகப் பார்க்காமல்
மனிதராய் பார்ப்பது எக்காலம்?
பாவிகளின் பாலியல் வன்முறை என்று ஓயுமோ?

**பி.டிலானி, சுண்டுக்குளி**

## தவிப்பு

உன் பிரிவால் சுருண்டு விழுந்த
என் இதயம் தொடரும் சோகங்களால்
நிமிர்ந்து வாழ முடியாமல்
தவியாய்த் தனித்து நிற்கின்றதே
இறைவா

## பிரிவு

சங்கீத அலைபாயும் தேன் குரலே
கல்லையும் கனிய வைக்கும்
உன் பாடல்
கல்லறையில் உறங்கும்
என்னைத் தாலாட்டுவதால்
நிம்மதியாக தூங்கும்
என் ஜீவன்

**க.செல்வமலர்**
**இடைக்காடு**

## வாழ்க்கை

எதையும் ஆழமாக நேசிக்காதே
துன்பப்படுவாய்
எதையும் ஆழமாக யோசிக்காதே
குழம்பி விடுவாய்
எதையும் எங்கும் யாசிக்காதே
அவமானப்படுவாய்

**த.கன்ஷா**
**கிளிநொச்சி**

## பெண்ணே

நீ அலையாக வருவாயென்றாய்
கரையாக நான் வந்தேன்
ஒவ்வொரு முறையும் சத்தமிட்டு எனை
முத்தமிடுவாயென்று- நான்
நினைக்கவில்லை-நீ
எனைக் கொல்லும் சுனாமியாய்
வருவாயென்று

**த.சுலக்ஷன்**
**கிளிநொச்சி**

## எதிர்பார்ப்பு

கனவுகள் இல்லாத தூக்கங்களோடு
கவலைகளே இல்லாத நிம்மதியோடு
இழப்புக்களே இல்லாத உறவுகளோடு
சூரிய சந்திரனே இல்லாத உலகோடு
இன்பதுன்பங்களே இல்லாத வாழ்க்கையோடு
இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றாய்-நீ
என் இதயத்தில்....?

**பா.கௌரீசன்**
**அல்வாய்**

## இமயம் தொட...

அடிவிழினும்
ஆழப்பதியும்
ஆணியாய் இரு
உன்னில் விழும்
ஒவ்வொரு அடியிலும்
நீ உன்னைச் செதுக்கு
நீயே உன்னை சிலையாக்கு
சிலைகளுக்காய்
உளியின் அடிகளை ஏர்
உன்னால் நீ உயர்வாய்


மாவை.நா.கஜேந்திரன்

## இழத்தலென்பது

பெண்ணே!
அச்சமும் மடமும்
நாணத்துடன் பயிர்ப்பும்
உன் நாற்படையென்று
நீயறிவாய்
ஆடவனேனும் அயல்நாட்டிற்குள்
ஏன் படையின்றி நுழைந்தாய?
நீயோ
கற்பு பறிக்கப்பட்டதென்கிறாய்
இல்லை
அது இழக்கப்பட்டதென்பதுதான்
உண்மை

**மேகலைவன்**

# மௌனத்தின் தேடல் – 210



## காலத்தின் கரம்

சிறியவனாக இருக்கும்போது
என்னோடு சிரித்து மகிழ்கிறாய்
பெரியவனாகி என்னை
ருசித்து மகிழப் போகிறாய்
இதுதானா- நீ
என்னில் வைத்த அன்பு

*அ.நளினாசினி*
*கோண்டாவில்*

## பாசம்

வளர்த்த கடா மார்பில்
பாயும் என்று பாசத்தை
புரியாத மோசத்தை
உரைக்கின்றாய் மனிதா
நீ அதன் கழுத்தில் அல்லவா
கைவைத்து விடுகின்றாய்
அன்பு கருணையை அழிக்கும்
சுயநலத்தை விட்டுவிடு
உன் பாசத்திற்குள்ளே
தெய்வீகம் இருக்கும்

*க.அபர்ணா*
*வட்டுக்கோட்டை*

## காரணம்

பாசத்தோடு பிள்ளைபோல
ஊட்டி வளர்த்த ஆடுகளை
கொஞ்சமும் ஈவு இரக்கமின்றி
வெட்டிச் சரிக்கிறார்களே
அந்த ஐந்தறிவு ஜீவன்கள் இட்ட
சாபம்தான் மனிதர்களின்
இன்றைய அழிவுக்கு
காரணமாக அமைகிறது

*யோ.காண்டீபன்*
*மானிப்பாய்*

## டா...டா...

கடாவை பலிகொடுக்கும்
மானிடா...!
கண்கூர்ந்து இச்செயலை
பாரடா...!
குழந்தை மனம் உனக்கு வருமோ
கூறடா...?
இதுதான் இயற்கையின் நியதியோ
சொல்லடா...!

*எஸ்.வெலோகா*
*அச்சுவேலி*

## காலை வாருவதென்ன?

ஐந்தறிவு ஜீவனே
கைகோர்க்கும் போது
ஆறறிவு ஜீவன்
காலைவாரி விடுவதென்ன...?

*அ.அச்சுதன்*
*யா.இ.க*

## என்றுதான் உணர்வான்

அன்போடு வளர்க்கும்
ஆட்டுக்குட்டியைப் பின்
கடாவானதும் இரக்கமின்றி
வெட்டி வறுத்துச் சுவைக்கும்
கெட்ட மனிதன் குணத்தை
அறிந்தும் அன்போடு பழகும்
குட்டியின் உயர்ந்த பண்பை
மனிதன் என்றுதான் உணர்வான்

*துரை*
*தென்மட்டுவில்*

## கவலை

இந்த ஆட்டுக்குட்டியோடு
சந்தோசமாய் விளையாட
என் தங்கை இன்று
அருகில் இல்லையே

*சு.ஜெயரூபன்*
*பருத்தித்துறை*

## பொம்மை

மாடி வீட்டுப் பையன் விளையாட
டாடி தந்த கண்சிமிட்டும் பொம்மையா?
யாரிந்த பையன்?- தெருவினில்
வாரி அணைத்திடும் நாயுடன்
பேரினவாதத்தால் இழிந்த பையனுக்கு
கடவுள் கொடுத்திட்ட
அன்பான பொம்மை இது

*செ.கிரியா*
*சுழிபுரம்*

## வளர்த்த கடா

முதியோர் இல்லங்களில் வா(டு)ழும்
தெய்வங்களின் மனநிலையை
உணர்ந்து கொண்டேன்
நான் பாசமாக வளர்த்த கடா
என் மார்பில் முட்டிய போது...

*இ.கிரிசாந்தன்*
*துன்னாலை*

## கருணையுள்ளம்

ஆறறிவு படைத்த மனிதர்களே- புலர்
தாம்பெற்ற பிஞ்சுப் பாலகர்களை
குப்பைத் தொட்டிகளிலும் அநாதை
இல்லங்களிலும் அசட்டையாக
விடும்போது-ஐந்தறிவு படைத்த
ஆட்டுக்குட்டியை அணைக்கும் -உன்
கருணையுள்ளம் யாருக்கு வரும்


*சி.சிவாஜினி, கோண்டாவில்*

## தூ

ஆயிரம் கணக்கில் ஆடுகள் வெட்டி
ஆலய வாசலில் பலிகொடுக்கும் காலம்
ஆட்டினைத் தூக்கி அரவணைக்கும் தம்பி
ஆட்டினால் ஆளாவாய்-நீ பிற்காலமதில் தம்பி!
அன்பினால் எதையும் சாதிக்கலாம் என்று
ஆன்றோர் அன்று சொன்னாரே தம்பி

*கணபதிதாசன்*
*கட்டைக்காடு*

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –211



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 02.07.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசு சர்வதேச விசாரணையை மறுத்தால் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கும்

## எச்சரிக்கிறார் லக்ஸ்மன் எம்.பி



**(கொழும்பு) விடுதலைப் புலிகளுடனான இறுதி யுத்தத்தில் பொதுமக்கள் கொல்லப்படவில்லை என்றால் அரசாங்கம் ஏன் விசாரணைக்கு மறுப்பு தெரிவிக்கின்றது. சர்வதேச விசாரணைக்கு இடமளிக்காவிடின் அரசாங்கம் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

இலங்கை மீதான சர்வதேச விசாரணை தொடர்ச்சியாக வலியுறுத்தப்படுகின்ற நிலையில் அது தொடர்பாக கருத்துக்கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது இராணு வத்தினால் யுத்த குற்றங்கள் இடம்பெற்றதாக சர்வதேசம் குற்றம் சுமத்தியுள்ளது. அதற்கான ஆதாரங்களையும் முன்வைத்துள்ளனர். இதில் எந்தளவு உண்மைத் தன்மை உள்ளதென்பதை எம்மால் உறுதிப்படுத்த முடியாது. ஆனால் இதில் உண்மைத்தன்மை உள்ளதா? இல்லையா? என்பதை அரசாங்கம் நிரூபிக்க வேண்டிய தேவை உள்ளது.

சர்வதேச விசாரணை இடம்பெறுவது நாட்டிற்கு பாதிப்பு என்றால் அரசாங்கம் இலங்கையின் சுயாதீன உள்ளக விசாரணையொன்றை நடத்தி தீர்வுகண்டிருக்க வேண்டும். ஆனால் யுத்தம் முடிவடைந்த இந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்கத்தினால் எந்தவொரு விசாரணையும் இடம்பெறவில்லை.

விடுதலைப் புலிகளுடனான இறுதி யுத்தத்தில் பொதுமக்கள் கொல்லப்படவில்லை என்றால் அரசாங்கம் உண்மையான அறிக்கையினை வெளிப்படுத்தியிருக்க முடியும். அல்லது பயமின்றி சர்வதேச விசாரணையொன்றினை அனுமதித்திருக்கமுடியும். ஆனால் அரசாங்கம் தவறிழைத்திருக்கின்றமையினாலேயே இலங்கை மீதான விசாரணைக்கு அஞ்சுகின்றது.

இலங்கையில் இன்று நிலைமைகள் மிக மோசமானதாக மாறிவிட்டது. யுத்த காலகட்டத்தில் வடக்கில் மட்டுமே அச்சுறுத்தல் அதிகரித்திருந்தது. ஆனால் இன்று நாடு பூராகவும் இனக்கலவரங்களும் போராட்டங்களும் இடம்பெற்றுக்கொண டிருக்கின்றது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே இனவாதத்தினை பரப்பி இனக்கலவரங்களை ஏற்படுத்துகின்றனர். மதவாத அமைப்புகள், தீவிரவாத குழுக்களிடம் அதிகாரங்களை வழங்கி அவர்களுக்கு பாதுகாப்பினையும் இந்த அரசாங்கம் வழங்குகின்றது.

இந்த சர்வாதிகார ஆட்சியில் மக்களே பலிக்கடாவாகி துன்பப்படுகின்றனர். நாட்டில் ஜனநாயக ஆட்சி இடம்பெற வேண்டுமாயின் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கும், சுதந்திரத்திற்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

தென்னாபிரிக்கா இன்று ஜனநாயகத்தின் முறையில் செல்வதும், அங்கு இன வேற்றுமை அழிக்கப்பட்டமையினாலேயே இலங்கையிலும் இந்த நிலைமை ஏற்பட வேண்டும். மூவின மக்களுக்குமான சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

மேலும், சர்வதேச விசாரணைக்கு இந்த அரசாங்கம் இணங்குவதால் நாட்டின் மீதான அழுத்தம் குறைக்கப்படும். அரசாங்கமே விசாரணைக்கான அனுமதியினை சர்வதேசத்திற்கு கொடுத்தது. இப்போது சர்வதேச விசாரணைக்கு இடமில்லை என அரசாங்கம் கூறுவதால் எவ்வித மாற்றங்களும் ஏற்படப் போவதில்லை. அரசாங்கம் சர்வதேச விசாரணைக்கு மறுத்தால் பொருளாதார ரீதியில் மட்டுமன்றி அரசியல் ரீதியிலும் பாரிய பிரச்சினைகளை எதிர் கொள்ள நேரடும் எனவும் அவர் தெரிவித்தார். (2)

# வீதியை செப்பனிடவிடாது தடுக்கிறது மத்திய கனிய வளத் திணைக்களம்

## வடமாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் இறுதி எல்லையிலுள்ள பிரதேசமான பருத்தித்துறை பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் உள்ள கேவில், போக்கறுப்பு கிராமங்களுக்கு போக்குவரத்தினை இலகுவாக்கும் முகமாக பருத்தித்துறை பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் பங்களிப்புடனான களிமண்ணினால் வீதி செப்பனிடல் பணி இடை நிறுத்தப்பட்டுள்ளது.

அரச உயரதிகாரியொருவரின் தலையீட்டினையடுத்து கனியவள துறையினர் வீதி செப்பனிடும் செயற்பாட்டினை இடை நிறுத்தியுள்ளனர் என்று வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,யாழ்ப்பாணத்தில் இருந்து 85 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கிராமத்திற்கு மக்களின் போக்கு வரத்தை இலகுபடுத்துவதற்காக செய்யப்படும் செயற்பாட்டினை தடுக்கும் கனியவள திணைக்களம் வல்லை பகுதியில் பிரதான வீதிக்கு அருகாமையில் வல்லை இராணுவத்தினர் தங்களது இராணுவ முகாமை பலப்படுத்தும் வகையில் களிமண் ஏற்றுகின்றார்கள்.

இது கனியவள திணைக்களத்திற்கு தெரியவில்லையா? நாகர் கோவில் பகுதியில் மண் ஏற்றப்படுகின்றது. இதுவரை அந்த இடத்தை சென்று பார்த்து இருப்பார்களா? அல்லது மக்களின் பாவனைக்கென போடப்படும் வீதியை தடுத்து நிறுத்தும் அரச உயரதிகாரி குறித்த பகுதியை சென்று பார்வையிடவேண் டும் என்று கனிய வள திணைக்களத்தினருக்கு கூறியுள்ளாரா? எனவும் கேள்வியெழுப்பியுள்ளார்.

அரச திணைக்களங்கள் மக்களுக்காகவே உருவாக்கப்பட்டது. மக்கள் நலனில் கைவைப்பதற்காக உருவாக்கப்படவில்லை.உங்களது அதிகார பலத்தை மக்கள் மீது காட்டக்கூடாது. சட்டவிரோதமாக உங்களால் வழங்கப்பட்ட கனியவள அனுமதிகளை உடனடியாக இடை நிறுத்தி எங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் கனியவள கொள்ளைகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி விடயம் குறித்து வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வின் போது எடுத்துக் கூறப்படும் என்று தெரிவித்தார். (2-6)

# இலங்கை விசாரணை தொடர்பில் விபரங்களை வெளியிடமுடியாது

## ஐ.நா.மனிதவுரிமை பணியகம் தெரிவிப்பு

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது புரியப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ள போதிலும் அது தொடர்பான மேலதிகமான விபரங்களை வெளியிடமுடியாது என்று ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும் போதே ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் பேச்சாளர் ருபேர்ட் கொல்வில் இது குறித்து குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் இவ்வூடகத்துக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசாப்த காலப் போரின் கடைசி ஏழு ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை சட்ட மீறல்கள் தொடர்பிலான விசாரணைக்கு உதவுவதற்காக மூன்று நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து இலங்கை தொடர்பிலான தீவிரமான தொழில்முறை விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. இந்த விசாரணைகள் குறித்த மேலதிகமான விபரங்களையோ, விசாரணைக்குழுவின் எதிர்கால செயற்பாடு கள் குறித்தோ விபரிக்க முடியாது.

எவ்வாறாயினும் விசாரணைகள் காத்திரமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. என்று ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் பேச்சாளர் ருபேர்ட் கொல்வில் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)




# நயினை நாகபூஷணி அம்மனுக்கு இரண்டாம் நாள்

## நம் குறைகள் தீர்க்கும் அன்னையே!

நயினையில் ஒரு கோயில் இருக்கிறது
அங்கு வீற்றிருக்கிறாள்
எங்கள் நாகபூஷணி அன்னையே
நம் குறைகள் எல்லாம்
தீர்கிறது
அது அவள் சந்நிதியில் என்றும்
உண்மையே
புதுமைகள் பல புரிந்திடுவாள்
தொழும் அடியவர்களின் பாவங்களைப்
போக்கிடுவாள்
அவளையே நாம் சரண்
புகுந்தால் அதிக வரம் வாங்கிடலாம்

சு.ஜெயரூபன் (பருத்தித்துறை)

## கதியின்றி அழுகின்றேன்...!

அகிலம் அரசாளும் அன்னையே
ஆதிபரா சக்தி நீயே
புவனம் போற்றுகின்ற புவனேஸ்வரியே
பூவிருந்த வல்லி சிவகாமி நீயே

அழுத விழி சிவந்து கிடக்குது
அம்மா உன் அன்பினை உள்ளம் அழைக்குது
பக்திப் பிரவாகத்தால் நெஞ்சம் உருகுது
பார்வதியின் அருள்தேடி இதயம் தவிக்குது

சொல்லி அழுவதற்கு சொந்தம் இல்லை
சொல்லப் போனால் உனையன்றி யாரும் இல்லை
கடல் தாண்டி தாள் பணிய நெஞ்சம் துடிக்குது
கதியின்றி அழுகின்றேன் கையேந்தி அணைத்திடு

வேலணையூர் பா.சசிகுமார்.

## நாகபூஷணி தாயே !

*லிங்கரூபினியாய் சர்ப்ப பூஷணியாய்*
*சுயம்பாய் முகம்காட்டி– அடியவர்க்கு*
*அருளும் எண்ணம் கொண்டு*
*அலைகடல் மேவி நின்றவளே*

*இளம்பிறை சூடிக்கொண்ட சிவனார்க்கு இனியவளாய்*
*இலங்கைத் திருநாட்டின் நாகக்கொடி உடையவளாய்*
*இல்லாமை நீக்கியே நல்வாழ்வை அருளம்மா*
*நாகபூஷணித் தாயே...*

பேரின்பநாதன் பரமநாதன் (வட்டுக்கோட்டை)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வல்வை -நெடியகாடு
# திருவருள்மிகு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் திருக்கோவில்

## புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ
## மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**எண்ணெய்க் காப்பு**
**ஆனி 15 ஆம் நாள் (29.06.2014)**
**ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணி -மாலை 4.00 மணிவரை**

**கும்பாபிஷேகம்**
**ஆனி 16 ஆம் நாள் (30.06.2014)**
**திங்கட்கிழமை காலை 9.30 மணி-11.00 மணிவரை.**

சிவபூமி என்று திருமூலரால் போற்றப்பட்ட இலங்கைத் திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தின் வடஎல்லையில் கடல் அன்னை தாலாட்ட பல தொன்மை வாய்ந்த திருக்கோவில்களை தன்னகத்தே கொண்டதும் சைவத்தமிழ் அறிஞர்களை தமிழுக்கு தந்ததும் கப்பற்கலையில் சிறந்து விளங்கியதுமான வல்வெட்டித்துறை மண்ணில் நடுநாயகமாய் வன்னி மரத்தை தலவிருட்சமாய் கொண்டு வீற்றிருந்து வேண்டுவோர் வேண்டும் வரமளிக்கும் நெடியகாட்டுத் திருச்சிற்றம்பல பிள்ளையாருக்கும் பஞ்ச தள இராஜ கோபுரத்துக்கும் நாகதம்பிரான், வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமான், நவக்கிரக தேவர்கள், மூலாதார கணபதி மூஷிக தேவர், பலிபீடம் வைரவப்பெருமான், சண்டேஸ்வரப் பெருமான் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும் ஸ்வஸ்தி நிகழும் மங்கலகரமான ஜயவருடம் ஆனித்திங்கள் 16 ஆம் நாள்(30.06.2014) திங்கட்கிழமை பூச நட்சத்திரமும் சித்தயோகமும் திருதியை திதியும் கூடிய மு.ப 9.30 மணிமுதல் 11 மணிவரையுள்ள சிங்க லக்கின சுப வேளையில் மஹா கும்பாபிஷேகம் நிகழ திருவருள் கைகூடியுள்ளது.

### ஆலய வரலாறு

பருத்தித்துறை பொன்னாலை வீதியில் வல்வெட்டித்துறை நகரின் கிழக்கு எல்லையிலே கேணியுடன் கூடிய மடாலயத்தில் ஆதிமூல விநாயகரை வைத்து வல்வெட்டித்துறையூரைச் சேர்ந்த திரு.ஆறுமுகத்தார் என்பவர் 17 ஆம் நூற்றாண்டில் பூசைகள் செய்து பராமரித்து வந்துள்ளார். காலப்போக்கில் ஊர்மக்களிடம் தினமும் பிடியரிசி வாங்கியும் அக்காலத்தில் வல்வையரின் பிரதான தொழிலான கப்பல் வணிகத்தில் ஈடுபட்டோரிடம் மகமைகள் வசூலித்தும் ஆலயம் சுண்ணாம்புக் கட்டடமாக தற்போதைய இடத்தில் கட்டப்பட்டது. பின் 20ஆம் நூற்றாண்டில் பொதுமக்களின் பங்களிப்புடனும் செல்வந்தர்களின் உபயத்துடனும் கற்கோவிலாக பரிவார மூர்த்தங்களுடன் கட்டப்பட்டு பல கும்பாபிஷேகங்களைக் கண்டது. அதேவழியில் தற்போது பொதுமக்கள் இல்லங்களில் சென்று பணம் வசூலித்தும் உபயகாரர்களின் பங்களிப்புடனும் புலம்பெயர் எம்மூரவரின் பங்களிப்புடனும் ஆனித்திங்கள் 16ஆம் நாள் (30.06.2014) திங்கள் அன்று புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மகா கும்பாபிஷேகம் நடைபெற எல்லாம் வல்ல நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் திருவருளால் கைகூடியுள்ளது.

### ஆலயப் பெயரின் சிறப்பம்சம்

திருச்சிற்றம்பலம் என்ற பதம் சிதம்பரத்தில் சிவபெருமான் பஞ்சகிருத்திய நடனம் புரியும் இடமே திருச்சிற்றம்பலமாகும். இங்கே நெடியகாடு என்னும் இடத்தையே திருச்சி ற்றம் பலமாகக் கொண்டு ஐங்கரப் பெருமான் திருத்தாண்டவம் புரிவதனால் திருச்சிற்றம்பலப்பிள்ளையார் என அழைக்கப்படுகின்றார். தற்போது இதனைக்குறிக்கும் விதமாக மூலஸ்தான சுவர்களில் பிள்ளையாரின் திருநடனத் தோற்றங்களும் வசந்த மண்டபச் சுவர்களில் சிதம்பர நடராஜரின் அற்புத நடனத் தோற்றங்களும் வரையப்பட்டு மிகுந்த கலையம்சத்துடன் மிளிர்கின்றது.

### ஆலயத்தின் விசேட சிறப்பம்சம்

இவ்வாலயத்தில் வன்னிமரம் தலவிருட்சமாகவும் பழைமைவாய்ந்த தீர்த்தக்கேணி அமைந்தது மட்டுமன்றி வருடாந்தம் சுமார் 20 உற்சவ மூர்த்திகள் பிள்ளையார் ஆலய தரிசனம் செய்வதுடன் எட்டு உற்சவ மூர்த்திகள் தீர்த்தமாடுவதற்காக ஊறணி சமுத்திரத்திற்கு எழுந்தருளி எம்பெருமான் ஆலயத்தில் தங்கி இளைப் பாறி மாலையின் பின் புறப்பட்டுச் செல்வது இவ்வாலயத்தின் விசேட சிறப்பம்சமாகும். அத்துடன் எம்பெருமான் மகோற்சவ தீர்த்தத் திருவிழாவின்போது ஊறணி சமுத்திரத்தில் தீர்த்தமாடி ஆலயவாசல் வந்து உட்செல்லாது நீண்ட பயணமாகி அன்னை முத்துமாரி வாசல் சென்று வணங்கி தொடர் ந்து வல்வை சிவன் ஆலயம் சென்று அங்கு தங்கி மாலையின் பின்பு தன் ஆலயம் திரும்பி அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என எல்லோருக்கும் உணர்த்தும் நெடியகாடு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கழலடி போற்றுவோம்.

## விழா சிறக்க வேண்டுகின்றோம்!

மின் அலங்கார வளைவுகள் மற்றும் எவ்வகையான
மின்சோடனை தேவைகட்கும்
**கணபதி மின் அமைப்பாளர்கள்**
நெடியகாடு, வல்வெட்டித்துறை
தொ.பே.இ. 077 8943560, 0770881424

**செல்வம் ஸ்ரோர்ஸ்**
வேம்படி,
வல்வெட்டித்துறை.

**சந்நிதியான் அழகுச் சோலை**
சகல விதமான அன்பளிப்புப் பொருட்களையும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
இல. 03, கே.கே.எஸ்.றோட்,
வல்வெட்டித்துறை.
தொ.பே.இ. 077 7965442

**அரிகரன் பல்பொருள் வாணிபம்**
பருத்தித்துறை வீதி,
ஊறணி, வல்வெட்டித்துறை
கடற்றொழில் உபகரணங்களும் விற்கப்படும்.

**நாகேஸ் ஸ்ரோர்ஸ்**
நெடியகாடு,
வல்வெட்டித்துறை
TP:- 077 6301833

**சிவகாமி இரும்பகம்**
யாழ்.வீதி,
வல்வெட்டித்துறை.

**சுரேந்திரா**
**பல்பொருள் வாணிபம்**
வேம்படி,
வல்வெட்டித்துறை.

விலையில் மலிவு தொழிலில் நிறைவு
**கோ.சி. ஆடையகம்**
யாழ்வீதி,
வல்வெட்டித்துறை.

**கிருஜா ஸ்ரோர்ஸ்**
பருத்தித்துறை வீதி,
வல்வெட்டித்துறை.

**ஜெயா கடலரசி**
மீன்பிடி உபகரண விற்பனை நிலையம்,
நவீன சந்தை, வல்வெட்டித்துறை.

Kalpana Studio
E-mail: Kalpanastudio@hotmail.com
No. 19, Modern market valvettithurai
Contact
077 1179272

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் புழுதியாற்றில் ஏற்று நீர்ப்பாசனம்



வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு இவ் ஆண்டிற்கான தனது பிரதான செயற்றிட்டங்களில் ஒன்றாக புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

32 மில்லியன் ரூபா உத்தேச மதிப்பீட்டைக்கொண்ட இந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் வட்டக்கச்சி மாயவனூரில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வடக்கு முதலவர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்துள்ளாா.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு மலையகத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்த மலையகத் தமிழ் மக்களே மாயவனூர் பகுதியில் அதிகம் வசித்து வருகின்றனர்.

அடிப்படை வாழ்வாதார வசதிகள் எதுவுமற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இம்மக்களை வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் துறைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கடந்த பெப்ரவரி மாதம் சந்தித்து அவர்களின குறைகளைக் கேட்டறிந்தார்.

மிகுந்த வரட்சி நிலவும் அப்பகுதியில் கிணறுகளில்கூடத் தண்ணீர் இல்லாத நிலையை அம்மக்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதையடுத்தே, புழுதியாற்றில் இருந்து மாயவனூருக்கு ஏற்று நீர்ப்பாசனத்தின் மூலம் நீரை விநியோகிக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மூன்று மாதங்களில் முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத்தின் மூலம் மாயவனூரில் 100 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் மேற்கொள்ளலாம். இதன் மூலம் 150 விவசாயக் குடும்பங்கள் பயனடையவுள்ளன.

அத்தோடு இப்பகுதிகளில் உள்ள கிணறுகளில் நீரின் ஊற்று கணிசமான அளவு அதிகரிக்கும் வாய்ப்பும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்ச்சியில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனோடு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு அமைச்சர்கள் பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா, வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் சு. பசுபதிப்பிள்ளை, ப.அரியரத்தினம், விவசாய அமைச்சின் செயலாளர் யு.எல்.எம்.ஹால்தீன், வடமாகாண நீர்ப்பாசனப்பணிப்பாளர் சோ.சிவபாதம், நீர்ப்பாசனப் பிரதிப்பணிப்பாளர் ந.சுதாகரன் மற்றும் மாயவனூர் பகுதியைச் சேர்ந்த மக்களும் கலந்துகொண்டிருந்தனர்.

புழுதியாற்றில் இருந்து வெளியேறும் நீர் வீணாகக் கடலில் கலந்து வந்ததால் விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தில் கடந்த 2001ஆம் ஆண்டு புழுதியாற்றுக்குக் குறுக்காக அணை கட்டப்பட்டு புழுதியாற்றுக் குளம் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(6)




## அண்ணா சிலையை புனரமைக்குக



(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன்குள ஸ்கந்தபுரம் வீதியிலுள்ள பழைமை வாய்ந்த அண்ணா சிலையை புனரமைக்குமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

30 வருட காலம் பழைமை வாய்ந்த குறித்த சிலை யுத்தத்தினால் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

எனினும், மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 4 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இச் சிலையை புனரமைக்கஎவரும்முன்வரவில்லை.

மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதும் கிராமங்களிலுள்ள முக்கியமான சிலைகள் இவ்வாறு கவனிக்கப்படாமலிருப்பதையிட்டு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே சேதமடைந்துள்ள அண்ணா சிலையை சம்பந்தப்பட்டோர் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (9-271)

## மின் இணைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன

(கண்டாவளை)


கிளிநொச்சி மாவட்டத்தின் முரசுமோட்டை கிராம சேவையாளர் பிரிவுக்கான மின்இணைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக இக்கிராம சேவையாளர் பிரிவிற்கான மின்சாரம் வழங்குவதற்கு வேண்டிய மின் இணைப்பு வேலைகள் இடம்பெற்று வந்தன.

இந்நிலையில்தற்போதுவேலைகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளமையால் 330 வரையான குடும்பங்கள் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(9-263)

## பார்வையற்றோருக்கு உலர் உணவு பொருட்கள்




வன்னி பார்வையற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் எழுகை அமைப் பின் நிதியினூடாக இப்பகுதியில் பார்வையற்றோருக்கு நேற்று முன்தினம் உலர்உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி பார்வையற்ற 150 பேருக்கு தலா 3ஆயிரத்து 500 ரூபா பெறு மதியான உலர் உணவு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு சுழற்சி முறையில் பார்வையற்றவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது. (9-254)

## தேசிய மட்டத்திற்கு தெரிவு



கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தைச் சேர்ந்த உதயகாந்தன் குயின்சிலி 15 வயதுப் பிரிவு 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார். (9-271)

## வலம்புரி செய்தியையடுத்து

## விவசாய காணிகளின் மண் ஏற்றும் செயற்பாடு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது

(பூநகரி)

பூநகரி வாடியடி 66 ஆவது படைமுகாமின் பின்புறமாகவுள்ள வயற்காணிகளின் மண் வேறிடத்திற்கு ஏற்றப்பட்டுக் கொண்டிருந்த செயற்பாடு வலம்புரி செய்தியையடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்குறித்த விவசாய காணிகளிலிருந்து அகழப்பட்ட மண்ணைக் கொண்டே பாரிய மண் அணைகள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் கடந்த ஓரிரு வாரங்களாக பாரிய இயந்திரங்கள் மூலம் அம்மண் அணைகள் இடிக்கப்பட்டு மண் வேறிடங்களுக்கு ஏற்றிச் செல்லப்பட்டது.

இவ்விதமாக விவசாயிகளின் காணிகளில் செய்கை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதனால் இதனை நிறுத்த வேண்டுமென வலியுறுத்தி கடந்த வாரம் வலம்புரி பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இதன் பிரகாரம் பூநகரி கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தரினால் உரிய அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டதையடுத்து மண் அணைகள உடைக்கப்பட்டு மண் வேறிடத்திற்கு கொண்டு செல்லப்படும் செயற்பாடு நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் எஞ்சியுள்ள மண் அணைகளை உடைத்து தமது வயற்காணிகளில் அம்மண்ணை பரவிசெய்கை மேற்கொள்ள உதவ வேண்டுமென வயற்காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-84)

## குடும்பத் தலைவரைப் பணயம் வைத்து பூநகரியில் துணிகர கொள்ளை

(பூநகரி)

குடும்பத்தலைவரைப் பணயம் வைத்து பெறுமதியான நகைகளும் பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 2 மணியளவில் பூநகரி வாடியடி நகருக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சம்பவதினம் வாள்கள், பொல்லுகளுடன் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் குடும்பத் தலைவரை அச்சுறுத்தி அவரது மனைவி அணிந்திருந்த நகைகளையும் வீட்டிலிருந்த நகைகளையும் ஒரு தொகைப் பணத்தினையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பூநகரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், நேற்றைய தினம் அப்பகுதியைச் சுற்றி பெரும் தேடுதல் வேட்டைகள் இடம்பெற்றுள்ளன.

பூநகரி பிரதேசத்தில் மிகக் குறுகிய காலத்தில் இடம்பெற்ற மூன்றாது கொள்ளைச் சம்பவமாக இது காணப்படுவதால் மக்கள் பீதியுடன் உள்ளனர்.

சென்றவாரம் சோபாலபிட்டி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் நள்ளிரவு இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் ஒன்றரை இலட்சம் பெறுமதியான பொருட்களும் அதற்கு முன் ஆலங்கேணியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் 12 இலட்சம் பெறுமதியான நகை, பணம் என்பனவும் சூறையாடப்பட்டுள்ளன.

எனினும் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. நேற்று முன்தினம் வாடியடியிலுள்ள வீட்டில் இடம்பெற்ற பகுதியில் 66 ஆவது இராணுவ படை முகாமும் பொலிஸ் நிலையமும் உள்ள நிலையிலே இத்துணிகர கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் பெரும்பாலான மனிதர்களை தன்னம்பிக்கைதான் பாதுகாத்து வருகிறது.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## விசாரணைக்கு ஐ.நா தயார் நாங்கள் தயாரா?

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான ஏற்பாடுகளை ஐ.நா சபை மேற்கொண்டு வருகின்றது.

ஐ.நா சபை, விசாரணை நடத்துவதற்கு ஒரு போதும் அனுமதியளிக்க மாட்டோம் என்பதில் அரச தரப்பு இறுக்கமாக இருக்க, விசாரணைக் குழு உறுப்பினர்களை ஐ.நா சபை நியமித்திருப்பதும் அதற்கு அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் ஆதரவு வழங்கியிருப்பதும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்களாகும்.

இதேநேரம், ஐ.நா சபை நடத்தும் விசாரணையைத் தடுப்பது அல்லது விசாரணை முழுமையாக நடைபெறாமல் செய்வது என்பது தொடர்பில் அரசின் நடவடிக்கைகள் அதி தீவிரமாக உள்ளன.

விசாரணைக்குச் சென்று சாட்சியமளிப்பது குற்றம் என்பது போன்ற தீர்மானங்களை கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளும் நடக்கலாம் என்று எதிர்பார்ப்பதும் அவசியம்.

ஐ.நா விசாரணைக்குழுவில் சாட்சிமளிப்பதை தடுப்பது மனித உரிமை மீறல் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறியிருந்தாலும் அவரின் கருத்து சபை ஏறும் என்று எதிர்பார்க்க முடியாது.

எதுவாயினும் ஐ.நா சபை முன்னெடுக்கவுள்ள விசாரணைக்குழுவில் சாட்சியம் அளிப்பதைத் தடுப்பது என்ற விடயத்தில் இலங்கை அரசு மிகவும் கவனமாக இருக்கும் என்பது தெளிவான உண்மை.

சட்டங்கள், தீர்ப்புகள் மூலமாக சாட்சியங்கள் தடுக்கப்படுமாயின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? என்பது குறித்து ஐ.நா சபை ஆராய்வதை விட, தமிழர் தரப்பு ஆராய்வது அவசியம். இருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு– வடக்கு மாகாண அரசு என்பவற்றுக்கு விழாக்களில் கலந்து கொள்ளவே நேரமில்லை. நிலைமை இதுவாக இருக்கும் போது, ஐ.நா சபையின் விசாரணை பற்றி எல்லாம் சிந்திப்பதற்கு ஏது நேரம்?

ஐ.நா சபையின் விசாரணை நடக்கும் போது; அதற்குத் தடை விதிக்கப்படும்போது அறிக்கை விட்டால் போதும் என்பது தமிழ்த் தலைமையின் நிலைப்பாடு.

எங்களைப் பொறுத்த வரை அறிக்கைவிடுவதிலும் கண்டனம் தெரிவிப்பதிலுமே எங்கள் காலம் கடந்து போய்க்கொண்டிருக்கின்றது. ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏதேனும் எடுக்கிறோமா? என்றால் எதுவுமேயில்லை.

இதற்கான அடிப்படைக்காரணம், பொறுப்பு வாய்ந்த நிர்வாகக் கட்டமைப்புகள் எங்கள் அரசியல் தலைமைகளில் இல்லாததேயாகும்.

அரசியல் தீர்வு தொடர்பான நிபுணத்துவக் குழு, போர்க்குற்ற விசாரணைகளைக் கையாளும் மதிநுட்ப சபை, இளைஞர்களின் எதிர்கால வாழ்க்கையை செம்மைப்படுத்தும் குழுமம், தமிழர் தாயகத்தின் நிலைத்த அபிவிருத்தித் திட்டத்தை வகுக்கும் தொழில் நுட்பக்குழு, அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பரப்புரைச் செயலகம் என எவையேனும் எங்கள் அரசியல் தலைமையிடம் உண்டா?

இவைகள் எதுவும் இல்லாமல் அரசியல் நடத்தும் வெறுமைத்தனம் எங்கள் இனத்தின் சுபீட்சத்துக்கு எவ்வகையிலும் உதவ முடியாது.

ஆக, ஐ.நா சபை முன்னெடுக்கும் விசாரணையிலேனும் தமிழ்த் தலைமைகள் விழிப்பாக இருப்பது மிக மிக அவசியம்.

# அகவை 90 இல் கால் பதிக்கும் பெருந்தகையர்

## மேதகு யோசப் பிலேந்திரம்



பெருந்தகையர் பட்டத்தைத் தாங்கியவராக இம்மாதம் தனது 90ஆவது அகவையில் கால் பதிக்கும் பிரித்தானியாவில் வாழும் யாழ்.மறை மாவட்டத்தைச் சேர்ந்த பெருந்தகையர் மேதகு யோசப் பிலேந்திரம் அவர்களை இறை ஆசீர் வேண்டி வாழ்த்துகிறோம்.

இவர் வத்திக்கான் திருப்பீடத்தினால் புனித பெரிய கிரகோரியார் பாப்பறை சபை பெருந்தகையர் (Knighthood of the Pontifical Order of Saint Gregory the Great) பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர்.

வத்திக்கான் தலைமைப்பீடம் நேர்மையான, தூய்மையான அர்ப்பணம்மிக்க வாழ்வினால் திருச்சபையின் தலைமைப் பீடத்திற்கும் திருச்சபைக்கும் சமூகத்துக்கும் பணிவுடனும் பிரமாணிக்கத்துடனும் பணிபுரிந்து மக்கள் மத்தியிலும் திருப்பீடத்தின் மத்தியிலும் மிக்க மதிப்பும் அபிமானமுமுள்ள கனவான்களைத் தெரிவு செய்து இந்தப் பட்டத்தை வழங்கிக் கௌரவிக்கின்றது.

மேதகு யோசப் பிலேந்திரத்தையும் இப்பட்டத்தைப் பெற தகுதியானவராகக் கருதி கடந்த 2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி வத்திக்கான் திருப்பீடம் அவரைக் கௌரவித்தது.

மேதகு யோசப் பிலேந்திரம் லண்டன் மாநகரில் மரியாயின் சேனை அங்கத்தவராகவும் ஏழைகளுக்காக பணிபுரியும் சபையில் இணைந்தவராகவும் இருந்து திருச்சபைக்கும் சமூகத்துக்கும் அளப்பரிய சேவையாற்றியுள்ளார்.

மிகவும் நெருக்கடியான நிலையில் இருந்த ஆபிரிக்க நாடுகளான உகண்டா, தன்சானியா ஆகிய நாடுகளில் இறை அரசைக் கட்டியெழுப்பும் பணியினை இந்நிலைகளில் இருந்து கொண்டு மிகவும் அர்ப்பணத்தோடு முன்னெடுத்தவர்.

அதுமட்டுமல்லாமல் தனது தாய் மண்ணினதும் யாழ்.மறை மாவட்டத்தினதும் பல தேவைகளை உணர்ந்தவராக அவற்றை தீர்த்துவைக்கும் பணிகளையும் தாராள மனதோடு புரிந்திருக்கின்றார்.

குறிப்பாக யுத்த கால அனர்த்தங்களினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாணவர்களின் கல்வித் தேவைகளைப்பூர்த்தி செய்ய ஆர்வத்தோடு செயற்பட்டார்.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் கல்வி வளங்களை அதிகரிக்க பல உதவிகளைப் புரிந்ததோடு போரினால் சேதமடைந்த கொழும்புத்துறையிலுள்ள புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் புனரமைப்புக்கு குறிப்பாக அங்கு உருவாக்கம் பெறும் குரு மாணவர்கள் பயன்படுத்தும் நூலக வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளார். குருமட நூலகத்துக்குத் தேவையான பலபயனுள்ளநூல்களை லண்டனிலிருந்து சேகரித்து அனுப்பிவைத்தார்.

வத்திக்கான் தலைமைப்பீடத்தோடு மிக நெருங்கிய உறவிலே பணிபுரிந்த மேதகு யோசப் பிலேந்திரம் அண்மையில் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்ட திருத்தந்தையர்கள் புனித 23ஆம் அருளப்பர், புனித 2ஆம் அருளப்பர் சின்னப்பர் ஆகியோரின் அபிமானத்தைப் பெற்றவராவார்.

இவர்கள் இருவரையும் நேரடியாகச் சந்தித்து ஆசிபெற்று தன் பணிகளை சிறப்பாக ஆற்றினார். புனித 23ஆம் அருளப்பரினால் பொது நிலையினருக்கு வழங்கப்படக்கூடிய அதியுயர் விருது வழங்கப்பட்டு மோதிரம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்படும் பாக்கியத்தையும் இவர் பெற்றிருக்கின்றார்.

திருச்சபையில் பொதுநிலையினரின் பங்களிப்பு எப்படியாக அமைய வேண்டுமென்பதற்கு மேதகு யோசப் பிலேந்திரத்தை ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளமுடியும்.

தனது அமைதியான பிரமாணிக்கமுள்ள பணிவாழ்வினால் பல கௌரவங்களைப் பெற்ற இவருக்கு யாழ். மறை மாவட்டம் தனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றது.

மேதகு யோசப் பிலேந்திரத்திற்காகவும் அவருடைய பாசமிகு குடும்ப உறவுகள் அனைவருக்காகவும் இறைவனின் ஆசீரை இறைஞ்சி நிற்கிறோம்.

அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம்

## ஐயன் தாண்டவம் இறுவெட்டு வெளியீடு

கோண்டாவில் வடக்கு சாமுண்டா தேவி சமேத ஸ்ரீஞானவைரவர் ஆலயத்தின் ஐயன் வைரவன் தாண்டவம் இறுவெட்டு வெளியீட்டு விழா வாகீஸ்வரி ஞானவைரவர் விழா கலாசார மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் மு.கிரிதரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வெளியீட்டு விழாவில் ஆசியுரைகளை ஆலய பிரதமகுரு தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலய தலைவர் ஆகியோர் வழங்குவர்.

வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் சி.ரமணராஜா வழங்க மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இரா.இராஜேஸ்வரன் வழங்குவார்.

இறுவெட்டினை குமாரசாமி குடும்பத்தினர் வழங்கி வைப்பர். (அ)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### சாதனையால் வேதனையைத் தீர்க்கிறோமில்லை



மதிக்குமதி கொடுப்பவனை மதிக்கிறோமில்லை
மண்ணாசை பெண்ணாசையால் மாய்க்கிறோமையே
விதியினை வெல்லவழி காண்கிறோமில்லை
விதிவிதியென்று சொல்லி விளங்குகிறோமையே

கண்ணுக்குக் கண்ணை நாம் காண்கிறோமில்லைக்
காதுக்குக் காதுதன்னைக் கருதுகிறோமில்லை
விண்ணைப்போல உலகத்தில் விளங்குகிறோமில்லை
வேதாந்த சித்தாந்தம் படிக்கிறோமில்லை.

# புனிதர்கள் பேதுரு, பவுல் போல நாமும் இயேசுவுக்கு சான்று பகர தயாரா?

இன்று திருச்சபை புனிதர்கள் பேதுரு, பவுல் பெருவிழாவை கொண்டாடுகிறது. இவ்இருவரும் திருச்சபையின இரு பெரும் தூண்களாகக் கருதப்படுகின்றனர். கிறிஸ்தவ பாரம்பரியத்தில் நற்செய்தியின் முழு வடிவமாக, இணைபிரியாத இருவராகக் கருதப்படுகின்றனர். கலிலேயக் கடல் பகுதியில் வாழ்ந்த ஓர் எளிய மீன்பிடித் தொழிலாளரும், புறவினத்தாரின் திருத்தூதரும் உரோம் நகரின் வரலாற்றில் ஆழமாய் பதிந்த இரு பெரும் நாயகர்கள் இவர்கள்.

## பரமபிதா காட்டிய பாதை

பேதுருவும், பவுலும் பல வழிகளில் வேறுபட்டவர்களாய் இருந்தாலும் கிறிஸ்துவைப் பின்பற்றியதால் இணை பிரியாமல் இணைக்கப்பட்டனர். பேதுருவும், கிறிஸ்துவால் “பாறை” என்றும் “சாத்தான்” என்றும் அழைக்கப்பட்டார். அதாவது இயேசு மெசியா என்ற உண்மையை, இறைவனின் தூண்டுதலால் பேதுரு கூறியபோது, அவரைப் பாறை என்றும், மனித அறிவைக்கொண்டு இயேசுவின் பாடுகள் நிகழக்கூடாது என்று பேதுரு சொன்னபோது அவரைச் “சாத்தான்” என்றும் இயேசு அழைக்கிறார் என்பதை நாம் காண்கின்றோம்.

பாறை, உறுதியான அடித்தளமாக அமையா என்பது எமக்குதெரியும் ஆனால், அந்த பாறை நாம் எமது இலக்கு நோக்கிச் செல்லும் பாதையின் நடுவில் இருந்தால் நம்மைத் தடுமாறி விழச்செய்யும் தடைக்கல்லாக அது மாறிவிடும்.

இன்று நாம் கொண்டாடும் புனித பேதுரு, புனித பவுல் இருவருமே இரு துருவங்களாக, அதே வேளையில் திருச்சபையின் சரிநிகர் வணக்கம் பெறும் இரு தூண்களாகத் திகழ்வதை நாம் பார்க்கலாம்

பேதுருவுக்கும், பவுலுக்கும் உள்ள இடைவெளி மிகப்பெரியது. வேற்றுமைகள் மிக ஏராளம்: பவுல் படித்தவர், பேதுரு பாமரர். பவ்ல் திருச்சட்டம் அறிந்த பரிசேயர், பேதுரு திருச்சட்டம் அறியாத மீனவர். பவுல் அறிவாற்றல் மிக்கவர், பேதுரு உணர்ச்சிமயமானவர். பவுல் வரலாற்று இயேசுவைக் கண்டதேயில்லை. உயிர்த்த இயேசுவை மட்டுமே அனுபவித்தவர். பேதுரு இயேசு வோடு 3 ஆண்டுகள் கூடவே இருந்தவர். பவுல் பயணங்கள் பல செய்து புற இனத்தாருக்கு நற்செய்தி அறிவித்தவர். பேதுரு யூதர்களுக்கு மட்டுமே அதிகமாகப் போதித்தவர். இருப்பினும், இருவரையும் திருச்சபை ஒன்றாகவே மதிக்கிறது, வணங்குகிறது. காரணம், இருவரும் இயேசு மீது கொண்ட அளப்பரிய பற்று, அதை முனனிட்டு மேற்கொண்ட உழைப்பு, ஆற் றிய தியாகங்கள். அவர்களின் உழைப்பினாலும், சான்றினாலுமே இன்று திருச்சபை உலகெங்கும் தழைத்து நிற்கிறது. இவர்களைப்போல நாமும் இயேசுவுக்கு சான்று பகர.தயாரா?



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.பி.எல் கிரிக்கெட் இறுதிப் போட்டி; சென்றலைட்ஸ் - கொக்குவில் கே.சி.சி.சி

## இன்று பலப் பரீட்சை

KCCC SPORTS CLUB



CENTRALITES SPORTS CLUB



யாழ்ப்பாணம் பிறிமியர் லீக் என்று அழைக்கப்படும் ஜே.பி.எல் இருபது - 20 துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியினை (கொக்குவில் கே.சி.சி.சி.) எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது.

யுவ பிரண்ட்ஸ் பவுண்டேஸன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் இந்த இருபது - 20 சுற்றுப்போட்டியானது இரண்டாவது ஆண்டாக கடந்த மே மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமானமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்த 18 துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றியிருந்ததுடன், நான்கு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டு போட்டிகள் லீக் முறையில் இடம்பெற்று ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற அணிகள் காலிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

இப் பருவகாலத்தின் சிறப்புச் சுற்றுப் போட்டியாக நடத்தப்படும் பெண்களுக்கான அணிக்கு ஆறு பேர் கொண்ட சுற்றுப் போட்டிகளின் இறுதிப்போட்டியும் அன்றைய தினம் நடைபெறவுள்ளது.

இவற்றுக்கு முன்னதாக காலை 8 மணிக்கு 3 ஆவது இடத்திற்கான போட்டியும் நடைபெறவுள்ளது. இதில் பற்றிசியன் அணியும் தெல்லிப் பழை யூனியன் அணியும் மோதவுள்ளன. (க)

## இன்றைய போட்டிகள்



வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட **ஹென்றீசியன் பிறிமியர் லீக்** மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெறவுள்ள முதலாவது போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைமகள் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதனையடுத்து பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெறவுள்ள இரண்டாவது போட்டியில் கரவைச் சுடர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு பாரதி விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் தும்பளை கருணை உள்ளம், விண்மீன் நற்பணி மன்ற அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான அணிக்கு ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி வல்வை ரெயின்போ மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆதிசக்தி A விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து செஞ்சுடர் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதன் பின்னர் பிற்பகல் 4.30 மணிக்கு சென்.சேவியஸ் A விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. (க)


# பல்கலைக்கழக வெற்றிக்கிண்ணம்; யாழ்.சென்றல் அணி சம்பியன்

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையின் அழைக்கப்பட்ட நான்கு கழக அணிகளுக்கிடையிலான துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இப் போட்டியில் யாழ்.சென்றல் அணி, யாழ்.பல்கலைக்கழக அணியை 61 ஓட்டங்களால் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் அணி 50 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 292 ஓட்டங்களைப் பெற்றது. சுதர்ஸன் ஆட்டமிழக்காது 60, கனிஸ்ரன் 47, காலெப் 41, யசின்தன் 37, திருக்குமரன் 31 ஓட்டங்களைப் பெற்றனர்.

அச்சுதன், தரணிதரன் தலா 2 இலக்குகளையும் ரொமேஸ், தசின்தன் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி 45.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் விதுஸ்- 55, பிரசங்கர்- 31, விதுபாலா, தசின்தன் தலா 27, அச்சுதன்- 21 ஓட்டங்களைப் பெற்றனர். திருக்குமரன், யசின்தன் தலா 3 இலக்கினையும், றொகான் 2 இலக்கினையும் சுபாதீஸ் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.



யாழ்.பல்கலைக்கழக வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியை வீழ்த்தி யாழ். சென்றல் அணி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

யாழ்.சென்றல் அணியை சார்ந்த சுதர்ஸன் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் திருக்குமரன் சிறந்த பந்து வீச்சாளராகவும் யசின்தன் சிறந்த வீரராகவும் பல்கலைக்கழக அணியைச் சார்ந்த விதுஸ் சிறந்த பந்து தடுப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண வர்த்தக வங்கி பிராந்திய முகாமையாளர் எஸ்.பி.ரஜிவன் பரிசில்களை வழங்கினார். (க)

# கொக்குவில் கே.சி.சி.சி. வெற்றி



ஜே.பி.எல். போட்டிகள யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அரையிறுதிப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணிவெற்றிபெற்று இறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. இப்போட்டியில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியும் மோதியது.

நாணயசுழற்சியில்வென்ற கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவுசெய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களையே பெற்றது. இதில் உமாநாத் 27 ஓட்டங்களையும், ஜெயரூபன் 13 ஓட்டங்களையும் ஜனுதாஷ் 11 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். உதிரிகளாக 18 ஓட்டங்கள் கிடைத்தன.


பந்துவீச்சில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் நோபேர்ட் 7 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் லிவிங்டன் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் அஜித்டர்வின், நிதர்ஷன், கிளிங்டன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 113 என்னும் இலகுவான வெற்றி இலக்கோடு துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியின் பந்துவீச்சில் நிலை குலைந்து 16.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 64 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. இதில் டியூட்டர் 14 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 15 ஓட்டங்கள் கிடைத்தன.

பந்துவீச்சில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி சார்பில் ஜனுதாஷ் 6 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் பவி 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ராகுலன் 10 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சிலோஜன் மற்றும் சாம்பவன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

போட்டியின்ஆட்டநாயகனாக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியின் ஜனுதாஷ் தெரிவானார். இந்த வெற்றிமூலம் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி இரண்டாவது தடவையாகவும் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (க-23)

# தேசியமட்ட கராத்தே போட்டி; பளை மத்திய கல்லூரி மாணவர்கள் தெரிவு



பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட கராத்தே போட்டி அண்மையில் வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் பளை மத்திய கல்லூரி மாணவர்கள் 3 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் பதக்கங்களை வென்று பளை மத்திய கல்லூரி மாணவர்கள் கராத்தே போட்டியில் தேசிய மட்டத்தில் முதல் முறையாக கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றி பெற்ற மாணவர் விபரம்

15 வயதுக் குழு காட்டாவில் ர.சஜீத் வி.சதுர்ஷன் சு.சஞ்ஜீபன் ஆகியோர் தங்கமும் குமித்தே 15 வயது பிரிவில் பொ.சஞ்சீபன் வெள்ளியும் குமித்தே 17 வயது பிரிவில் த.தனுஷன் வெண்கலமும் வென்றனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுடன் அதிபர் எஸ். பாலகிருஸ்ணன், பிரதி அதிபர் பு.தயாபரன், கராத்தே பொறுப்பாசிரியர் வ.ஜெகநாதன், கராத்தே பிரதம பயிற்சி ஆசிரியர் சென்.சே.விஜயராஜ் மற்றும் கராத்தே ஆசிரியர் பிரபாகரன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவிபிள்ளை...

யாற்றிய, நவநீதம்பிள்ளையின் பணிக்காலம் இன்னும் எட்டு வாரங்களில் முடிவடையவுள்ளது.

இந்நிலையில், நேற்றுமுன் தினம் நிறைவடைந்த ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 26-வது அமர்வில் அவருக்குப் பிரியுபசாரம் அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியை, ஜெனிவாவில் உள்ள ஐ.நா பணியகத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் மைக்கேல் முல்லர் வாசித்தார்.

நவநீதம்பிள்ளை ஒரு அசாதாரணமான மனித உரிமை ஆணையாளராகப் பணியாற்றியுள்ளதாகவும், நம்பகத்துடனும், உலகில் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் அவர் பாடுபட்டவர் என்றும் பான் கீ மூன் தெரிவித்திருந்தார்.

அதையடுத்து நவநீதம்பிள்ளையின் பணியைப் பாராட்டியும், அவரது எதிர்காலம் சிறப்பாக அமைய வாழ்த்தியும், பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் உரையாற்றினர்.

இறுதியில், தனக்கு ஒத்துழைப்பு வழங்கிய நாடுகளுக்கும், பிரதிநிதிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்ட நவநீதமபிள்ளை, தன் மீது அன்பு பாராட்டியதற்கும் நன்றி தெரிவித்தார். (செ-11)

## மனித...

கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் குழுவில் அஸ்மா ஜஹாங்கீர், சில்வியா கார்ட்ரைட் மற்றும் மார்டி அதிசாரி ஆகியோரைக் கொண்ட வலுவான நிபுணர் குழுவொன்றை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம் நியமித்துள்ளது.

மனிதவுரிமைகள் விவகாரங்களின் தற்போது இலங்கை பின்நோக்கிச் சென்று விட்டது.

அங்கு மனிதவுரிமைகளை மேம்படுத்தப்பட வேண்டும். இந்த நடவடிக்கைளிற்காக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக்கு இலங்கை முழுமையாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# மரண அறிவித்தல்



## கிருஷ்ணர் மகாலிங்கம்

போயிட்டியைப் பிறப்பிடமாகவும், கீரிமலையை வதிவிடமாகவும் முகாந்தர வீதி (காங்கேயன் வெதுப்பகம் அருகில்) மல்லாகத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் மகாலிங்கம் நேற்று (28.06.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் சின்னாச்சிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாதர்-சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற சின்னம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, செல்லம்மா, இராசம்மா மற்றும் நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் உதயகுமார், சிவகுமார் (கணக்காளர்-வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம், மருதங்கேணி), ஜெயக்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர்-சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, உடுவில்), சசிகுமார் (பிரான்ஸ்), இந்திரகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபைதா, பிரதீபா (விரிவுரையாளர் -விலங்கியல்துறை-யாழ்.பல்கலைக்கழகம்), கிரியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பரணிகா, துளசிகன், தரணிகன், திருவருண் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.06.2014) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காங்கேயன் பேக்கரி அருகில்,
முகாந்தரம் வீதி, மல்லாகம்.

தகவல்:குடும்பத்தினர்
0772389625, 0779459307, 0212242192

(6985)

## சிறுபான்மை...

யாழ்.வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா நேற்றுக்காலை கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

வடமராட்சி என்பது அறிவுக் கூர்மை உடையோருக்குப் பெயர் போன இடம். அங்கு அமைந்திருக்கும இந்து மகளிர் கல்லூரியில் பரிசளிப்பு விழா நடக்கின்றதென்றால் அவ்வாறான அறிவுக் கூர்மை உடையவர்களுள் அறிவுக் கூர்மை உடையவர்களைக் கௌரவிக்கும் ஒரு நிகழ்வாக அமையும் என்றதாலேயே மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றிருக்கும் உலகக்காட்சி, வல்லரசுகளின் நிலை இன்னும் சில வருடங்களில் தொடர்ந்து இருக்குமோ என்பது கேள்விக் குறியாகி வருகிறது. அமெரிக்கா திரில்லியன் டொலர்ஸ் கணக்கில் கடன்பட்டுள்ளது. சீனாவின் வெளிநாட்டு இருப்புச் சொத்துகள் நாளாந்தம் பன்மடங்காகக் கூடிக் கொண்டு வருகின்றன. ஸ்திரமான பொருளாதார முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்ட மோடி அரசாங்கம் தற்பொழுது இந் தியாவில் வந்துள்ளது.

எம் மாணவச் செல்வங்களும் அவர்களின் பெற்றோர்களும் நன்றாகப் படிக்க வேண்டும், பரீட்சைகளில் சித்தி எய்தி மேலை நாடுகளுக்குச் செல்ல வேண்டும், நன்றாக உழைக்க வேண்டும், தொழிலில்நல்ல பெயர் பெற வேண்டும், மேலை நாடுகளில் சொகுசு வாழ்க்கை வாழ வேண்டும் என்று தான் இன்னும் நினைக்கின்றனர். ஆனால் அங்கிருக்கும் நிலை மாறத் தொடங்கினால் என்ன நடக்கும் என்பதை எவருமே கூற முடியாது.

முன்னர் ஏன் தமிழர்கள் இலங்கையின் தெற்கில் இருந்து விரட்டப்பட்டார்கள்? இன்று ஏன் முஸ்லிம்கள் விரட்டப் படுகின்றார்கள்? சிறுபான்மையினரால் தமக்கு அச்சுறுத்தல்கள் நிகழ்கின்றன, போட்டிகள் உருவாகின்றன அல்லது நிகழக் கூடும் என்று பெரும்பான்மையினர் நினைத்தால் உடனே சிறுபான்மையினரைத் துன்புறுத்தத் தொடங்கி விடுவார்கள். முன்னர் தமிழர்கள் கல்வியில், சிறந்த அரசாங்க உத்தியோகங்களில் பெரும பான்மை இடங்களைக் கைப்பற்றி இருந்தார்கள். இதனால் தான் தமிழர்களை விரட்ட 1958-ம் ஆண்டு தொடக்கம் கலவரங்கள் தெற்கில் வெடி த்தன. 1983-ல் முற்றாக வெடித்தது.

இன்று முஸ்லிம்கள் பொருளாதார ரீதியாக முன்னேறி வருவதைக் கண்டதும் பெரும்பான்மையினருக்கு அதைப் பொறுக்க முடியாமல் இருக்கின்றது. அடித்துத் துரத்தப் பார்க்கின்றனர். தொழிலிடங்களைத் தீயிற்கு இரையாக்குகின்றனர்.

இதை ஏன் கூறுகின்றேன் என்றால் நாம் ஒன்றை மனதில் வைத்து சிந்திக்க வேண்டும். மேலைத் தேசங்களில் 12-ம் வகுப்புக்குப் பிறகு உயர் கல்வி நாடுவோர் தொகை அங்குள்ள உள்ளூர் வாசிகளினுள் மிகமிகக் குறைவு. அவர்களின் எல்லா உயர் கல்வித் தொழில்களையும் இந்தியரும், இலங்கையரும், வேறு நாட்டினரும் தம் கைவசமாக்கியுள்ள இந்தத் தருணத்தில் பொருளாதார சரிவை மேலைத் தேசங்கள் எதிர்நோக்க வேண்டி வந்தால் என்ன நடக்கும்? உள்ளூர் மக்களின் தொழில்களுக்குப் பாதிப்பு ஏற்படும். அப்போது வெளிநாடுகளில் இருந்து வந்து குடியேறிய எம்மவர்கள் மீது கோபம் ஏற்படக் கூடும். இன்று இந் நாட்டின் தெற்கில் எவ்வாறு அப்பேர்ப்பட்ட கோபம் பிரதிபலிக்கப்படுகிறதோ அதே போல் மேலைத் தேசங்களிலும் அவர்களின் கோபம் மேலெழுந்து வந்தால் என்ன நடக்கும்? எம்மவரைத் தமது சொந்த நாடுகளைத் தேடிச் செல்ல அப்பேர்ப்பட்ட ஒரு நிகழ்வு வழிவகுக்கும்.

மேலும் எங்கள் மாணவ மாணவியர் உயர் கல்வியின் பின்னர் மேலைத் தேசங்களுக்குச் சென்று குடியேற வேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிட வேண்டும் என்று கூறுகின்றேன். எமது நாட்டில் இருந்தே மக்களுக்குத் துணையாக வாழ்க்கை நடத்த வேண்டும் என்று கூற ஆசைப் படுகின்றேன். அதுவும் வடகிழக்கு மாகாணங்களில் இத் தேவையானது முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு முக்கியமாகி வருகின்றது.

எமது அரசியல் நிலையை நாம் முற்றாக அறிந்து எமது சமூகம் என்ன விதத்தில் கல்வியால் பயன் பெற முடியும் என்ற கேள்விக்குப் பதில் ஊட்டுவதாக எங்கள் கல்விப் போதிப்பு அமைய வேண்டும். தனி மனித மேம்பாட்டை வலியுறுத்தும் அதேநேரம் சமூகக் கடப்பாட்டையும் உங்கள் முன் பரிசீலனைக்கு வைக்கின்றேன்.

இன்று பல விதங்களிலும் எமது அதிகாரங்கள் பறிக்கப்பட்ட நிலையில் எமது வட மாகாண சபை கூட இப் பேர்ப்பட்ட கைங்கரியத்தில தான் ஈடு பட்டுக் கொண்டிருக்கின்றது. போரினால் பாதிக்கப்பட்டவர்கள் பலர் வறுமைக் கோட்டுக்குள் வாழவசதியின்றி வாழ்கின்றார்கள். அவர்களுக்கு பாரிய உதவியை அரசாங்கம் பெற்றுக் கொடுக்கும் அல்லது அந்த உதவியைச் செய்ய எமக்கு அதிகாரம் வழங்கும் என்று எதிர்பார்த்திராது உதவிக்கரங்களை எவர் நீட்டுகின்றனரோ அவர்களின் உதவியுடன் மக்களின் நாளாந்தத் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்து வருகின்றோம். அவர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி பெற ஆவன செய்கின்றோம்.

ஆகவே எமது சுற்றுச் சூழலின் தேவைகளைப் புரிந்து கொண்டு கல்வியைப் பெறுவது சாலச் சிறந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6,10)

## மிதிவெடி...

புரத்தைச் சேர்ந்த மகாலிங்கம் நகுலேஸ்வரன் (வயது 35) என்பவரே காயமடைந்தவராவார். நேற்று முற்பகல் 10.45 மணியளவில் வழமைபோன்று முகமாலைப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஹலோ ட்ரஸ்ட் பணியாளர், அது தவறுதலாக வெடித்ததில் காயமடைந்தார். உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (செ-6)

## பௌத்த...

பிரதேசத்தில் பதற்றம் அதிகரித்து வன்முறைகள் அரங்கேற்றப்பட்டன.

இலங்கையின் சிறுபான்மை இனம் ஒன்றுக்கு எதிரான அண்மைய தாக்குதல்கள், கடும் போக்கு பொது பல சேனா, பாதுகாப்பு படைகள் மற்றும் ராஜபக்ஷவினர் இடையிலான உறவுகளை கோடிட்டு காட்டியுள்ளது.

பொது பல சேனா கடந்த 15 ஆம் திகதி மேற்கொண்ட தாக்குதல்களை தடுக்க அரசாங்கம் தவறியமை தொடர்பில் சர்வதேச ரீதியில் எழுந்த கண்டனங்களை அடுத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சம்பவம் நடைபெற்ற பிரதேசங்களுக்கு விஜயம் செய்தார்.

அத்துடன் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை சட்டத்திற்கு முன் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் ஐ.நா மனித உரிமை பேரவையிடம் உறுதியளித்தது.

ஐ.நா மனித உரிமை பேரவையில் கடந்த மார்ச் 27 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய நாட்டின் இறுதிக்கட்டப் போரில் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்த இலங்கை அரசாங்கம் அனுமதி மறுத்திருந்த நிலையில், அரசாங்கத்தின் மேற்படி உறுதி மொழி பலத்த கேள்வியை எழுப்பியுள்ளது.

ஜனாதிபதியின் கவலை மற்றும் செயற்பாடுகளுக்கு சிறந்த காரணம் உள்ளது. இந்த வன்முறைகள் நேரடியாக அவரது குடும்ப உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டுள்ள சுற்றுலா மற்றும் வர்த்தக துறையின் வளர்ச்சியை அச்சுறுத்துகிறது.

முஸ்லிம் சிறுபான்மையினரை வன்முறைகளில் இருந்து பாதுகாப்பதில் அரசாங்கம் தோல்வியடைந்தமை தொடர்பில் இலங்கை ஊடகங்களில் அரிதான விமர்சனங்கள் வெளியிடப்பட்டன.

இலங்கையின் நீதியமைச்சரும நாட்டின் மூத்த முஸ்லிம் அமைச்சருமான ரவுப் ஹக்கீம், முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை தடுப்பதில் அரசாங்கம் தோல்வியடைந்ததாக பகிரங்கமாக புலம்பினார்.

இலங்கையின் பெரும்பான்மை பௌத்த மக்களில் பெரும்பாலானவர்கள் பொது பல சேனாவுடன் இணைந்து செயற்படவில்லை. இலங்கை இந்த விடயங்களை குணப்படுத்தும் தேவை உள்ளது.

இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையிலான வெறுப்புணர்வுகளை தூண்டும் குழுக்கள் மற்றும் தனிநபர்களுக்கு எதிராக செயற்படுமாறு ராஜபக்ஷ பொலிஸாருக்கு அண்மையில் வழங்கிய ஆலோசனைகளை வரவேற்கின்றோம்.

ஆனால் ஜனாதிபதி பொலிஸாருக்கு வழங்கிய ஆலோசனை அறிக்கையில் பொது பல சேனாவின் பெயரை குறிப்பிட்டு கூறவில்லை எனவும் அதில் கூறப்பட்டுள்ளது. (செ-11)

## கைக்குண்டு...

ஆயுதங்களைத் தம்வசம் வைத்திருப்பவர்கள் அவற்றினை இராணுவத்தினரிடம் அல்லது பொலிஸாரிடம் உடனடியாக ஒப்படைக்கும்படி, இராணுவத்தினரால் துண்டுப் பிரசுரங்கள் யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் அண்மையில் ஒட்டியிருந்த நிலையில் பல கைக்குண்டுகள் மீட்கப்பட்டு வருகின்றன. (செ-6)

## தமிழர்களின்...

ஏழைச் சிங்கள இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் மிக அதிக எண்ணிக்கையில் இராணுவத்தில் வேலை வழங்கப்பட்டதும் ஒரு காரணம் என்று பொருளியல் அறிஞர்கள் சிலர் குறிப்பிட்டுள்ளார்கள்.

தென் இலங்கையில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பது மானுடநேயத்தின்பாற்பட்டு வரவேற்கக்கூடிய ஒன்றே. ஆனால், இந்த இராணுவப் பொருளாதாரம் தான் செல்வச் செழிப்போடு வாழ்ந்த எமது மக்களின் இன்றைய இழிநிலைக்கும் வறுமைக்கும் காரணமாக அமைந்திருக்கிறது.

இதே இராணுவம்தான் போர்க் காலத்தில் எமது பொருளாதாரத்தை நிர்மூலமாக்கியது. போருக்குப் பிறகும் அதையேதான் செய்து கொண்டிருக்கிறது. போரின்போது அதிக எண்ணிக்கையில் உள்வாங்கப்பட்டு களமுனைகளில் நிறுத்தப்பட்டிருந்த இராணுவத்துக்கு இப்போது இருப்பதற்கு இடம் தேவையென்று எமது நிலங்கள் சுவீகரிக்கப்படுகின்றன. பொது மக்களின் காணிகளில் மாத்திரம் அல்லாமல் எமது விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான பண்ணைகளிலும் இராணுவம் நிலை கொண்டுள்ளது. வட்டக்கச்சியில் விவசாயப் பண்ணையில் இருக்கும் இராணுவம் வெளியேறுமாக இருந்தால் நூற்றுக்கணக்கான வறிய மக்களுக்கு அங்கு எம்மால் வேலை வழங்க முடியும்.

இராணுவத்தினரை ஓய்வில் வைத்திருக்க விரும்பாத அரசாங்கம இப்போது அவர்களைத் தொழில் முயற்சிகளிலும் ஈடுபடுத்தியுள்ளது. சந்தைகளில் எமது விவசாயிகளுக்குப் போட்டியாகப் படையினரும் தங்கள் உற்பத்திகளைக் கொண்டு வருகிறார்கள். இராணுவத்தினர் பிற தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவது எமது மக்களின் வருவாயைப் பாதிக்கின்ற ஒரு விடயமாகவே உள்ளது.

அரசு போருக்குப் பிறகு வடக்கிலும் கிழக்கிலும் எவ்வளவோ அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதாகக் கூறிவருகிறது. ஆனால், இலங்கையில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்களில் வடக்குக் கிழக்கிலேயே அதிகமானோர் இருக்கிறார்கள். இலங்கை அரசு மாதமொன்றுக்கு 3 ஆயிரத்து 28 ரூபாய்க்கும் குறைவாகச் சம்பாதிப்பவர்களையே வறுமைக் கோட்டுக்குக் கீழானவர்கள் என்று வகைப் படுத்தியிருக்கிறது. இதன்படி, நாளொன்றுக்கு 100 ரூபாய் சம்பாதிக்க முடியாதவர்கள் வடக்கிலும் கிழக்கிலுமே அதிகம்பேர் உள்ளார்கள். இது, அரசியல் சுதந்திரம் இல்லாமல் அபிவிருத்தியோ, அதனூடாகப் பொருளாதார மேம்பாடோ சாத்தியப்படாது என்பதையே காட்டுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாட்சியமளிப்போருக்கு எதி...

குழுவின் முன் சாட்சியமளிக்க செல்வதற்கான விமானப் பயணச்சீட்டுக்கள், தங்குமிட வசதிகள் மற்றும் விசேட கொடுப்பனவுகளை வழங்க சில அரச சார்பற்ற நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் விசாரணைக் குழுவினர் ஜெனிவா உட்பட உலகின் 8 நகரங்களில் சாட்சியங்களை பதிவு செய்ய தீர்மானித்துள்ளனர்.

இதனிடையே விசாரணைக் குழுவின் முன் பொய்ச் சாட்சி வழங்கி அரசியல் புகலிடம் பெற சில தரப்பினர் முயற்சித்து வருவதாகவும் இவ்வாறு நாட்டை காட்டிக் கொடுக்க நபர்களின் சொத்துக்களை கூட அரசுடமையாக்க முடியும் எனவும் திவயின குறிப்பிட்டுள்ளது.

இரண்டு முன்னாள் இராணுவ அதிகாரிகள் உட்பட 31 பேர் விசாரணைக் குழுவின் முன் சாட்சியமளிக்க உள்ளதாக தகவல்கள் தெரிவிப்பதாகவும் அந்த பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (செ-11)


### சிறுநீரகம் தேவை
B⁻ குருதியின சிறுநீரகம் தேவை
தொடர்பு :- 077 899 9994, 077 679 1028. (6955)

### A/L தமிழ் இறுதிக் கருத்தரங்கு
- எதிர்பார்ப்பு வினாவிடைகள்
- விடையளிப்பு முறைகள்
- வினாவிடைகள் 200/- மட்டும்

நாக.தமிழிந்திரன் (மதிப்பீட்டாளர்)
பகுதி II புதன் (02.07.2014) 9.00
Science Hall கன்னாதிட்டி
(0775478159) (6975)

### BOSS of Computer
எமது கணனி நிறுவனத்துக்கு வேலையாள் தேவை (பெண்)
கணனி அறிவு இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம் (பயிற்சிகள் வழங்கப்படும்)
தொடர்புகளுக்கு :- பொற்பதி வீதி தாயகம் முன்பாக 0774246150 (6982)


## ஆண்...

மரணம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை யாழ் ஊரணி குடியேற்றத் திட்டப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து இளம் குடும்பப்பெண்ணொருவரின் சடலத்தை நேற்றுக் காலை வல்வெட்டித்துறைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மேற்படி பெண்ணின் சடலம் ஊரணி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த மனோகரன் உஷா (வயது-33) என பொலிஸார் தெரிவித்தனர். (செ-6)


### FALC FRENCH LANGUAGE CENTRE
FRENCH CLASSES - பிரெஞ்சு வகுப்புகள்..
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
818 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்..
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100 % சித்தியடைந்துள்ளனர்......
ஆரம்பம்:05.07.14 Sat 10.30am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 04.07 Fri 3.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி.
021 320 2973
0779 789 456

### க.பொ.த உ/த கற்கும் போதே உங்கள் வளமான எதிர்காலத்தை திட்டமிடுங்கள்
CIMA / Chartered / HNDA ஒரு வருட Exemption உடன் வங்கி, நிதி கணக்காய்வு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு உத்தரவாதமான
aat வர்த்தக, பொருளாதார, கணக்கீட்டுக் கற்கை
aat SRI LANKA
A/L 2014 / 15 /16 மாணவர்களும் கற்கலாம்.



2011, 2012, 2013இல் aat கற்றவர்களே க.பொ.த. (உ/த) வர்த்தகப் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடமும், சிறப்புத் தேர்ச்சிகளும் பெற்றனர்.
மேலதிக விபரங்களுக்கு
Sikaram
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
www.sikaram.lk 077 36 16 798, 021 222 0011 (C-7774)

### BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
அனைத்துக் கற்கை நெறிகளும் விசேட கட்டணக்கழிவில் 25%

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிறபகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

இச்சலுகை June 15 முன் பதிபவர்களுக்கு மட்டுமே
Batch1 30.06.2014 @08.00am
Batch2 02.07.2014 @08.00am
Batch3 07.07.2014 @04.00pm
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074 (C-7756)

### Study in Australia / New Zealand
- Business Management
- Computing & IT
- Hospitality Management
- Engineering
- Travel & Tourism
- Quantity Surveying
- Cookery

# Entry with G.C.E O/L # Very low Course fee
# Part time / Paid internships available
## IELTS Not required
## Course fee - After the visa Approval
## Condition Apply

### Study in Ireland
- Business HR Management
- Hospitality Management
- Child Care & Health Care
- Computing &IT

# Entry with G.C.E O/L
# IELTS 3.5
# Very low Course fee (4,500£)
# Part time job available
# Easy PR Options
# UK Visa Refused students can apply

ICS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107-B 1/1,Galle Road, Colombo - 06
011 4343322 , 021 4926222 , 077 3013060 (C-7771)

### சிங்கர் தரும் இரட்டைச் சலுகைகள்
* விலைக்கழிவு
* வட்டியின்றிய இலகுதவணைக் கொடுப்பனவு

* பழைய ஒன்றுக்கு 10,000 ரூபா அல்லது 8,000 ரூபா விலைக்கழிவு
* வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு
35,999/= (Fully Automatic - 7 kg)
* 3,750 ரூபா விலைக்கழிவு
* வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு
21,249/= (Semi Automatic - 6 kg)
அனைத்து சலவை இயந்திரங்களுக்கும் 4 வருட உத்தரவாதம்
SAMSUNG சலவை இயந்திரங்களுக்கு 25000/= வரை மாற்று முறை விலைக்கழிவு

lenovo LEN - NB - - i3 - 4G Intel Core i3 (4th Gen) 15.6"HD Display, 4 GB, 500 GB DVD RW, Webcam, Wifi, B.T
12 மாதங்களுக்கு வட்டியின்றி.... ரூ. 88,899/=
காசுக் கொள்வனவுக்கு ரூ. 8,890/= விலைக்கழிவு
LEN - NB - i5 Intel Core i5 (4th Gen) 15.6"HD Display, 4 GB, 500 GB DVD RW, Webcam, Wifi, B.T
3 வருட உத்தரவாதம் இலவசம்
~~ரூ. 99,799/=~~ ரூ. 89,819/=
SINX - 243AT Intel celeron Dual Core 14" Display, 2 GB, 320 GB DVD RW, Wifi, Webcam,
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
காசுக் கொள்வனவுக்கு ரூ. 4,000/= விலைக்கழிவு ரூ. 49,999/=
கடனட்டைகளுக்கு 24 மாத வட்டியின்றிய கொடுப்பனவு வசதி (நிபந்தனைக்குட்பட்டது)

HP- i3-14NB Intel Core i3 (4th Gen) 14"HD LED Display, 2 GB, 500 GB HDD, DVD RW, Wifi, Webcam, ரூ. 64,999/=
HP- i3-15NB Intel Core i3 (4th Gen) 14"HD LED Display, 2 GB, 500 GB HDD, DVD RW, Wifi, Webcam, ரூ. 93,399/=
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
காசுக் கொள்வனவுக்கு ரூ. 13,400/= விலைக்கழிவு (C-7764)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 021 222 5408 | சுன்னாகம். 021 224 0555 | மானிப்பாய். 021 225 5343 | சங்கானை | சாவகச்சேரி | கொடிகாமம் | நெல்லியடி. 021 226 4937 | பருத்தித்துறை 021 226 3411 | கிளிநொச்சி 021 228 0199 | முல்லைத்தீவு 021 229 0180
www.singersl.com


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.